# திருக்கோயில்

பிப்ரவரி 1982 1-25 காசு





சென்னை திருவல்லிக்கேணி அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி திருக்கோயிலில், பேராசிரியர் திரு சி. ஜகந் நாதாச்சாரியார் அவர்கள் எழுதிய ''திருப்பாவை மூல பாட இலக்கிய ஆராய்ச்சி நூல்'' வெளியீட்டு விழா நிகழ்ந்தபோது, நமது அறநிலைய அமைச்சர் மாண்பு மிகு இராம. வீரப்பன் அவர்களும், ஆணையர் திரு. யு. சுப்பிரமணியன் அவர்களும், சென்னை உயர்நீதி மன்ற நீதிபதிகள் திரு. டி. என். சிங்காரவேலு அவர் களும், திரு. ச. சாமிக்கண்ணு அவர்களும், அறிஞர் திரு. தேவநாதன் அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தல்.



வடஆர்க்காடு மாவட்டம், இரத்தினகிரி அருள்மிகு பாலமுருகள் திருக்கோயிலில் திருமண மண்டபத் திறப்பு விழாவும், ஊனமுற்றோருக்கு உபகரணங்கள் வழங்கும் விழாவும் நிகழ்ந்தபோது, அறநிலைய அமைச்சர் மாண்புமிகு இராம. வீரப்பன் அவர்களும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத் தலைவர் திரு. ஏ. கே. அரங்க்நாதன் அவர்களும், ஆர்க்காடு திரு ஏ. எம். சேதுராமன், எம்.எல்.ஏ. அவர்களும், டாக்டர் திரு எம். நடராசன், டாக்டர் திரு. சி. குமரகுரு, தவத்திரு, பாலமுருகனடிமை சுவாமிகள் ஆகியோர் களும் கலந்துகொண்டனர்.

முகப்பு

திருக்கடவூர்
அருள்மிகு அபிராமியம்மை உடனுறை
அமுதகடேசுவரர் திருக்கோயில்
அழகிய கோபுரக் காட்சி.

# திருக்கோயில்

ஆசிரியர்: ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

மாலை : 24 | திருவள்ளுவர் ஆண்டு 2012, துன்மதி ஆண்டு-மாசி [பிப்ரவரி 1982] ரூ. 1-25 | மணி : 5

## சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்!

*திருக்கோயில்* திங்கள் இதழின் சந்தாதாரர் களாகச் சேர விருப்பமுள்ளவர்கள்,

ஆணையர் அவர்கள்,
அறநிலைய ஆட்சித்துறை,
சென்னை — 600 034

என்ற முகவரிக்கு மணியார்டர் மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

ஜனவரி முதல் டிசம்பர் வரை உள்ள காலம், சந்தா ஆண்டு எனக் கணக்கிடப்படும். இடைப்பட்ட காலத்தில் சந்தாதாரராக விரும்புவோர், முழு ஆண்டிற்குரிய சந்தாத் தொகை ரூ. 15—00 உடன், இடைப்பட்ட காலத்தில் உள்ள மாதங்களுக்கு, ஒரு இதழ் ரூ. 1—25 வீதம் சேர்த்துப் பணம் அனுப்பிச் ''சந்தாதாரர்'' ஆகலாம்.

தனிப்பட்ட 'சந்தாதாரர்கள்' ஒவ்வொருவரும் நேரடியாக, ஆணையர் அலுவலகத்திற்கே மணியார்டர் மூலம் பணம் அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

பழைய சந்தாதாரர்கள், கடிதம் எழுதும் பொழுதும், பணம் அனுப்பும்பொழுதும், தங்கள் சந்தா எண்ணையும் தவறாமல் தெரிவித்து உதவினால்தான், உடனுக்குடன் ஆவன செய்ய வசதியாக இருக்கும். புதிய சந்தாதாரர்கள் பணம் அனுப்பும்பொழுது, மணியார்டர் கூப்பனில், புதிய சந்தா என்பதைக் குறிப்பிடுமாறும், சரியான முழு முகவரியைப் பின்கோட் (Pin Code) எண்ணுடன் தெரிவிக்குமாறும் கேட்டுக்கொள்ளப் படுகிறது.

வெளிநாட்டுச் சந்தாதாரர்களின் முகவரிகள் அனைத்தும் செவ்வனே பதிவு செய்து வரிசைப் படுத்தப் பெற்று அவர்கள் எல்லோருக்கும் முறையாக இதழ்கள் அனுப்பப்படுகின்றன. தற்பொழுது வெளிநாட்டுச் சந்தாதாரர் ஒவ்வொருவருக்கும் ஆண்டு ஒன்றுக்கு அஞ்சல் செலவு மட்டுமே ரூ. 9—60 ஆகின்றது. ஆதலால் வெளிநாட்டுச் சந்தா, ரூ. 20—00-ல் இருந்து ரூ.25—00 ஆக ஜனவரி 1978 முதல் மாற்றி அமைக்கப் பட்டது. வெளிநாட்டுச் சந்தாதாரர்கள் அவ்வப் போது தங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளக் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

## பொருளடக்கம்

R. RAJU,
Dy Commissioner H.Qrs.
(Retired)
HRACE Administration Dept

சிவஞான சித்தியாரில் ஒரு சிறந்த செய்யுள்
—திரு. ந. ரா. முருகவேள்

திருக்கோழியூர்
—திரு. டாக்டர் இரா. கலைக் கோவன், திருச்சி

நீர்வண்ணன்
—திரு. பி. ப். அண்ணங்கராசார்ய சுவாமிகள்.

உமாபதி சிவாச்சாரியாரின் சதரத்தின சங்கிரகம்,
—பேராசிரியர் திரு. பெ. திருஞானசம்பந்தம்,

பிரார்த்தனையின் பெரும்பயன்!
—டாக்டர் திரு. இரத்தினவேல் சுப்பிரமணியம்

பதரிநாதன்—நரநாராயணன்
—பேராசிரியர் திரு. ந. சுப்புரெட்டியார்

மணிவாசகர் மணிமொழிகள்
பேராசிரியை டாக்டர் திருமதி கிருட்டிணா சஞ்சீவி

சீவன் முக்தர்கள்
—டாக்டர் திரு ஆர். கோபாலகிருஷ்ணன்

திருவடிப் பேறு
—டாக்டர் திருமதி இராதா தியாகராசன்

இதுதான் இந்து மதம்
—கவியோகி திரு சுத்தானந்த பாரதியார்

கம்பர் கவித்திறன்
—திரு நா. வேணுகோபால் நாயகர்

சைவாகமங்கள்
—திரு மு. அருணாசலம்

திருவாசகத்தில் அறிவியல்
—திரு ந. ரா. முருகவேள்.

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை வெளியீடு

# சிவஞான சித்தியாரில் ஒரு சிறந்த செய்யுள்

திரு ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

**முன்னுரை :**

அமிழ்தினும் இனிய நமது அருமைத் தமிழ் மொழியிலுள்ள தத்துவநூல்களுள், சிவ ஞானசித்தியார் மிகவும் தலைசிறந்த ஒன்றாய்த் திகழ்கின்றது. 'சிவத்துக்குமேல் இல்லை தெய்வம்; சிவஞான சித்திக்குமேல் இல்லை நூல்' என்பது பழமொழி. ''பாரிலுள்ள நூலெல்லாம் பார்த்தறியச் சித்தியிலே ஓர் விருத்தப் பாதி போதும்'' எனக் குருஞானசம்பந்தர் இந் நூலைப் புகழ்ந்து போற்றியுள்ளார்.

''பாதிவிருத் தத்[illegible]
பார்விருத்த [illegible]
சாதித்தார் பொ[illegible]
சாரும்நாள் எ[illegible]

என வேதாந்த சித்தாந்த சமரச ஞான வித்தகச் சான்றோராகிய தாயுமான சுவாமிகள் அருளிச் செய்திருப்பதும், சிவஞான சித்தியாரின் சிறப்பைச் செவ்விதின் உணர்த்தும்.

செர்மானிய நாட்டின் புகழ்பெற்ற மா பெரும் கவிஞராகிய, கெத்தே ( Goethe ) என்பவர், * காளிதாசர் இயற்றிய சாகுந்தலம் என்னும் வடமொழி நாடகத்தின் சிறப்பினைக் குறித்து, ''இளவேனிலின் எழில்மிக்க பல மலர்களையும், முதுவேனிலின் இனிய நல்ல கனி வகைகளையும், மற்றும் ஆன்மீக உணர்வைக் கவர்ந்து களிப்பித்து அரும்பெரும் விருந்தளிக்க வல்ல பொருள்கள் அனைத்தையும், இம்மண்ணுலகத்தையும் அவ்விண்ணுலகத்தையும் எல்லாம், நின்னால் ஒரே ஒரு பெயரிலேயே ஒன்று சேர்த்து அடக்கி இணைத்துக் கூற இயலுமா? இவைகள் அனைத்தையும் ஒருங்கே இணைத்துக் கூறும் வகையில், சகுந்தலை என்று யான் நினக்குப் பெயரிடுகின்றேன்'' என்று புகழ்ந்துள்ளார்.

சிறந்த நல்ல இலக்கியங்களாகத் திகழ்வன எல்லாவற்றிற்கும், இப் பாராட்டுரை பொருந்துவதொன்றாக விளங்குதலின், நாம் நம் சிவஞான சித்தியாருக்கும்கூட, இதனை ஏற்றிப் போற்றி உரைத்துக் கொண்டு பெரிதும் மகிழலாம்.

''இன்பொளிர் வேனிற் காலத்
தெழில்மலர் கனிகள் மற்றும்
மன்பெருங் கவர்ச்சி மிக்க
மகிழ்ச்சிநல் விருந்தூண், மண்விண்
என்பவை எலாம்சேர்ந்த ஒன்றைச்
'சித்தியார்' எனும்ஓர் பேரால்
நன்றுற நவில்வேன்! யாவும்
நனிஅதில் அடங்கும் நன்றே!''

—ந.ரா. முருகவேள்

**சித்தியார் செய்யுள் :**

இத்தகைய சிறந்த பெருநலம் வாய்ந்த சிவஞான சித்தியாரின்கண் வருகின்ற செய்யுள் ஒவ்வொன்றும், சொல்நயம், பொருளாழம், கருத்துச்சிறப்பு, கவிதையினிமை என்பன வற்றை யுடையதாகும்.

''புத்திமற் காரி யத்தாற்
பூதாதி; புருடன் தானும்
அத்தனு கரணம் பெற்றால்
அறிதலால்; அவற்றை மாயை
உய்த்திடும் அதனால்; மாயைக்கு
உணர்வொன்றும் இல்லை என்றே
வைத்திடும் அதனால்; எல்லாம்
வருவிப்பான் ஒருவன் வேண்டும்!''

என்பது, சிவஞான சித்தியாரின்கண் வரும் ஒரு செய்யுள். இஃது, உலகத்தை யெல்லாம்தோற்றுவிப்பதற்கு நிமித்த காரணனாகிய கடவுள் ஒருவன் இருத்தல் வேண்டும் என்பதனை வலியுறுத்துகின்றது. ''நாத்திகமத கண்டனம் செய்து உலகத்திற்கு நிமித்த காரணன் ஒருவன் உளன் ஆதலை நிறுத்த எழுந்தது இத் திருவிருத்தம்.'' இதன் பொழிப்புப் பொருள் பின்வருமாறு:

''குடம் குயவனால் செய்யப்படும் காரியம் ஆனாற்போல, பூதம் முதலிய பிரபஞ்சமெல்லாம், ஒரு சேதனப் பொருளால் செய்யப்படும் காரியமே ஆகலானும்; உயிரானது சேதனப் பொருளாயினும் அப்பூதம் முதலிய வற்றாலாகிய தனுகரணாதிகளைப் பெற்ற வழியே அறிதலானும்; அவற்றிற்கு முதற் காரணமாய்ச் செலுத்திநிற்கும் மாயைக்கு உணர்வு சிறிதும் இல்லையென்று நூல்கள் தெளிவுறக் கூறுதலானும்; பாரிசேட அளவையான், இவ்வனைத்தினும் வேறாய் மாயையின்நின்றும் பூதம் முதலிய பிரபஞ்சம் எல்லாவற்றையும் தோற்றுவிப்பான் ஆகிய கடவுள் இன்றியமையாது வேண்டப்படுவன்''.

என்பது, சிவஞானசுவாமிகள், இச்செய்யுட்கு எழுதியுள்ள திரண்ட பொழிப்புரை.

**சிவஞான சுவாமிகள் :**

இங்ஙனம் பொருள் பயக்கும் தன்மையிலும், சைவசித்தாந்தத் தத்துவக் கொள்கையினை விளக்கி நிறுவும் முறையிலும், அமைந்துள்ள இச்செய்யுளுக்கே, வேறுவகைகளிலும் வேறு பிறகொள்கைகளுக்கு இயையப் பொருள் கொள்ளலாம், என்று கூறி, அவ்வகையில் அறிஞர் அனைவரும் வியந்து நிற்கும்வண்ணம், உலகாயதம் பௌத்தம் சாங்கியம் என்னும் சமயக் கொள்கைகளை ஒட்டிச் சிவஞானசுவாமிகள் ஓரிடத்தில் உரைசெய்து காட்டுகின்றார். ''வல்லான் வகுத்ததே வாய்க்கால்'' என்னும் பழமொழிக்கு இயைய, எதனையும் நிறுக்கவும் மறுக்கவும் வல்ல பெரும் புலமை நலத்தால்

---

* ''Wouldst thou the young year's blossoms
and the fruits of its decline,
And all by which the soul is charmed,
enraptured, feasted, fed,
Would'st thou the Earth and Heaven itself
in one sole name combine?
I name thee, O Sakunthala! and all
at once is said''
—G. W. Goethe

சுவாமிகள் செய்து காட்டியிருக்கும் உரைத் திறம், அறிஞர்களின் சிந்தனைக்கு விருந்தாகத் திகழ்கின்றது.

''ஒரு நூலுக்கு உரை செய்வோர், நூலாசிரியரின் கருத்துணர்ந்து, அவர்கள் வழங்கும் சொற்பொருள் இன்னது எனத் துணிதற்குரிய கருவிகளைக்கொண்டு, ஐயமும் மருட்கையும் நிகழாமல் செவ்விதின் உரை இயற்றுதல் வேண்டும். அவ்வாறின்றித் தத்தம் மனம் போனபடியெல்லாம் பொருள் செய்தல் கூடாது'' என்பதனை வற்புறுத்தி அறிவுறுத்துதற்பொருட்டே, சுவாமிகள் இங்ஙனம் சைவ சித்தாந்த தத்துவச் சார்பே உடைய இவ்வழகிய இனிய செய்யுளுக்கு, வெவ்வேறு வகையான சமயக் கொள்கைகளுக்கு இயையப் பல்வேறுவகையில் பொருள் செய்து காட்டுகின்றார். ''வல்லவன் ஒருவனுக்குப் புல்லும் ஆயுதம்'' என்னும் பழமொழிக்கு ஏற்பத் தம்முடைய அறிவாற்றல் நலங்களெல்லாம் பெரிதும் விளங்கித் திகழ, அவர் எழுதிக் காட்டியுள்ள கருத்தினை, நாம் இங்குச் சொற்சொல்லாகப் பிரித்துத் தெளிவுற விரித்துரைத்து உணர்ந்துகொண்டு முறையே காண்போம்.

**உலகாயதம் :**

காணப்படுகின்ற உலகம் மட்டுமே உள்ளது. நிலம் நீர் தீ காற்று என்னும் நான்கு பூதங்களே உள்ளன. அவற்றின் சேர்க்கையால் ஓர் அறிவு நிகழும். அது பூதம் எனப்படும் இயற்கைப் பொருளின் செயலால் நிகழ்வது. கடவுள் என்றொரு பொருள் இல்லை. உடலின் வேறாக உயிர் என்பதும் இல்லை. உடம்பே கண் காது முதலிய கருவிகளைக் கொண்டு பொருள்களை அறிகின்றது. பெண் இன்பமே மேலான இன்பம். இதனை விளைவிக்கும் மன்மதனே கடவுள். உலகிற்கு முதற் காரணமாகக் கூறப்பெறும் மாயை என்பதொரு பொருள் உண்டு என்பதற்குச் சான்று எதுவும் இல்லை. நிலம் நீர் தீ முதலியனவே, உடல் முதலிய கருவிகளை மயக்குகின்றன. வியாழன் என்னும் பிருகற்பதியே, இவ்வுலகாயதக் கொள்கையினை விளக்கிய ஆசிரியன். இவ்வுலகாயதக் கொள்கைகளுக்குச் சிறிதும் பிறழாமலும், அதன் கொள்கைகளுக்கே முற்றும் பொருந்தும் படியும், சுவாமிகள் பின்வருமாறு உரைக் குறிப்புக்கள் தருகின்றார்.

*புத்திமத்—அறிவையுடைய உடலானது*
*காரியத்தால்—நான்கு பூதங்களின் கூட்டமாகிய காரியமே ஆதலாலும்;*
*புருடன்தானும்—பூதங்களுக்கு நிமித்தகாரணனாக உளன் எனப் பிறர் கூறும் முதல்வனும் கூட*
*அத்தனு—அந்த உடலையும்*
*கரணம்—கண் காது முதலிய பொறிகளையும்*
*பெற்றால்—துணையாகப் பெற்ற வழியே*
*அறிதலால்—அறியும் திறனை அடைந்து இயங்குதலாலும்;*
*அவற்றை—அவ்வுடல் கருவி முதலியவற்றை*
*மதனால்—மன்மத பகவானால்*
*மாயை உய்த்திடும்—மாயையானது காம நுகர்ச்சிகளின் மயக்கத்தின்கண் செலுத்தி நிற்கும் ஆதலாலும்;*
*மாயைக்கு—பிற சமயத்தவர் கூறும் மாயை என்னும் ஒரு தத்துவப் பொருள் இருத்தற்கு*
*உணர்வு ஒன்றும்—இல்லை உணர்விற்கு ஏதுவாகிய சான்று எதுவும் - கிடையாது,*
*என்றே—என்றுதான்*
*வைத்திடும் அதனால்—எங்களுடைய உலகாயத சமயத்துக்குரிய நூல்கள் வரையறுத்து வைத்துக் கூறியிருக்கின்றன ஆதலாலும்*
*எல்லாம் வருவிப்பான்—உடல் கருவிகள் எல்லாவற்றையும் இயக்கும் பொருட்டு,*
*பூதாதி—அந்தப் பூதமாகிய முதற் காரணத்தையே*
*வேண்டும்—விரும்புவான்*
*ஒருவன்—ஒப்பற்ற எங்கள் வியாழ பகவான்!*

உலகாயத மதச் சார்பான இவ்வுரையின் கண், பூதாதி-புத்திமத் - புருடன்-மதனால்-மாயை-உணர்வு - வைத்திடும் - வேண்டும்-ஒருவன் என்னும் சொற்களுக்கு, அம்மதக் கொள்கையிற் பிறழாதவாறு சுவாமிகள் உரை கூறியிருக்கும் திறம் உணரற்பாலது.

**புத்தமதம் :**

புத்தனே கடவுள், ஞானமே எல்லாவற்றிற்கும் காரணம். புறப்பொருளாகிய பூதம் முதலிய உலகமும், அவற்றை அறிபவனும் ஞானத்தின் வேறல்ல. ஞானத்தினுடைய ஆற்றலாலேயே யாவும் நிகழ்கின்றன. வடிவமற்ற ஞானத்தின் அனுகரணத்தாலேயே கடம் படம் முதலிய வடிவங்கள் தோன்றுகின்றன. அங்ஙனம் தோன்றும் வடிவங்கள் வெறும்மயக்கமே. அஃது அஞ்ஞானத்தின் விளைவேயாகும். உலகிற்கு முதற் காரணமாகச் சில சமயத்தோர் கூறும் மாயை என்னும் தத்துவப் பொருளின் உண்மைக்குப் பிரமாணம் எதுவும் இல்லை. உலகப் பொருள்களின் வடிவங்கள் எல்லாம் புத்தியாகிய ஞானத்தின் செயலாலேயே தோன்றுகின்றன என்பது, புத்தரில் ஒரு சாரார் கொள்கை. அதற்கேற்பவும் ஒருவாறு இச் செய்யுட்குப் பொருள் கொள்ளலாம்.

*பூதாதி—பூதம் முதலியனவாகிய உலகமும்*
*புருடன் தானும்—புருடன் எனப்படும் அறிபவனும்*
*புத்தி—ஞானத்தினது*
*மற்காரியத்தால்—பலத்த காரியத்தின் விளைவேயாதலால்*
*அத்து—அந்த ஞானத்தினது*
*அனுகரணம் பெற்றால்—அனுகரித்தலைப் பெற்ற பொழுதுதான்*
*அறிதலால்—கடவடிவம் படவடிவமாய் அறிவு நிகழ்தலால்*
*அவற்றை—அந்தக் கடம் படம் முதலிய வடிவங்களை*
*மாயை—அஞ்ஞானமாகிய மயக்கம்*
*உய்த்திடும் அதனால்—வடிவம் அற்ற ஞானத்திற்கு உண்டாக்குவதனால்*
*மாயைக்கு—உலகத்திற்கு முதற்காரணம் எனப் பிறர்கூறும் மாயை என்னும் தத்துவம் உண்மையை,*
*உணர்வு—உணர்தற்கு ஏதுவாகிய சான்று*
*இல்லையென்றே—எதுவும் கிடையாது என்று வலியுறுத்தியே*

வைத்திடும் அதனால்—எங்கள் சமய நூலாகிய பிடகாகமம் கூறிவைத்திருப்பத னால்,

எல்லாம் வருவிப்பான்—உலகப் பொருள்களின் வடி வங்களையெல்லாம் தோற்றுவித் தற் பொருட்டு

வேண்டும்—அப்புத்தியாகிய ஞானத்தையே விரும்பு வான்,

ஒருவன்—ஒப்பற்ற எங்கள் புத்தக் கடவுள்!

புத்த சமயக் கொள்கைக்கு ஏற்பப் பொருள் கொண்டு, இவ்வுரையில் 'புத்தி-மற்காரியம்-அத்து-அனுகரணம்' முதலிய தொடர்களுக்குக் கூறப்பட்டிருக்கும் பொருள், நுனித்து நோக்கி உணர்ந்து மகிழத்தக்கது.

**சாங்கியமதம் :**

இனி இச்செய்யுளுக்குச் சாங்கிய மதத் திற்கு ஏற்பவும் பொருள் கொள்ளக்கூடும். நியாயம் வைசேடிகம் சாங்கியம் யோகம் மீமாம்சை வேதாந்தம் என்பவை, அறுவகைச் சமயம் (ஷட் தரிசனம்) என வழங்கப்படும். சாங்கிய மதக் கொள்கையை விளக்கியவர் கபிலர் என்னும் முனிவர். உலகத்தைப் பகுத் தறிந்து 25 என்னும் சங்கியைக்குள் அடக்கியத னால், இதற்குச் சாங்கியம் என்னும் பெயர் அமைந்தது. ஆகாயத்தின் இருந்தே ஏனைய நான்கு பூதங்களும் தோன்றின. ஆகாயத்திற்குச் சலனமும் வேறுபாடும் இல்லை. அதுபோல விகாரமும் பற்றும் அற்று ஞானமாத்திரையாய் நிற்பது புருடன் என்னும் தத்துவம். புத்தி தத்துவம் என்பது ஒன்றன் காரியமே. புத்தி யின் காரியம் ஆகிய தனுகரணங்களை, முன் னணியில் இருத்தல் ஆகிய சம்பந்தத்தாற் பெற்றவழியே, புருடன் என்னும் தத்துவத் திற்கு அறிவு ஏற்படும். புத்தி முதலிய தத்து வங்கள் பிரகிருதிமாயையில் இருந்து தோன்று கிறது. பிரகிருதிமாயைக்குக் கிரியையுண்டு. ஆனால் ஞானம் இல்லை. பிரபஞ்சத்தின் தோற்றத்திற்குப் பிரகிருதிமாயை மூல கார ணம். புத்தி தத்துவத்திற்கும், மூலப்பிரகிருதிக் கும், சுதந்திர அறிவு இல்லை என்பது, சாங்கிய மதக் கொள்கை. இதற்கு இயையுமாறும் இச் செய்யுளுக்குப் பொருள்கொள்ளலாம்.

*புத்திமன்—புத்தி தத்துவமானது*

*காரியத்தால்—ஒன்றன் காரியம் ஆதலினால்*

*பூதாதி—ஐம்பூதங்களுள் தோற்றமுறையில் முற் பட்டதாகிய ஆகாயம் (போல),*

*புருடன்தானும்—விகாரமின்றி ஒட்டற்று ஞான மாத்திரையாய் நிற்கும் அந்தப் புருட தத்துவமும்,*

*அத் தனுகரணம் பெற்றால்—அந்தப் புத்தியின் காரியமாகிய தனுகரணங்களைச் சந்நிதி மாத்திரமாகிய சம்பந்தத் தாற் பெற்றவழியே,*

*அறிதலால்—அறியும் திறனை அடையும் ஆதலால்,*

*அவற்றை—அந்த 'மகத்' என்பன முதலாகிய தத் துவப் பிரபஞ்சங்கள் அனைத்தை யும்,*

*மாயை —மூலப் பகுதி என்னும் பிரகிருதி மாயை யானது*

*உய்த்திடும் அதனால்—தோற்றுவிக்கும் ஆதலால்*

*மாயைக்கு—அந்தப் பிரகிருதி மாயைக்கு*

*உணர்வு ஒன்றும்—ஞானம் கிரியை என்னும் இரண் டனுள் ஞானம் ஆகிய ஒன்றுமட்டுமே*

*இல்லை —கிடையாது*

*என்றே —என்று கூறியே*

*வைத்திடும் அதனால்—சாங்கியமதத்துக்குரிய எங்கள் நூல்கள் வரையறை செய்து வைத்திருப்பதனால்*

*எல்லாம் —'மகத்' என்னும் தத்துவம் முதலிய பிரபஞ்சம் அனைத்தையும்*

*வருவிப்பான்—தோற்றுவித்தற் பொருட்டு*

*வேண்டும் —பிரகிருதி மாயையே விரும்புவான்,*

*ஒருவன் —ஒப்பற்ற எங்கள் கபில முனிவன்!*

சாங்கிய மதக் கொள்கையின்படி செய் யப்பட்ட இவ்வுரையில், புத்திமன் - பூதாதி-புருடன்-மாயை -உணர்வு-ஒன்றும் என்னும் தொடர்களுக்குக் கூறப்பெற்ற பொருட்டிறம் கருதியுணரற்பாலது.

**முடிவுரை :**

ஆசிரியர் சிவஞான சுவாமிகள், இங்ஙனம் ஒரு செய்யுட்கே பல சமயக் கொள்கைகட்கு ஏற்ப, முறைப்படி பொருள் விரித்து விளக்கிக் காட்டியருளிய திறம், அவர்தம் அரியதொரு நுண்மாண் நுழைபுலமை நலத்திற்குச் சிறந்த இனிய எடுத்துக் காட்டாகும். தமது நுண் மாண் நுழைபுலனால் (புத்திசாமர்த்தியத்தால்), இங்ஙனம் சிவஞான சுவாமிகள் பொருளுரைத் துக் காட்டினராயினும்,

''எந்நூற்கும் உபக்கிரமம் (தொடக்கம்), உப சங்காரம் (முடிவு), அப்பியாசம் (நூலிற் பெரிதும் பயின்று வரும் தன்மை), அபூர்வதை (பிற நூல் களிற் கூறப்பெறாத சிறந்த பொருளாதல்), அருத்த வாதம் (புனைந்துரை வகையாற் சிறந்த பொருளை யுணர்த்துதல்), உபபத்தி (அறிவிற்கு மிகவும் பொருந்துதல்) முதலிய பலகை நெறிமுறைக் கருவி களைக்கொண்டு, அவற்றுக்கு விரோதம் வராத படியே வியாக்கியானம் பண்ணல் வேண்டும் என்பது சகலமத சம்மதம். ஆதலின், அது செய்தலை ஒழித்துத் தாம்தாம் கருதும் பிரயோசனங்களுக்கு இணங்க வியாக்கியானம் செய்தல் கூடாது''

என்பது, சிவஞான சுவாமிகள் வலியுறுத்தி அறி வுறுத்தும் சிறந்த கருத்தாகும். இங்ஙனம் நூல் களுக்குப் பொருள் விளக்கி உரை வரையும் திறத்தினைச் செவ்விதில் தெளிவுறுத்தி யருளிய சிவஞானசுவாமிகளின் சிறப்பினை, அறிந்து அளவிட்டுரைத்தல் நம்மனோர்க்கு இயலுமோ? ''ஆர் அறிவார் இந்த அகலமும் நீளமும்'' எனத் திருமூலர் அருளிச் செய்ததற்கு ஏற்ப, நமது அருமைத் தமிழ் மொழியின் ஆழமும் அகலமும் அறிய விரும்புவோர் அனைவரும், சீரிய நுண் மாண் நுழைபுலம் சான்ற நமது சிவஞான சுவாமிகள் போன்ற செந்தமிழ்ப் பெருஞ்சான் றோர்களின் சிறந்த நூல்களைப் பயின்றினிது உய்ய முற்படுவார்களாக!

O-o-o-o-o-o-o-o-o-o-O

# திருக்கோழியூர்

[திரு. டாக்டர். இரா. கலைக்கோவன், திருச்சி]

R. RAJU,
Dy Commissioner H.Qrs.
(Retired)
HR&CE Admn. Initiation Dept

வைணவர்களின் வழிபாட்டுக்குரிய நூற்றெட்டுத் திருப்பதிகளுள் ஒன்றென வைத்துப் போற்றப்படுவது திருக்கோழியூர். இத்தலம் உறையூர், உறந்தை என்று பல பெயர்களால் அறியப்படும். இன்றைய திருச்சிராப்பள்ளி நகராட்சி எல்லைக்குள், பழைய சிறப்புக்களை இழந்த நிலையில், ஒரு குடியிருப்புப் பகுதியாக இவ்வூர் விளங்குகின்றது. காவிரியின் தென்கரையில் அமைந்துள்ள இத்தலத்தில்தான் திருமங்கையாழ்வார் பாடியருளிய அழகிய மணவாளப் பெருமாளின் ஆலயம், 'அருள்மிகு கமலவல்லி நாச்சியார் திருக்கோயில்' என்ற பெயரில் அமைந்துள்ளது.

கோயில் ஊருக்கு நடுவில் வடக்குப்பார்த்த ஒரே வாசலுடன் அமைந்துள்ளது. ஐந்துமாடக் கோபுரத்துடன் கூடிய இந்த நுழைவாயில் ஆரியபட்டாள் வாசல் என்றழைக்கப்படுகின் கின்றது. கோபுரத்தின் சிற்பங்கள் சுதையாலும் செங்கல்லாலும் ஆனவை. அடித்தளச் சிற்பங்களுள் கிழக்கிலும் மேற்கிலும் சில அழகிய சிற்பங்கள் அழிந்த நிலையில் உள்ளன.

கோயிலுக்குள் நுழைந்ததும் ஒரு நாற்கால் மண்டபமும் சின்ன அநுமார் திருமுன்னும் உள்ளன. மண்டபத்தின் இடப்புறப் பகுதியில், மதிலையொட்டிச் சேனை முதலியாருக்கென்று ஒரு உட்கோயில் உள்ளது. இதில் மூலவராகச் சேனை முதலியார் எழுந்தருளியுள்ளார். இதையொட்டி, வடகிழக்கு மூலையில் இக்கோயிலுக்குரிய பொருட்கள் வைக்கப்பட்டுள்ள அறையும் அதற்கு மேற்கில், அறநிலையத் துறையினரின் அலுவலகமும் உள்ளன.

கிழக்கு மதிலையொட்டி நம்மாழ்வார், இராமாநுசர், திருப்பாணாழ்வார் என்ற வைணவ சமயப் பெரியவர்களுக்காகத் தனித் தனியே உட்கோயில்கள் அமைந்துள்ளன. நம்மாழ்வார் கோயிலுள், ஆழ்வார் பெருமான் மூலவராகவும் உற்சவராகவும் எழுந்தருளியுள்ளார். இந்தக் கருவறையைச் சுற்றிலும் சுவர்களில் திருமாலின் தோற்றப் பெருமைகள், ஆழ்வார்களின், ஆச்சாரியார்களின் சிறப்பமைந்த நிகழ்ச்சிகள் முதலியன அழகான வண்ண ஓவியங்களாகத் தீட்டப்பட்டுள்ளன. இங்குள்ள தூண்களில் காணப்படும் சிற்பங்கள் சிதைந்து காணப்படுகின்றன. மிக அண்மைக் காலத்தனவாகவே இருந்தபோதும், சரியான பாதுகாப்பின்மையும், பொதுமக்களின் இழிசெயல்களும் இச்சிற்பங்களைப் பெரிதும் பாதித்துள்ளன. ஓவியங்களில்கூடச் சில சிறுவர்கள் தங்கள் திருப்பெயர்களைப் பொறித்துத் தங்கள் அறியாமைக்கு விளம்பரம் தேடியுள்ளனர்.

நம்மாழ்வார் கோயிலுக்குத் தெற்கில் உடையவர் இராமாநுசரின் கோயில் உள்ளது. இங்கு மூலவராகவும் உற்சவராகவும் இராமாநுசப் பெருமான் வீற்றுள்ளார். உறையூரில் தோன்றி உறையூருக்கே பெருமை தேடித்தந்த திருப்பாணாழ்வாரின் கோயில், உடையவரின் கோயிலையொட்டி அமைந்துள்ளது. இப்பெருமானின் கருவறையை ஒட்டிய திருச்சுற்றில், மேற்குப் பகுதியில் ஒரு அழகிய கண்ணாடிஅறை அமைக்கப்பட்டுள்ளது. இந்த அறையில் கார்த்திகை நாளில் ஆழ்வாரை எழுந்தருள வைப்பது மரபு. இம்மூன்று உட்கோயில்களின் கருவறைகளும் தனித்தனியே விமானங்களை உடையவை. இவ்விமானங்களின் அமைப்பினைக் கோயிலின் மேல்தளத்தில் சென்று பார்க்க வசதியாகப் படிக்கட்டுகள் அமைக்கப்பட்டுள்ளன. இவ் விமானங்களும் தாயார் கருவறையின் விமானமும் சுதை, செங்கல் இவற்றால் ஆன சிற்பங்களுடன் அமைக்கப்பட்டுள்ளன.

திருப்பாணாழ்வார் கோயிலை அடுத்துக் கிழக்குப் பகுதியில் கமலவல்லி நாச்சியார் தோன்றியதாகக் கூறப்படும் தெப்பக்குளம் அமைந்துள்ளது. மிகவும் ஆழமான இக்குளத்தில்தான் தாயாருக்குத் தெப்ப உற்சவம் நடக்கிறது. இதன் கிழக்குப் பகுதியில் செடிகள் காடாய் மண்டியுள்ளன. கோயில் மதிலுக்கு உள்ளே கிழக்கிலும் மேற்கிலும் தெற்கிலும் பரந்து அமைந்துள்ள நந்தவனத்தில் இது ஒரு பகுதி. கோயிலின் தென்கிழக்கு மூலையில், குளத்தின் தென்கரையில் மடைப்பள்ளியும், நந்தவனத்தின் தென்மேற்கு மூலையில் வசந்த மண்டபமும் அமைந்துள்ளன. இம்மண்டபத்தில்தான் வைகாசி அல்லது ஆனித்திங்களில் கமலவல்லித் தாயாருக்கு ஏழு நாட்கள் வசந்த உற்சவம் நடைபெறுகின்றது.

வெளித்திருச்சுற்றில் குளத்துக்கு அருகில் வெள்ளிக்கிழமை மண்டபம் என்ற பெயரில் மரத்தினாலான ஒரு மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. இது அண்மைக் காலத்திய அமைப்பாகும். இங்கு வெள்ளிக்கிழமைகளில் நாச்சியார் எழுந்தருளுவது வழக்கம். வெளிச் சுற்றின் தெற்குப் பகுதியில் தூண்கள் பாலுணர்வுச் சிற்பங்களுடன் அமைந்துள்ளன. இச் சுற்றின் தென்மேற்கு மூலையில் ஊஞ்சல் மண்ட

பம் உள்ளது. இது கருங்கல் பணி. இதன் மேற்கு மூலையில் தூணில் அமைந்திருக்கும் பிள்ளையாரின் புடைப்புச் சிற்பத்துக்குத் தனியே சுவரெழுப்பி ஒரு பெட்டகம்போல அமைத்து வழிபாடு நடைபெற்று வருகின்றது. இந்தச் சிறு பெட்டகத்துக்குள் எட்டிப் பார்த்தால்தான் தெற்கு நோக்கி எழுந்தருளியிருக்கும் பிள்ளையாரின் திருவுருவம் தெரியும்.

மேற்குத் திருச்சுற்றில் யாகசாலையும், கோயிலின் மேல்தளத்துக்குச் செல்லும் படிக் கட்டுகளும், கிணறும், சொர்க்கவாசலும் தெப்ப உற்சவ மண்டபமும், கொட்டகைத் திருநாள் மண்டபமும் அமைந்துள்ளன. தெப்ப உற்சவ மண்டபம், வெள்ளிக்கிழமை மண்டபத்தைப் போலவே சிறிய திண்ணையின் மீது அமைக்கப்பட்ட மர மண்டபமாகும். தெப்ப மண்டபத்துக்கு வடக்கிலும் கோயிலின் வட மேற்கு மூலையிலும் உள்ள திறந்த வெளியில் அமைக்கப்பட்டிருக்கும் நாற்கால் மண்டபமே கொட்டகைத் திருநாள் மண்டபமாகும். இம் மண்டபத்தைச் சுற்றிக் கொட்டகை போட்டு, அழகு செய்து, திருவாய்மொழித் திருநாள் என்னும் 'இரவுப்பத்து' நடைபெறுகின்றது.

கோயிலின் நடுநாயகமாகக் கமலவல்லி அன்னையின் கருவறையும், முன் மண்டபமும், கருடன் திருமுன்னும் உள்ளன. முன் மண்டபத்திற்குள் நுழையக் கிழக்கிலும் மேற்கிலும் வாசல்கள் உள்ளன. கிழக்கு வாசலை வாயிற் காப்போர் காவல் செய்கின்றனர். இந்த வாயில் வழியே தான் அருள்மிகு நாச்சியார் வருவதும் செல்வதும் வழக்கமாய் உள்ளது. இம்மண்டபத்தின் தூண் அமைப்புக்கள் மிக அழகாய்ச் சிற்ப வேலைப்பாடுகளுடன் அமைக்கப்பட்டுள்ளன. ஒரு பெருந்தூணும் இரண்டு நீண்ட மெல்லிய தூண்களும் இணைந்தே ஒவ்வொரு தூணும் அமைந்துள்ளது. இப்படி அமைந்துள்ள தூண்களுள் ஒன்றில் தெற்குப் பார்த்த நிலையில் அனுமார் நின்ற கோலத்தில் காட்சி தருகிறார். வலக்கை உடைந்திருக்கின்றது. காலும் சேதப்படுத்தப்பட்டுள்ளது. நீண்ட மெல்லிய தூண்களின் அமைப்பு பிற்காலச் சிற்ப அமைதியைக் கண்முன்னர் நிறுத்துகின்றன. கிழக்கு மூலையில் உள்ள ஒரு தூணில் நம்மாழ்வார், திருப்பாணாழ்வார், இராமாநுசர் வடிவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இம்மண்டபத்தின் வடக்கில் நடுநாயகமாகக் கருடன் திருமுன் தெற்கு நோக்கி அமைந்துள்ளது. முன் மண்டபத்தின் தெற்கு வாசலில் நுழைந்தால் மகாமண்டபத்துக்குள் வரலாம். இதில் தாயாருக்கும் பெருமாளுக்கும் 'தளிகை' இட ஒரு அமுது பாறை உள்ளது. இந்த மண்டபத்திலிருந்து உள்சென்றால் அர்த்த மண்டபமும் கருவறையும் உள்ளன.

பெருமாள், அழகிய மணவாளக் கோலத்தில் மூலவராய்க் காட்சி தருகின்றார். ஒரு கை, சக்கரத்தை எப்போதும் பயன்படுத்தக்கூடிய நிலையில் கொண்டுள்ளது. இன்னொரு கையில் சங்கும், மற்றொரு கையில் கதையும் உள்ளன. வலக்கை, 'யாமிருக்க அஞ்சுவதேன்' என்பது போல் காப்புநிலை காட்டி அருள் செய்கிறது. நாச்சியாரும் மூலவராய்ப் பெருமாளுக்கு வலப் பக்கத்தில் அமர்ந்துள்ளார். பெருமாள் நின்று கொண்டும் தாயார் அமர்ந்து கொண்டும்காட்சி தரும் இந்நிலையைக் 'கல்யாண அவசர சேவை' என்கிறார்கள். மூலவருக்கு முன்புள்ள அரியணையில், கமலவல்லித் தாயார் உற்சவராய், வீற்றிருந்த கோலத்தில் காட்சி தருகின்றார்.

மகாமண்டபம், அர்த்த மண்டபம் இவற்றின் வெளிப்புறச் சுவர்களில் 'கோஷ்ட பஞ்சரங்கள்' இடம் பெற்றுள்ளன. மேற்குப்புறச் சுவற்றில் 'புண்டரீக ரட்சகர்' கோலத்தில் திருமாலின்சிதைந்த சிற்பம்காணப்படுகின்றது. அதையும் சுவர் கட்டி மறைத்துப் பெட்டகக் கோயிலாய்ப் பிற்காலத்தில் மாற்றியிருக்கிறார்கள். இக்கோயிலின் கல் தூண்களிலும் வெள்ளிக்கிழமை மண்டபத்திலும் அமைந்துள்ள சிற்பங்களுள் பல பாலுணர்வுச் சிற்பங்களாக இருப்பது குறிப்பிடத்தக்கது. காதல் திருமணம் நடந்த இடமென்று தலபுராணம் கூறுவதால் வாழ்வியல் இன்பத்தை விளக்கும் சிற்பங்களையே சிற்பிகள் விரும்பி அமைத்தனர் போலும்!

இக்கோயிலைப் பற்றிய கதையொன்று உண்டு. இலக்குமி தேவியே கமலவல்லி நாச்சியாய் உறையூரில் ஒரு தாமரை ஓடையில் பெண் குழந்தையாய்த் தோன்ற, குழந்தையில்லாத நந்த சோழன் என்ற ஒரு மன்னன் அப்பிள்ளையை எடுத்து, கமலவல்லி எனப் பெயரிட்டு வளர்த்து வந்தான். வயது வந்த நிலையில் அப்பெண் தன் தோழியருடன் நந்தவனத்தில் பூக்கொய்து கொண்டிருந்தபோது, அங்கு வந்த திருவரங்கநாதனைக் கண்டு காதலுற்று நிறையழிந்தாள். சோழமன்னன் தன்மகள்நிலையறிந்து திருவரங்கப் பெருமானை அவளுக்கு மணம் செய்வித்து அனுப்பினான். கமலவல்லி திருவரங்கம் கோயிலில் வந்து திருமணத் தூணுக்குள் புகுந்ததும் அரங்கநாதர் திருவடிகளில் ஐக்கியமாகி மறைந்தாள். கமலவல்லியுடன் வந்த தோழியரின் வழியினர், திருவரங்கக் கோயிலில் 'உறையூர் வல்லிக் கூட்டத்தார்' என்ற பெயரில் கைங்கர்யம் செய்து வருகிறார்கள். கமலவல்லி மறைந்து போனது கண்ட சோழன் தன் சொத்துக்களைத் திருவரங்கக் கோயிலுக்கு எழுதி வைத்தான். தன் மகளுக்கும் அழகிய மணவாளனுக்கும் உறையூரில் ஒரு கோயில் கட்டினான். ஒருகாலத்தில் உறையூரில் மண்மாரி பெய்தபோது உறையூரே மண்மூடிப்போய், இக்கோயிலும் அழிந்து போயிற்று. பின்னர் வந்த சோழன் ஒருவன் உறையூரில் கோயில் கட்டிப் பெருமாளையும் நாச்சியாரையும் அங்கு எழுந்தருளுவித்தான். இக்கதையை 'உறையூர் கமலவல்லித் தாயார் சந்நிதி வைபவம்' என்ற நூலும் திருவரங்கக் கோயிலின் 'கோயிலொழுகு' என்ற நூலும் எடுத்துரைக்கின்றன.

இக்கோயிலொழுகு நூலின் முன்னுரையிலேயே, 'திருவரங்கம் கோயில் அதிகாரிகளால் செவிவழிச் செய்திகளையும் கல்வெட்டுக்களையும் கொண்டு அவ்வப்போது தொகுக்கப்பட்டு உருவான நூல் இது' என்று சொல்லப்படுவ

தால் நந்தசோழன் கதை, செவிவழிச்செய்தி என்பதை உணர்தல் எளிது. வரலாற்று அடிப்படையில் இக்கோயிலைப்பற்றி நமக்குக் கிடைக்கும் முதல் குறிப்பு திருமங்கையாழ்வாரின் பாடல்தான். பெரிய திருமொழியில் நாகைச் சுந்தரராசப் பெருமாள் வடிவழகில் ஈடுபட்டு வியப்படைந்து, 'அச்சோ ஒருவரழகியவா' என்று புகழ்ந்து பாடத்தொடங்கிய ஆழ்வார், யந்தரராசப் பெருமாள் அழகில் யாருக்கு ஒப்பாயுள்ளார் என்பதைச் சொல்ல நினைத்த போது,

''கோழியும் கூடலும் கோயில் கொண்ட
கோவலரே யொப்பர்'',

என்று அருளிச் செய்தார். அதாவது கோழியூராகிய உறையூரில் எழுந்தருளியிருக்கும் அழகிய மணவாளரும், கூடல் அழகருமே, நாகைச் சுந்தர ராசப் பெருமாளுக்கு ஒப்பாவர் என்றார். இப்பாடல்வரி திருமங்கையாழ்வார் காலத்தில் உறையூரில் அழகிய மணவாளப்பெருமாளுக்கென்று ஒரு கோயில் இருந்ததைத் தெரிவிக்கின்றது. நூற்றெட்டுத் திருப்பதிகளுள் ஒன்றெனப் போற்றப்படும் உறையூரில், கமலவல்லி நாச்சியார் திருக்கோயிலைத் தவிர வேறு வைணவத்தலம் கிடையாது.

'ஆழ்வார்கள் கால நிலை' என்ற நூலில் பேராசிரியர் மு. இராகவையங்கார் அவர்கள், நீண்ட நெடும் ஆய்வுக்குப் பிறகு, திருமங்கையாழ்வாரின் காலத்தைக் கி.பி. ஏழாம் நூற்றாண்டின் பிற்பகுதி என்று திட்டவட்டமாக எடுத்துரைத்துள்ளார்கள். கி.பி. ஏழாம் நூற்றாண்டிலேயே இக்கோயில் உறையூரில் இருந்தது என்றால் இதை யார் எழுப்பியது; எப்போது எழுப்பினார்கள் என்ற வினாக்கள் எழுகின்றன.

சங்ககாலத்தில் உறையூரில் இக்கோயில் எழுப்பப்பட்டிருக்குமாயின் அது சோழர்களைப் பற்றிய சங்கப்பாடல்களில் எங்கேனும் ஓரிடத்திலாவது குறிக்கப்பெற்றிருக்கும். அவ்வாறான சான்றுகள் ஏதும் இல்லையென்பதால் இக்கோயில் இடைக்காலத்தில், கி.பி. நான்காம் நூற்றாண்டிலிருந்து கி.பி. ஆறாம் நூற்றாண்டிற்குள் , சைவமும் வைணவமும் பிற சமயங்களின் எழுச்சியால் ஒடுக்கப்பட்டிருந்த காலக்கட்டத்தில் , வைணவத்தின் பெருமையை நிலைநாட்ட எழுப்பப்பட்டதாக இருக்கலாம் என்று கருதுவது பொருத்தமானது. இந்த இடைக்காலத்தில் எழுபதுக்கும் மேற்பட்ட மாடக் கோயில்களைக் கட்டியதாக அறியப்படும் ஒரே வேந்தன் சோழன் கேச்செங்கணான்தான். காவிரியின் இரு கரைகளிலும் பல மாடக்கோயில்களை எழுப்பிய மன்னன் அவன். இதையும் திருமங்கையாழ்வார் வாயிலாகவே அறிகிறோம். கோச்செங்கட்சோழன் சைவனாயிற்றே அவன் பெருமாள் கோயிலை எழுப்பியிருக்க முடியுமா என்ற கேள்வி எழலாம். அதற்கும் திருமங்கையாழ்வாரின் பெரிய திருமொழியியே விடை தருகின்றது. திருநறையூர்ப்பதிகத்தில் வரும்.

''செம்பியன் கோச்செங்கணான் செர்ந்த
கோயில்
திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே'',

என்ற வரிகள் கோச்செங்கட்சோழன் திருநறையூர்ப் பொருமாளிடம் கொண்டிருந்த ஈடுபாட்டைக் குறிப்பதாகப் பெரியவாச்சான் பிள்ளையவர்களும் அவர்களைப் பின்பற்றிப் பேராசிரியர் மு. இராகவையங்கார் அவர்களும் கூறுகின்றார்கள். திருநறையூர்ப் பதிகத்தில் வரும் பத்துப்பாடல்களும் சோழன் கோச்செங்கணானின் வீரத்தை, அவனைப்பற்றிய வரலாற்றுக் குறிப்புகளை, அம்மன்னனின் திருமால் ஈடுபாட்டை உணர்த்துவதாகவே அமைகின்றன. இப்பதிகம் திருநறையூர்ப் பெருமாள் கோயிலை கட்டியது கோச்செங்கட்சோழன்னே என்று நிறுவுகின்றது. இதையே, 'சிவ வழிபாட்டில் ஈடுபட்டுச் சிவபெருமானுக்கு ஆலயங்கள் அமைத்த கோச்செங்கட்சோழன் முடிவில் திருநறையூர்த் திருமாலுக்கு அடியவனாய்ச் சிறப்படைந்தான்' என்று பாசுர விளக்கம் செய்தார் திரு பெரியவாச்சான் பிள்ளையவர்கள். திருநறையூரில் பெருமாளுக்கு ஒரு கோயிலை எழுப்பிய கோச்செங்கட்சோழன், தன் வளநாடான உறையூரிலும் ஒரு பெருமாள் கோயிலை எழுப்பியிருத்தல் இயலக்கூடியதே. கோயிலொழுகு நூலில் இக்கோயிலைக் கட்டியதாகச் சொல்லப்படும் பெயர் தெரியாத சோழன் இக்கோச்செங்கட்சோழனாகவே இருத்தல் வேண்டும். இதற்கு இன்னொரு காரணமும் ஆதரவாய் இருப்பது கவனிக்கத் தகுந்தது. இவ்விரண்டு கோயில்களுமே இப்போது நாச்சியார் திருக்கோயில்களாக விளங்குகின்றன. பிற்காலச் சோழர்களின் காலத்தில்தான் அம்மனுக்கென்றும் தாயாருக்கென்றும் தனிப்பட்ட திருமுன்கள் ஏற்பட்டன. திருநறையூர்ப்பதிகத்தில் பெருமாளைப் பாடும் திருமங்கையாழ்வார், நாச்சியார் கோயிலாக அப்போது அவு வழங்கப்பட்டிருக்குமானால் அதைக் குறிப்பிடத் தவறியிரார். பதிலாக அதை நறையூர் நம்பியின் மணிமாடக் கோயில் என்றே குறிப்பிடுகிறார். எனவே பெருமாளுக்காகவே எழுப்பப்பட்ட இக்கோயில்கள் மிகப் பிற்பட்ட காலத்தில்தான் நாச்சியார் கோயில்களாகப் பெயர் மாற்றம் பெற்றிருக்க வேண்டுடும்.

இடைக்காலச் சோழ மன்னனான கோச்செங்கணான் எடுப்பித்த இக்கோயில், அக்காலக் கட்டிட அமைப்பின்படி மண், செங்கல், மரம் இவற்றாலேயே அமைக்கப்பட்டிருக்க வேண்டும். காலப்போக்கில் இக்கோயில் சிதைந்திருக்கலாம். பிற்காலச் சோழர்களுள் குறிப்பிடத்தக்கவனான சோழன் பல மண் தளிகளைக் கற்றளிகளாக மாற்றியமைத்த செய்தியைஅன்பில் செப்பேடுகள் தெரிவிக்கின்றன. அப்படி மாற்றியமைக்கப்பட்ட அல்லது திருப்பணி செய்யப்பட்ட கோயில்களுள் ஒன்றாக உறையூர் மணவாளப் பெருமாள் கோயில் இருந்திருக்கலாம். கிருஷ்ண தேவராயர் காலத்தில்தான் கோயில்களில் நாச்சியாருக்கென்று தனிக் கருவறைகளும் மண்டபங்களும் ஏற்பட்டதென்று கோயில் கலை வரலாற்று வல்லுநர்கள் கருதுகின்றனர். அவர் வழிவந்த நாயக்க மன்னர்களே இந்த உறையூர் பெருமாள் கோயிலையும், இங்கு வழங்கி வந்த கதைக்கு முக்கியத்துவம் தருவது போல், நாச்சியார் திருக்கோயிலாக மாற்றியமைத்திருக்க வேண்டும். இங்குள்ள சிற்பங்களும் வடிவிலும் அமைப்பிலும் பிற்காலத்துச் சிற்பங்களைப் போலவே காணப்படுகின்றன.

# நீர்வண்ணன்

'மகாவித்வான்' - 'மகாமகிமோபாத்யாய'
திரு. பி. ப. அண்ணங்கராசார்ய சுவாமிகள்,
காஞ்சிபுரம்.

எம்பெருமான் திருநீர்மலையிலே நீர் வண்ணன் என்றும், கச்சியூரகத்தில் நீரகத்தான் என்றும், திருநாமம் பெற்றிருப்பது பிரசித்தம். நீர்க்கும் எம்பெருமானுக்கும் ஒப்புமை பலபடிகளால் உண்டு.

(1) நீர் பள்ளத்தில்தான் பாயும், மேட்டில் ஏறுவது அருமை. எம்பெருமானும் சாதி முதலியவற்றால் குறைந்தாரிடத்தே, எளிதாகச் செல்லுவன்; உயர்ந்தோம் என்று மார்பு நெறித்திருப்பாரிடத்தே செல்ல விரும்பான். பாண்டவர்கட்காகத் தூது எழுந்தருளும்போது ஞானத்தால் சிறந்தோம் என்றிருக்கும் துரோணாசாரியரையும், செல்வத்தால் சிறந்தோம் என்றிருக்கும் துரியோதனனையும் ஒரு பொருளாக மதியாதே, இவையெல்லாவற்றாலும் தாழ்ந்தவராகத் தம்மை நினைத்திருந்த விதுரருடைய திருமாளிகையிலே தானாகவே சென்று ''முன்னமே துயின்றருளிய முதுபயோததியோ, பன்னகாதிபப் பாயலோ பச்சையாலிலையோ, சொன்ன நால்வகைச் சுருதியோ? கருதி நீ யெய்தற்கு, என்ன மாதவஞ் செய்ததிச் சிறுகுடில் என்றான்'' (வில்லிபாரதம்) என்று, அவர் உள்குழையுமாறு இருந்து அமுது செய்தருளினான் கண்ணபிரான். ஆகவே, பள்ளத்தே ஓடிப் பெருங்குழியிலே தங்கும் இயல்பு நீருக்கும் எம்பெருமானுக்கும் ஒக்கும்.

(2) நீர் இல்லாமல் ஒரு காரியமும் ஆகாது; அப்படியே எம்பெருமான் இன்றி ஒரு காரியமும் ஆகாது. ''லோகோ பிந்நருசி'' என்கிறபடியே ஒருவன் விரும்பினதை மற்றொருவன் விரும்பாதபடி உலகம் வெவ்வேறு விருப்பத்தை உடையதாயினும், எல்லோரும் நீரை விரும்பியே யாகவேண்டும்; அதுபோலவே எம்பெருமானையும்.

(3) நீர்க்குக் குளிர்ச்சி இயற்கை; சூடு வந்தேறி; எம்பெருமானுக்கும் தண்ணளி இயற்கை; சீற்றம் வந்தேறியாயிருக்கும். ''நீரிலே நெருப்புக் கிளருமா போலே குளிர்ந்த திருவுள்ளத்திலே அபராதத்திலே சீற்றம் பிறந்தால்'' என்ற முமுட்சுப்படித் திவ்விய சூக்தி காண்க.

(4) நீர் சுட்டாலும் அதை ஆற்றுவதற்கு நீரே வேணும்; எம்பெருமான் மீறினாலும் அவன்றானே தெளிவு பெறவேணும். 'தரு துயரந் தடாயேல் உன் சரணல்லால் சரணில்லை' என்றார் குலசேகரப் பெருமாள்.

(5) நீர் நம்விருப்பப்படி தேக்கி வைக்கவும் ஓடவிடவும் உரியதாயிருக்கும். எம்பெருமான் படியும் அப்படியே. ஆண்டாள் தான் சூடிக் களைந்த மாலையிலே விலங்கிட்டு வைத்து அநுபவிக்க நின்றான், எம்பெருமான். பாண்டவர்கட்காகக் கழுத்திலே ஓலைகட்டித் தூது போகவிடப்பெற்றான். ஆண்டாள் தேக்கி வைத்தனள், பாண்டவர்கள் ஓடவிட்டனர்.

(6) நீரானது மற்ற பண்டங்களைச் சமைப்பதற்குக் கருவியாயிருக்கும். தனிப்படத் தானே குடிக்கத் தக்கதுமாய் இருக்கும். எம்பெருமானுக்கும் உபாயத்துவம் உபேயத்துவம் என்ற இரண்டு இயல்புகளுண்டே. எம்பெருமானைக் கொண்டு வேறு பலன்களைப் பெற விரும்புவாரும், எம்பெருமான் தன்னையே சுவயம் புருஷார்த்தமாகக் கொள்வாரும் உள்ளமை காண்க.

(7) சோறு முதலானவை தமக்குப் பிரதிநிதிகளைப் பொறுக்கும். அதாவது, காய் கனி கிழங்கு வேர் பால் முதலியவற்றால் தேகதாரணம் பண்ணலாம். பண்ணுவாருமுளர். நீரானது அப்படி பிரதிநிதி ஒன்றையும் சகிக்க மாட்டாது. நீர்க்கு நீரே வேணும். அப்படியே எம்பெருமானுக்கும் பிரதிநிதி கிடையாது; குணாநுசந்தாநத்தாலும் போது போக்கவரிது; ''ஒருநாள் காண வாராயே'' ''அடியேன் தொழ வந்தருளே'' என்று பிரார்த்தித்துப் பெற்றே தீர வேண்டும். உணவுப் பொருள்களில் அரிசிக்குப் பதிலாகக் கோதுமையோ பாலோ மற்றும் எந்தப் பொருளோ அவரவர்களின் சுவைக்கு ஏற்றபடி வைத்துக் கொள்ளப்படுவதுண்டு. ஆனாலும் நீருக்குப் பதிலாக வேறெதுவும் வைத்துக் கொள்ளப்படுவதில்லை; நீர் ஒருவராலும் விட முடியாதது. அதுபோல கர்ம ஞான பக்தி பிரபத்தி முதலியவற்றில் எதை விட்டு எதைப் பற்றினாலும் எம்பெருமான்

ஒருபடியாலும் விடத்தகாதவன் என்றதாயிற்று. இது மிக நுட்பமான தத்துவப்பொருள்.

(8) சோறு உண்ணும்போது நீர் இல்லாமல் முடியாது. அப்படி நீர் வேறொன்றை வேண்டி நிற்பதன்று. எம்பெருமான் படியும் அப்படியே. உபாயாந்தரங்களுக்கு எம்பெருமான் வேணும்; எம்பெருமான் இதர நிரபேக்ஷ (அதாவது) எதையும்எதிர்பாராதவன்''உன்னாலல்லால் யாவராலுமொன்றுங் குறைவேண்டேன்'' என்றாரே நம்மாழ்வார்.

(9) கொள்ளும் பாத்திரங்களின் தாரதம்மியமேயன்றி நீர்தான் குறைய நில்லாது; எங்கும் நிரம்பவல்லது. எம்பெருமானும் ''வேண்டிற்றெல்லாந் தருங் கோதில் வள்ளல்'' என்று நம்மாழ்வார் அருளிச் செய்தபடி எங்கும் நிரப்பவல்லவன். கொள்வார் குறையே யத்தனை; ஐசுவரியமே போதுமென்பாரும், கைவல்யமே போதுமென்பாரும் ஆகக் குறை கொள்வாருடைய குற்றமே, அற்பமான ஐசுவரியம். உத்தமமான முத்தியளவும் எதையும் அளித்து நிரப்ப வல்லவன் இறைவன்.

(10) நீர் ஐவகைப்பட்டிருத்தல் போல, எம்பெருமானும் ஐவகைப்பட்டிருப்பவன்; எங்ஙனேயென்னில், (1) பூமிக்குள்ளே பதிந்து கிடக்கின்ற நீர். (2) அண்டத்துக்குப் புறத்தேயுள்ள நீர். (3) பாற்கடல் நீர் (4) பெருக்காற்று நீர், (5) தடாகங்களில் தேங்கும் நீர் என நீர் ஐவகைப்படும். விடாய்த்தவனுக்கு வேறோரிடம் தேடிப்போக வேண்டாதபடி நிற்கிறவிடத்திலேயே உண்டாயிருக்கச் செய்தேயும் கொட்டும் குந்தாலியுங் கொண்டு, கல்லினால் அல்லது குடிக்கக் கிடையாத பூமிக்குள் பதிந்த நீர்போலேயாய்த்து அந்தர்யாமித்வம்; கண்டு பற்றவேணுமென்று ஆசைப்பட்டவனுக்கு இருதயத்திலே இருக்கச் செய்தேயும் கண்ணுக்குப் புலப்படாமல், அட்டாங்க யோகமாகிற முயற்சியாலே, காணவேண்டும்படியான தன்றோ இது. (2) விடாய்த்தவனுக்கு, அண்டத்துக்கு வெளியே பெருகிக் கிடக்கிற ஆவரண சலம் போலேயாயிற்று. கண்டு பற்றவேணும் என்றிருக்கிறவனுக்கு லீலாவிபூதிக்கு அப்பாற்பட்டிருக்கிற பரத்துவம். (3) அப்படி அதிதூரத்திலும் அன்றியே அண்டத்துக்கு உட்பட்டிருக்கச் செய்தேயும் விடாய்த்தவனுக்குக் கிட்ட அரிதான பாற்கடல் போலேயாயிற்று, சென்று காண அரிதாம்படி இருக்கிற வியூகம். (4) அருகேயிருந்தும் அக்காலத்திலிருந்தவர்களுக்கு மட்டும் உபயோக யோக்யமாய்ப் பிற்பட்டவனுக்கு அரிதான பெருக்காறு போலேயாயிற்று. இராமகிருஷ்ணாதி அவதாரங்களான விபவம்.

பூமியிலே அவதரித்துச் சஞ்சரித்தும் தற்காலத்திலிருந்தவர்களுக்கே அடையத்தக்கதாய்ப் பிற்காலத்திலுள்ளவர்களுக்குக் கிட்டாதபடியாய் இருப்பதன்றோ இது. (5) விடாய்த்தவனுக்கு விடாய் தீரப் பருகலாம்படி பெருக்காற்றிலே தேங்கின மடுக்கள் போலேயாயிற்று, கோயில்களிலும் இல்லங்களிலும் எங்கும் ஒக்க எல்லார்க்கும் கண்ணுக்கு இலக்காம்படி நிற்கிற அர்ச்சாவதாரம். ஆக இந்த ஐந்து வகைகளினாலும் ஐவகை நீரை ஒத்திருப்பான் எம்பெருமான்.

(11) நீரானது இயற்கையிலே பரிசுத்தமாயினும், ஆதரவசத்தாலே கொள்ளத்தக்கதும் தள்ளத்தக்கதுமாகிறது. அப்படியே பிற தெய்வங்களில் அந்தர்யாமியான எம்பெருமான் உபேட்சிக்கத்தக்கவனாகவும், கூராராழி வெண்சங்கேந்தின எம்பெருமான் உத்தேசியனாகவும் உள்ளமை காண்க.

(12) தோண்டத் தோண்டச் சுரக்கும் நீர் எம்பெருமானும் கொள்ள மாளா இன்ப வெள்ளமாய்ப் பேசப்பேச வளர்ந்திடுவன். 'செலக் காண்கிற்பார் காணுமளவும் செல்லுங் கீர்த்தியாய்' என்றாரே நம்மாழ்வார். 'பேசுவார் எவ்வளவு பேசுவர் அவ்வளவே வாச மலர்த் தண்டுழாய் மார்வன்-வடிவு' என்றார் பேயாழ்வாரும்.

(13) நீர் தனக்கொரு பிரயோசனமும் இன்றிப் பரார்த்தமாகவேயிருக்கும்; அதுபோல எம்பெருமானுடைய இயல்பு ரூபம் குணம விபூதிகள் ஆகியனவெல்லாம் நம்போன்ற அடியார்களுக்காகவே யிருக்கும்.

(14) நீர் தானேபெய்யவேணுமேயன்றி ஒருவரால் வரம்பிட்டுப் பெய்விக்க முடியாதது; எம்பெருமான் படியும் இப்படியே; அவன் தனது இயற்கை இன்னருளால் இரங்கினால் தான் உண்டு.

(15) நீர் கடலிலிருந்து காளமேகம் வயாக வந்தாலன்றி உபஜீவிக்க உரியதாகாது; எம்பெருமானும் சாத்திரங்களில் இருந்து ஆசாரியர் முகமாக வந்தே உபஜீவனாகிறான். ''மேகம் பருகின சமுத்திராம்பு போல நூற் கடற் சொல் இவர் வாயனவாய்த் திருந்தின வாறே ஸர்வதா ஸர்வோப ஜீவ்யமாமே''என்ற ஆசார்ய இருதய சூக்தி காண்க.

(16) சிறியார் பெரியார் என்கிற விபாகமின்றியே அனைவரும் ஓர் துறையிலே படிந்து குடைந்தாடலாம்படி இருக்கும் நீர்; எம்பெருமானும் ''நிகரிலமரர் முனிக்கணங்கள் விரும்பும் திருவேங்கடத்தானே'' என்றும், 'கானமும் வானரமும் வேடுமுடை வேங்கடம்'' என்றும் சொல்லுகிறபடியே, பெரியார் சிறியார் என்னும் வாசியற ஒக்க வழிபடலாம் படியிருப்பன்.

(17) நீர் சிறிது துவாரம் கிடைத்தாலும் உட்புகுந்துவிடும். எம்பெருமானுக்கும் சிறிது காரணமே போதும்; ''திருமாலிருஞ்சோலை மலை என்றேன் என்னத் திருமால் வந்தென் னெஞ்சு நிறையப் புகுந்தான்'' என்றும், 'மாதவன் என்றதே கொண்டு என்னுள் புகுந்திருந்தான்' என்றும் அருளிச்செய்தார் நம்மாழ்வார்.

(18) கங்கை, காவிரி, திரிவேணி முதலான தீர்த்த விசேடங்களிலே நீருக்குப் பெருமை அதிகம்; எம்பெருமானுக்கும்

கோயில்" திருமலை பெருமாள்கோயில் முதலான திருப்பதிகளிலே சிறப்புப் பொலியும்.

(19) தாபம் மிக்கவர்கள் நீரை முகத்திலே ஏறட்டுவது, முதுகில் கொட்டுவது, உள்ளில் இழிச்சுவது, படிந்து குடைந்தாடுவது போல, 'வாக்கினால் கருமந்தன்னால் மனத்தினால் சிரத்தை தன்னால், வேட்கை மீதூர வாங்கி விழுங்குவர்கள்'' எம்பெருமானையும் என்கிறார் திருமங்கையாழ்வார்.

(20) நீர் வேண்டியவன், ஒரு துளி நாக்கு நனைக்கக் கிடைத்தால் போதுமென்பன்; ''கூராராழி வெண்சங்கேந்திக் கொடியேன்பால் வாராய் ஒருநாள் மண்ணும் விண்ணும் மகிழவே' என்றும், 'ஒருநாள் காணவாராயே' என்றும் ''நம்மையொருகால் காட்டி நடந்தால் நாங்களுய்யோமே'' என்றும் ஆழ்வார்கள் கூறுவர் எம்பெருமானை நோக்கி.

(21) நீரில் சிறிய கல்லும் அமிழும். பெரிய தெப்பமரமும் மிதக்கும். ''எம்பெருமான் பக்கவிலும் பிரம்மாவாய் இழந்துபோதல், இடைச்சியாய்ப் பெற்றுவிடுதல் செய்யக் காணாநின்றோமிறே'' என்கிறபடியே, பெரியார் இழக்கவும், சிறியார் பெறவுமாகும். ''நேரே கடிக் கமலத்துள்ளிருந்துங் காண்கிலான், கண்ணனடிக் கமலந்தன்னை அயன்'' என்று பிரமன் இழந்ததைப் பொய்கையார் கூறினர். 'மருவு நின் திருநெற்றியில் சுட்டியசைதர மணி வாயிடை முத்தந் தருதலும், உன்றன்தாதையைப் போலும் வடிவுகொண்டு உள்ளம் உள் குளிர விரலைச் செஞ்சிறு வாயிடைச் சேர்த்து வெகுளியாய் நின்றுரைக்கும் அவ்வுரையும் திருவிலேன் ஒன்றும் பெற்றிலேன் எல்லாம் தெய்வநங்கை யசோதை பெற்றாளே'' என்று இடைச்சி பெற்றதைக் குலசேகராழ்வார் கூறினர். பகவத் குணங்களில் சிறுமாமனிசர் அமிழ்தலும், ஊன்மலிமோடு பருப்பார் வாய்க் கரையில் நிற்றலுங் கொள்க.

(22) ''துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத், துப்பாய தூஉம் மழை'' (திருக்குறள்) என்கிறபடியே, உணவு பெருக விளைதற்குக் காரணமாகையாலே சாதனமாயும், விடாய் தீரப் பருகுகையாலே தானே போக்கியமாயும் இருக்கும் நீர். உபாயமும் தானாய் உபேயமும் தானாயிருப்பன் எம்பெருமான் என்பது நூற்கொள்கை. இங்ஙனே காண்க.

---

# 'சமயம்' என்னும் தகைசால் சொல்!

இலகுறு சமயம் என்னும் எழில்இயல் இறைமைச் சொல்லில்,

நிலைபெறு நிதிய வைப்பின், நிறைவெலாம் நிகழ்த்தற் காமோ?

உலகினில் உள, பொன், வெள்ளி, ஒளிமணிக் குவியல் யாவும்,

விலைமதித் திடற்கீ டாகா; வியன்பெரு மாட்சித் தாமே!

—தமிழாக்கம்: ந. ரா. முருகவேள்

Religion! What a treasure untold,

Resides in that heavenly word;

More precious than silver and gold

Or all that this world can afford!

—William Cowper

# உமாபதி சிவாச்சாரியாரின் சதரத்தின சங்கிரகம்

R. RAJU,
Dy Commissioner H.Q.
(Retired)
HR&CE Administration Dept

"மும்மொழிக் கொண்டல்"

பேராசிரியர் திரு. பெ. திருஞானசம்பந்தம், M.A.,L.T., சென்னை.

வேதாந்தத் தெளிவாம் சைவசித்தாந்தத்தைத் தமிழ்கூறும் நல்லுலகத்தில் வாழும் மக்கள் கற்றறிந்து உய்தற்பொருட்டு, தமிழில் எழுந்த சாத்திர நூல்கள் பதினான்கு. அவற்றுள் எட்டு நூல்களின் ஆசிரியர் என்ற பெருமைக் குரியவர் தில்லையம்பதியின் எல்லையில், கொற்றவன் குடியில் வாழ்ந்த சிவநெறிச் செல்வர் உமாபதி சிவாசாரியார் என்பதைச் சைவ உலகம் அறியும். தென்னாடுடைய சிவன் எந்நாட்டவர்க்கும் பொதுவாகலான், தமிழ் பயிலாத பிற பகுதிகளில் வாழும் பிற மக்கள் உய்தற்பொருட்டும், தமிழ் பேசப்படாத பிற பகுதிகளில் வாழும் பிற சமயசாத்திர அறிஞர்கள் தெளிதற்பொருட்டும், உமாபதிசிவாசாரியார் பல்வேறு ஆகமங்களின் பிழிவாக நூற்றுக்கு மேற்பட்ட ஆகம வாக்கியங்களைத் தொகுத்து, சைவ சமயத்தில் கூறப்படும் முப்பொருள் உண்மைக்கு விளக்கம்தரும் வகையில் சம்ஸ்கிருத மொழியில் அவ்வாக்கியங்களுக்கு விளக்கவுரையும் எழுதியுள்ளார். தேர்ந்து எடுக்கப்பட்ட மணி (ரத்தினம்) போன்ற நூறு (சதம்) ஆகமவாக்கியங்களைக் கொண்டுள்ளதால், இந்நூலுக்குச் சதரத்தின சங்கிரகம் என்ற பெயர் வழங்கி வருகிறது. ஒளி பொருந்திய மணி இருளைப் போக்குவது போல, இம்மணிக்கோவை நமது அகவிருளைப் போக்கி உள்ளொளி பெருக்கும் இயல்பினைக் கொண்டதாகும். இந்நூலாசிரியர் பதின்மூன்றாம் நூற்றாண்டின் இறுதியிலும், பதினான்காம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் வாழ்ந்தார் என்று சமய வரலாற்று அறிஞர் கூறுவர்.

இந்நூலில் எடுத்தாளப்படும் ஆகமங்களுள் சுவாயம்புவம், நிசுவாசம், மாதங்கம், தேவியாமளம், மிருகேந்திரம், கிரணம், பராக்கியம், தேவிகாலோத்ரம், விசுவசாரம், ஞானோத்தரம் முதலானவை இடம்பெற்றுள்ளன. ஞானம், தீக்கை இரண்டுமே இந்நூலில் வலியுறுத்தப்படுகின்றன.

பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள் உண்மையை அழகுற அளவை நூல் முறைப்படி விளக்கிச் செல்கிறார் ஆசிரியர். வாக்கிறந்த பூரணமாய் விளங்கும் பரம்பொருள் பிரமம் என்பர் வேதாந்திகள். அப்பரம்பொருள் சிவனே என்பது சைவசித்தாந்திகளின் துணிபு. அச்சிவன் மனோவாக்குகளுக்கு மட்டுமின்றிச் சாந்தி நிலைக்கும் அப்பாற்பட்டவன் என்று ஒருபடி மேலே நம்மை இட்டுச் செல்கிறது சைவசித்தாந்தம்.

அத்வைதிகள் பிரமமே இவ்வுலகத் தோற்றத்திற்கு உபாதான (மூலப் பொருள்) காரணமாயும் இருக்கின்றது என்று கூறுவர். சித்தாந்தத்தை நிறுவுதற்கு முற்பட்டுள்ள ஆசிரியர் இக்கூற்றை மறுக்கின்றார். ஒவ்வொரு காரியத்திற்கும் உரிய மூலப்பொருள், அதைத் தோற்றுவிக்கும் முதற்பொருள், அதைத் தோற்றுவிக்கும் முதல்வன், அவனுக்குத் துணைபுரியும் கருவிகள் ஆகியவை ஒன்றாதல் இயலாது என்பதைத் தெளிவுபடுத்துகிறார். குடத்திற்கு முதற்பொருளான மண்ணும், அதை உண்டு பண்ணும் குயவனும், அவனுக்குத் துணைபுரியும் சக்கரம் முதலானவையும் வெவ்வேறாதல் போல, இவையும் வெவ்வேறாக இருத்தல் தானே இயல்பு. கடவுளே மூலப்பொருள். ஆனால் அதனினின்றும் விளைந்த உலகப் பொருள்கள் யாவும் முற்றறிவல்லவோ பெற்றிருத்தல் வேண்டும். ஒரு சில சிற்றறிவு பெற்றவையும் பிற சடமாதலும் எங்ஙனம்? காரணத்தின் தன்மை காரியத்திலும் காணப்படுதல் தானே நியதி? ஆதலின் சிவன் நிமித்தகாரணன், அவனது சக்திகள் துணைக்காரணங்கள். மாயை மூலப்பொருளாம் காரணம் என்பதே ஏற்புடையது.

பகுக்கப்படும் பொருள் அனைத்துமே அநித்தியமானவை, காரிய நிலையில் உள்ளவை ஒவ்வொரு காரியத்திற்கும் அதைத் தோற்றுவிக்கும் முதல்வன் இருந்தே ஆகவேண்டும். குடத்திற்குக் குயவன் இருப்பதுபோல, அம்முதல்வனும் மூலப்பொருள்களின் தன்மையையும் செயல்முறைகளையும் அறிந்தவனாகவும் செயலாற்றுதற்குத் தேவையான கருவிகளைப் பெற்றிருப்பவனாகவும் இருத்தல் இயல்பு. அத்தகைய முதல்வன்தான் உலகெலாம் உணர்ந்த முழுமுதற் பொருளான சிவன்.

பிரம்மத்தை நிலைநிறுத்த ''ஜன்மாத்ய ஸ்யயத'' என்ற பிரம்ம சூத்திரத்தினால் படைத்தல், காத்தல், அழித்தல் என்ற முச் செயல்களையும் புரிபவன் அம்முதற் பொருள் என்று கூறுகிறது. பிரம்ம சூத்திரம் குறிப்பிட்ட முச்செயல்களுக்கும் மேலாகத் திரோபவம், விமுத்தி என்ற இரு நிலைகளுக்கும் அவனே முதல்வன் என்று கூறும் சைவசித்தாந்தத்தின் ஏற்றத்தைச் சுட்டுகிறார் நமது ஆசிரியர். இப் பஞ்சகிருத்தியங்களைக் குறிப்பதுதான் நடராசப் பெருமானின் தாண்டவ நிலையின் குறிப்பு என்பதைச் சைவப்பெருமக்கள் அறிவர்.

பிரம்மம் வேறு ஆத்மாவேறு என்பதை மறுப்பவர் அத்வைதிகள். பசுவையும் பாசத்தையும் பதியுடன் ஒருங்குவைத்து எண்ணுகின்ற அத்வைதிகள் 'பசுபாசேசுவர வாதிகள்' என்றும், 'கர்மமே' முதற்காரணம் என்று கூறும் மீமாம்சகர் 'பாசேசுவரவாதிகள்' என்றும் குறிப்பிடுகிறார். உண்மை நிலையை உள்ளவாறு உணர்ந்து போற்றும் சைவசித்தாந்திகள் சிவனையே பரம்பொருளாக ஏற்றுக்கொண்ட போதிலும், பசுபாசங்களையும் உண்மைப் பொருளாகவே ஏற்றுக்கொள்கின்றனர் என்பது, பிரமாணங்களுக்கு ஒத்தது என்னும் சிறப்பினை உடையது.

உயிரின் இலக்கணத்தைப் பராக்யாகமத்திலிருந்து மேற்கோள் காட்டி, சுருங்கக்கூறி விளங்கவைக்கிறார் ஆசிரியர்.

'தேஹாந்ய: அநச்வர: வ்யாபீ
விபின்ன: ஸமல; அஜட;
ஸ்வகர்மபலபுக் கர்த்தா கிஞ்சிக்கு:
ஸேச்வா: பசு:'

'ஆன்மா உடம்பினின்றும் வேறானது. அழிவற்றது. எங்கும் நிறைந்திருப்பது, வெவ்வேறானது, மும்மலங்களோடு கூடியது, சடமல்லாதது, தன்வினைப்பயனை நுகர்வது, வினை புரிவது, சிற்றறிவினது, இறைவனைத் துணையாகக் கொண்டது'.

அத்வைதிகள் கூறுவது போல ஆத்மா ஒன்றேயானால், ஒருயிருக்கு முத்தி கிடைக்கும்போது அனைவருமே முத்தியின்பத்தைப் பெறும்படியாகுமே, இப்பொருந்தா நிலையும் சுட்டிக் காட்டப்படுகிறது.

மும்மலங்களின் தொடர்பு தொடர்பின்மை காரணமாக ஆத்மா, சகலர் பிரளயாகலர் விஞ்ஞானகலர் என்ற மூவகையினர் என்பதையும் தெளிவுபடுத்துகிறார். அத்வைதிகள் கூறுவதுபோல ஆத்மா நிரஞ்சனம் (அழுக்கற்றது) ஆனால், சுகதுக்கங்களில் அதற்கு நாட்டம் எப்படி ஏற்படக்கூடும் என்று யுக்திபூர்வமாகக் கேட்கிறார். ஆகவே ஆன்மாவுடன் மலச்சேர்க்கை ஒப்புக்கொள்ள வேண்டியதாகிறது.

இன்பத்திலும் துன்பத்திலும் மோகத்திலும் உழலும் ஆன்மா, துய்த்தலின் பயனாக வினை நீங்கப்பெற்றுப் பக்குவம்பெற்ற நிலையில் சிவபெருமானின் அநுக்கிரக சக்திக்கு ஆட்படும் விதத்தையும், குருவருள்பெறும்வண்ணம் அவன் திருவருள் புரிவதையும் 'சத்திநிபாதம்' என்னும் அருட்செயலை விளக்கும்போது கூறிச் செல்கிறார். குருவினால் தீட்சை செய்யப்பெற்ற ஆன்மா விரைவில் முத்தியைப் பெறும் நிலையை அடைகிறது. தீட்சை ஒன்றே முத்தியைப்பெறும் வழி என்று வலியுறுத்துகிறது.

வகுப்பில் தூங்கும் மாணவனைப் பிரம்பினால் தட்டி எழுப்பி அறிவுறுத்தும் ஆசிரியரைப் போல, சிவபெருமான் மோகத்தால் ஆழ்ந்திருக்கும் உயிரைத் தனது அனுக்கிரக சக்தியால் தட்டி உண்மையை உணரச்செய்து சிவசாயுஜ்யத்தை வழங்குகிறார். சிவமாம் தன்மையைப் பெற்றவருக்குக் கிரியைகள் தேவையற்றவை. முத்தியடைதல் என்பது ஓரிடத்தை விட்டுப் பிறிதோர் இடத்தை அடைவதில்லை. ஆன்மா எங்கும் வியாபித்திருக்கும் இயல்பினதாகலின் இடமாற்றம் பொருந்தாது. தன்னைத்தான் அறியும் நிலையே முத்திநிலை.

மலங்கள் மூன்றெனக் கூறுவாருளர். உமாபதிசிவம் ஐந்து மலங்களைக் குறிப்பிடுகின்றார். அவை ஆணவம், திரோதானம், மகாமாயை மாயை, கர்மம் என்பன. விரிவஞ்சி இவற்றின் விளக்கம் விடப்பட்டுள்ளது.

ஆத்மாவிற்கு இயல்பாகவே உள்ள ஞான சக்தியையும் கிரியாசக்தியையும் மறைப்பதே மலம் எனப்படுவது. மலம் ஒன்றே ஆயினும் அதன் சக்திகள் எண்ணிறந்தவை, பலதரப்பட்டவை. ஒவ்வொரு உயிரிலும் ஒவ்வொரு சக்தி பல்வேறு நிலைகளில் காணப்படுகின்றது. ஆதலின் ஒருயிர் முக்திபெறும்போது மலத்தின் ஒரு சக்தியே அழிக்கப்படுகிறது. மலத்தின் பிற எண்ணிறந்த சக்திகள் பிற உயிர்களைப் பற்றி நிற்பதால் எல்லா உயிர்களுக்கும் ஒரே காலத்தில்முக்திஏற்படுவதில்லை. இச்சக்திகளையெல்லாம் ஆன்மாக்கள்உய்யும் பொருட்டுத் தனுகரண புவனாதிகளின் மூலம் நெறிப்படுத்தும் சக்திதான் இறைவனின் 'திரோதசக்தி'. பசுஞானமும், பாசஞானமும் தளையை வலுப்படுத்துவன. சிவஞானம் தளையை நெகிழ்விப்பது என்று கூறுவதன் மூலம், நாம் எந்த ஞானத்தில் நாட்டம் செலுத்த வேண்டும் என்பதை உய்த்துணர வைக்கிறார் ஆசிரியர்.

கர்மம் என்பது வினைப்பயன். தருமம் என்றும் அதருமம் என்றும் கூறப்படுவது. நல்வினை தீவினைப்பயனாக ஒவ்வோருயிரும் தக்க உடலும் பொறிகளும் வாய்க்கப்பெறுகின்றன. இன்ப துன்ப மோகங்களைத் துய்க்கின்றன. துய்ப்பதன் மூலம் வினைப்பயன் தேய்கிறது. உயிர் ஞானவிளக்கம் பெறுகிறது. இறுதியில் சிவமாம் தன்மையைப் பெறுகிறது.

இன்னோரன்ன சித்தாந்தக் கருத்துக்கள் ஆகம மேற்கோள் ,யுக்தி ஆகியவற்றால் இந்நூலில் ஆசிரியரால் தெளிவுற நிலை நிறுத்தப்படுகின்றன.

# பிரார்த்தனையின் பெரும்பயன்!

''மருத்துவப் பேரறிஞர்''
டாக்டர் திரு. இரத்தினவேல் சுப்பிரமணியம்,
B.Sc., M.D., F.R.C.P. (LONDON), F.C.I.P. (U.S.A.), F.A.M.S.

கோயிலுக்குச் செல்லும்போதும், பெரியவர்களைப் பார்க்கச் செல்லும் போதும், ஒரு சிறிய பொருளாயிருந்தாலும், அதை எடுத்துச் செல்வதுதான் நம் வழக்கம். தேங்காய், வாழைப்பழம், வெற்றிலைபாக்கு, பூ இவைகளைச் சாதாரணமாக, மக்கள் கோயிலுக்கு எடுத்துச் செல்வார்கள். இம்மாதிரியான பொருள்களெல்லாம் அந்தச் சாமிக்குக் கிடைக்காதா? ஏன் எடுத்துச் செல்லுகிறார்கள்? எல்லாவற்றையும் சிருஷ்டித்த கடவுளுக்கு இதெல்லாம் அவசியமா? என்று சிலர் சொல்லுவார்கள். கீதையில் பகவான் ''பக்தர்கள் அளிக்கின்ற புஷ்பமோ பழமோ தீர்த்தமோ எதுவானாலும், அதனை யான் ஏற்கின்றேன்; எவன் ஒருவன் எனக்குத் தன்னால் இயன்றதை அர்ப்பணிக்கின்றானோ, அது அவன் எனக்கு அன்பினால் அளிக்கும் காணிக்கையாகும். அதை நான் ஏற்று மகிழ்வுடன் புசிக்கின்றேன்'' என்று கூறுகின்றார். எல்லா உலகையும் படைத்த கடவுளுக்குத் தேங்காய், பழம் முதலியவை கிடைக்கவில்லையா என்றால், 'அன்புடன் படைக்கின்ற பொருள்களாதலால், அன்பர்கள் படைக்கின்ற பொருள்கள் எல்லாவற்றையும் ஏற்றுக் கொள்கிறேன்' என்கின்றார்.

ஒரு பெரிய மனிதரைப் பார்க்கப் போகும் போது, எலுமிச்சம்பழம் எடுத்துச் செல்கிறோம். அந்தப் பழம் அவருக்குக் கிடைக்காதா? அல்லது வாங்கிக் கொள்ளக் கூடாதா? இராமர் காட்டுக்குச் செல்லுகையில், கங்கையின் கரையில் தங்கும்போது, குகன் அங்கு அவரைச் சந்தித்துத் 'தேனும் மீனும் அமுதினுக்கு அமைவதாகத் திருத்திக் கொண்டு வந்துள்ளோம்' என்று சொல்லுகின்றான். குகன் செய்கையைப் புகழ்ந்து இராமர் பாராட்டுகிறார். அதனைக் கம்பர் கீழ்வரும் பாடலால் தெரிவிக்கிறார்.

''அரியதாம் உவப்ப உள்ளத்து
அன்பினால் அமைந்த காதல்
தெரிதரக் கொணர்ந்த என்றால்,
அமிழ்தினும் சீர்த்த அன்றே!
பரிவினில் தழீஇய என்னில்,
பவித்திரம்; எம்ம னோர்க்கும்
உரியன; இனிதின் நாமும்
உண்டனம் அன்றோ? என்றான்''

—(கம். பாலகாண்டம், 215)

அதாவது 'நீ கொண்டு வந்திருப்பதாகச் சொல்லுகின்ற பொருட்கள், அன்பை வெளிப்படுத்தக் கொண்டு வந்தவை ஆதலால், அவைகள் அமிழ்தத்தையும் விடச் சிறந்த பொருள்கள்; நீ அன்புடன் கொண்டு வந்தவை என்றால், அவைகள் பரிசுத்தமான பொருள்களே ஆகும். ஆகையால் அதை எனக்கு மட்டும் கொண்டு வந்தேன் என்று சொல்லாதே. என்னுடன் வந்த எல்லாருக்குமே கொண்டு வந்தாய்' என்று இராமபிரான் சொல்லுகிறார்.

இராமபிரான் இந்து மக்களின் கடவுள். அப்படி கடவுள் என்றாலும் அல்லது இல்லாவிட்டாலும், அவர் ஒரு பெரிய அரசர். அந்த அரசருக்கு இந்தத் தேனும், மீனும் கிடைக்காதா? அதுவும் கங்கைக் கரையில் உள்ளவருக்கா, தேனும் மீனும் கிடைக்காது? சுலபமாகக் கிடைக்கும். அப்படியிருந்தும் அவர் அதை மகிழ்ச்சியுடன் வாங்கிக் கொண்டு பெருமையாகப் பாராட்டுகிறார்.

நாம் உண்டியலில் காணிக்கை போடுவது, ஒரு சிறிய பொருளாக இருந்தாலும், அதனை நாம் ஒரு நம்பிக்கையோடு, பக்தியோடு போடுகிறோம். அதாவது வியாதி கண்டு, அதன் காரணங்களுக்காகவோ அல்லது ஒரு நஷ்டம் ஏற்பட்டதன் காரணமாகவோ, அல்லது வேறு ஏதோ ஒரு சம்பவம் காரணமாகவோ, உண்டியலில் நாம் காணிக்கை போடுகிறோம். நம்பிக்கையோடு பிரார்த்தனை செய்கிறோம். கடவுளிடம் நாம் கொண்டுள்ள அன்பையும் பக்தியையும் வெளிப்படுத்த, நம்மால் இயன்ற அளவு காணிக்கை செலுத்துதல் இன்றியமையாதது. உள்ளத்திற் பக்தியிருந்தால் மட்டும் போதாது; அதனை நாம் நம் செயலினால் வெளியிற் புலப்படுத்துதலும் வேண்டும். தாய் தந்தையர்கள் சிலர், குழந்தையிடம் தின்பண்டங்களை முழுதாகக் கொடுத்து விடுவார்கள். பிறகு அக்குழந்தையிடம் அது சிறிது சிறிதே கிள்ளித் தருவதனைக் கேட்டுப் பெற்றுத்தின்று, மகிழ்ச்சி அடைவார்கள்... அதுபோலவே கடவுளின் இயலும் செயலும்! உலகப் பொருள்களில் நாம் அநுபவிக்கின்றவை எல்லாம் அவருடையது தான்; அவர் படைத்ததுதான்; அவர் நமக்குக்

கொடுத்ததுதான் என்றாலும், அவர் நாம் பிரார்த்தனை செய்து அன்புடன் தரும் காணிக்கைப் பொருளை ஏற்றுக் கொண்டு, கடவுள் மகிழ்ச்சி அடைகின்றார்.

கடவுளுக்கு 'ஆசுதோஷி' என்று ஒரு பெயர் உண்டு. வங்காளத்தில், கல்கத்தா நகரத்தில்,Asutosh Mukerjee என்று, ஒரு சிறந்த பெருந்தலைவர் இருந்தார். கல்கத்தாப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் (Vice-Chancellor) ஆக இருந்தவர் அவர்! அவருடைய பெயரில் உள்ள Asutosh என்னும் சொல், 'ஆசுதோஷி' என்னும் சொல்லின் திரிபேயாகும். 'அற்பப் பொருளை விரும்புபவன்' 'அற்பப் பொருளுக்கே மகிழ்ச்சியடைபவன்' என்பது அதற்குப் பொருள். நம்மை யாரேனும் 'அற்பப் பொருளை விரும்புகின்றவன்-அற்பப் பொருளுக்கே மகிழ்ச்சி அடைபவன்' என்று சொன்னால், நாம் எவ்வளவு கோபப்படுவோம்? ஆனுல் கடவுள் அதற்கும் உவகை அடைகின்றார். நம்முடைய வாழைப் பழமோ, தேங்காயோ, கர்ப்பூரமோ, மிகவும் அற்பமான பொருள்கள்தான். ஆனால் அவற்றை நாம் உண்மையான பக்தியுடனும் அன்புடனும் படைத்தால், கடவுள் தம் கருணைத் திறத்தால், அவற்றையும் மகிழ்ந்து ஏற்றுக்கொண்டு, அருள்புரிகின்றார். கடவுள் நாம் படைக்கின்ற பொருள்களை மட்டுமே பார்ப்பதில்லை; படைக்கின்ற நம்முடைய உண்மையன்பினையும், ஊன்றி நோக்குகின்றார். ("God cares more for the adverb, than for the verb") ஆதலின் நாம் கோயில்களுக்குச் செல்லும்போது, நம்மால் எவ்வளவுக்கெவ்வளவு முடியுமோ, அவ்வளவுக்கவ்வளவு காணிக்கைப் பொருளினை, உண்மையன்புடனும் பக்தியுணர்வுடனும் செலுத்துதல் வேண்டும். வயலில் ஒரு நெல்லைத் தூவினால், அது எத்தனையோ பற்பல நெல்மணிகளைப் பல மடங்கு பெருக்கி விளைவித்துக் கொடுக்கின்றது. அதுபோலக் கடவுளின் கருணையும், நாம் செலுத்துகின்ற காணிக்கையினைப் பலமடங்காகப் பெருக்கி, நமக்கு நிச்சயமாகத் தந்தருள்கின்றது என்பதில், ஐயமில்லை.

கடவுள் தன் கருணையினால், தம்முடைய எல்லையற்ற பேரருளின் திறத்தினால், நாம் அவருக்குப் படைக்கின்ற, எளிய சிறிய அற்பமான பொருள்களையும்கூட, அகமகிழ்ந்து ஏற்றுக்கொண்டு, நமக்கு அளவில்லாத செல்வ வளங்களையும், எத்தனையோ பல உயர்ந்த அருட்பெரு நலங்களையும் வழங்கி, நம்மைக் காத்தருள்கின்றார். இவ்வரிய இனிய உண்மையினைப் பரஞ்சோதி முனிவர் தம்முடைய திருவிளையாடற் புராணத்தில் அழகுறப் பாடுகின்றார்: உள்ளங்கை அளவு சிறிது தண்ணீரே வார்த்து, வெறும் பச்சிலை ஒன்றைச்சாத்தி, அன்புடன் இயன்ற அளவு பூசை புரிந்தால், அங்ஙனம் தன்னைப் பூசிப்பவர்களுக்கும்கூட, இறைவன் பெருங்கருணை கூர்ந்து, இந்திர பதவியும், பிரம பதவியும், திருமால் பதவியும் கூட வழங்கியருள்கின்றார் என்பது, பரஞ்சோதி முனிவர் பாடியுள்ள அப்பாடலின் கருத்து.

''குடங்கை நீரும், பச்சிலையும்
இடுவார்க்கு, இமையாக் குஞ்சரமும்,
படங்கொள் பாயும், பூவணையும்
தருவாய்! மதுரைப் பரமேட்டி!
படங்கொள் பாயும், பூவணையும்,
தருவாய்! கையில் படுதலைகொண்டு
இடங்கள்தோறும் இரப்பாய் என்று
ஏசு வார்க்கு,என் பேசுவனே!''

—இசைவாதுவென்ற படலம், 34

நம் கோயில்கள்தான், உண்மையிலேயே நம்முடைய'சமுதாயப் பொதுநல நிலையங்கள்' (Social - Welfare Centres) ஆகும்! கோயில்களின் மூலம், எத்தனையோ பலருக்கு வேலை வாய்ப்பும், ஊதியத் தொகையும் கிடைக்கின்றது. ஒரு திருவிழா என்று சொன்னால், ஒரு தனி மனிதனால் நடத்தக்கூடிய காரியமா? ஒரு திருவிழாவில் சுவாமி புறப்படுகிறார் என்றால், எவ்வளவு திடகாத்திரமான மனிதனாக இருந்தாலும், ஒருவனால் மட்டும் செய்துவிட முடியுமா? திருவிழா என்பது, பலர் ஒன்றாகச் சேர்ந்து செய்யக் கூடிய காரியம் ஆகும். பூ கட்டும் வேலைக்குச் சுமார் 10, 15 பேர் தேவைப்படுகிறது. சுவாமியின் பல்லக்கு அல்லது தொட்டில் தூக்கிச் செல்வதற்குக் குறைந்தது, 10 ஆட்கள் தேவைப்படுகிறது. இப்படி 40 பேர், 50 பேர் சாதாரணமாகத் தேவைப் படுகிறார்கள். பெரிய கோயில்களில் திருவிழா என்றால், தொட்டில் தூக்குவதற்கு 100 பேர் தேவை. மேளம் கொட்டவும், நாதசுரம் வாசிக்கவும், ஒத்து வாத்தியம் ஊதவும், 10 பேர்களாவது தேவைப்படுகிறது. இரவு வேளையாக இருந்தால், கேஸ் லைட்டுகள், விளக்குகள் தூக்கிச் செல்ல 10, 20 பேர்கள் தேவைப்படுகிறார்கள். இப்படி ஒரு சிறிய கோயில் விழாக்களில் 40, 50 பேர்கள் சேவை செய்ய வேண்டியுள்ளது.

இவ்வாறு ஒத்துழைப்புச் செய்தால்தான், திருவிழாக்கள் சிறப்பாக நடைபெறும். சாதாரணமாகக் கிராமத்தில் உள்ள கோயில்களில் இரண்டு, மூன்று பெரிய மனிதர்கள் மட்டுமே இருப்பார்கள். மற்ற வசதிகள் குறைந்திருக்கும். ஆகையால், ஒருவரே கவனிக்க முடியாது. ஆளுக்குக் கொஞ்சம் திரவியம் கொடுத்தால் அதனையும் சேர்த்துத் திருவிழா சிறப்பாக நடத்த முடியும். விழாக் காலங்களில் சிறந்த பாட்டுக் கச்சேரிகளும், காலட்சேபங்களும் நடைபெறுகின்றன. ஆகையால் நாம் எல்லோரும் நம்மால் முடிந்தவரை காணிக்கைகளோ, பொருள்களோ கொடுப்பதினால் நாமும் பலன் அடையலாம், விழாக்களும் சிறப்பாக நடைபெறும்.

தேர்த்திருவிழாவில், சிறிய தேராக இருந்தாலும்கூட, அதை இழுப்பதற்கு நூற்றுக்கணக்கில் மக்கள் தேவைப்படுகிறார்கள். ஊரில் உள்ள பொதுமக்கள் எல்லாம் ஒத்துழைத்தால் தான், தேர்த்திருவிழா சிறப்பான முறையில் நடத்த முடியும். வெளியூர்களிலிருந்து வரும் பக்தர்களும், பயணிகளும் நம் ஊரில் நடக்கும்

தேர்த் திருவிழாவைப் பார்த்து ஆச்சரியப்படாமல் இல்லை. ஒரு வருடத்தில் இரண்டுமுறை தில்லை நடராசப் பெருமான் மாடவீதியைச் சுற்றி வருகிறார். சாதாரணமாக ஒவ்வொரு பக்கமும் நடராசரைத் தூக்கி வருவதற்கு 10 ஆட்கள் இருந்தால்போதும். ஆனால் பக்தியின் காரணமாக ஒவ்வொரு பக்கத்திற்கும், 20, 30 பேர்கள் வருகின்றார்கள். எல்லாரும் நல்ல திடகாத்திரமான பலசாலிகள். புதிதாகஒருவர் அவரைத் தூக்க வருவதாக இருந்தால், ஏற்கனவே இருந்த நபரைத் தள்ளிவிட்டுத்தான் வர வேண்டும். இப்படி 20, 30 பேர் நிற்பதற்குக் காரணம், பகவான் மேலுள்ள விருப்பமே ஆகும். இவ்வாறு ஒத்துழைப்புக் கொடுப்பவர்கள் சிலர் உயரமாக இருப்பார்கள். சிலர் குட்டையாக இருப்பார்கள். அவ்வாறு அவரைத் தூக்கிச் செல்லும்போது உராய்ந்தும், இடித்தும் கஷ்டப்படுகிறார்கள்.

ஒரு வருடம் மழை அதிகமாக இருந்ததன் காரணமாகத் தேர் மண்டபத்திலிருந்து நடராசர் புறப்படவில்லை. தேர்மண்டபத்தில் சுமார் 11 மணியாகியும் மழை நிற்காததால், மாடவீதி எல்லாம் வெள்ளத்தில் மூழ்கி இருந்தது. அன்றைய தினத்தில் தேர்விழாவை நடத்துவது உசிதம் அல்ல எனக் கருதி, நடராசரை மறுபடியும் 1000 கால் மண்டபத்திற்கு எடுத்துச் செல்லத் தீர்மானம் எடுக்கப்பட்டது. அந்நேரத்தில் நானும் என்னுடைய முன்னாள் மாணவர் டாக்டர் அரங்கசாமியும் அங்குச் சென்றோம். அப்போது அங்குள்ள தீட்சிதர் ஒருவர் என்னைப் பார்த்து, 'டாக்டர் ஐயா! உங்களுக்குத்தான் நடராசரை மிகவும் பிடிக்குமே, சுவாமியைத் தூக்குங்கள்' என்று சொன்னார். அளவு கடந்த மழை காரணமாக, நாங்கள் கொஞ்சம் பேர்தான் அங்கு இருந்தோம். ஒவ்வொரு பக்கமும் 10 பேர் இருந்தோம். நாங்கள் சிரமம் இல்லாமல் சுலபமாக நடராசரைத் தூக்கிக் கொண்டு, மழையில் நனைந்து கொண்டே கோயிலில் சேர்த்தோம். இவையெல்லாம் தூக்கி எனக்குப் பழக்கம் இல்லாமையால் தோள் வலி ஏற்பட்டது. ஆனால் நடராசரை உண்மையிலேயே தூக்க வேண்டும் என்ற ஆர்வத்தில் தூக்கினேன். தோள் வலி அதிகமாக இருக்கிறதே; வேறு யாரேனும் வந்து நமக்குப் பதிலாகச் சுவாமியைத் தூக்க முன் வரமட்டார்களா? என்று மனத்தில் நினைத்தேன். ஆனால் வெளியில் ஒன்றும் சொல்லவில்லை. இவ்வாறு என் மனதுக்குள் நினைத்தமாத்திரத்திலேயே, ஒரு திடகாத்திரமான நபர் உடனே வந்து''டாக்டர் சார்! நீங்கள் விட்டுவிடுங்கள். நான் தூக்குகிறேன்'' என்று சொல்லி எனக்குப் பதில் தூக்கிக் கொண்டார். பின்பு நான் அவரிடம் யான் தூக்கிய தண்டின் இடத்தை விட்டுவிட்டுப் பின்பக்கமாக ஆயிரக்கால் மண்டபம் சென்றேன். இப்படி விடாமழையிலும்கூட 40 பேர் சுவாமியைத் தூக்கிச் சென்றார்கள். ஆனால் மக்கள் ஆயிரக்கணக்கில் பெருங்கூட்டமாக இருக்கும்போது போட்டியிட்டுக் கொண்டும், இடித்துப் புடைத்துக் கொண்டும், அவரைத் தூக்குவார்கள். ஆனால் அன்று மழையின் காரணமாக நாங்கள் நாற்பது பேர் மட்டும் அவரைத் தூக்கிச் சென்றோம். இதைத் தவிர அங்கு அன்று நூறு பேர்தான் இருந்து இருக்கலாம். ஒவ்வொருவரும் நடராசருக்குப் பணி செய்ய வேண்டும் என்ற அளவுகடந்த ஆசையின் காரணமாக எல்லாரும் முன்வருவார்கள். சாதாரண நாட்களில் இளைஞர்கள் போட்டி போட்டுக் கொண்டு, நாங்கள் தூக்குகிறோம் என்பார்கள். ஏற்கனவே தூக்குபவர்கள் இளைஞர்களுக்குப் போட்டி வைத்து, வெற்றி பெறுபவர்களுக்கே அவரைத் தூக்க அனுமதிப்பார்கள். தோற்றுவிட்டவரைநீக்கிவிடுவார்கள். இன்றைக்கும் இந்தப் போட்டியைப் பார்க்கலாம்.

நான் அன்றைக்கு நடராசாவைத் தூக்கிச் சென்றது என்னுடைய புண்ணியம் என்றே கருதுகிறேன். அவ்வாறான சந்தர்ப்பம் கிடைப்பது மிகவும் கடினம். தரிசனம் கிடைப்பதே கடினம். அதிலும் சௌகரியமாக நன்றாகப் பார்ப்பது என்றால் மிகவும் அபூர்வம். அப்படி இருக்கும்போது, முரட்டு வாலிபர்கள் போட்டி போட்டுக் கொண்டு அவரைத் தூக்க வருகின்ற சமயத்தில், என்போன்ற சாதாரண மனிதர்கள் அவரைத் தூக்க முடியாது. அப்படி இருந்தும் அந்த வருடத்தில் நடராசர் புறப்படுகிறநேரத்தில், நான் போய்ச் சேர்ந்தேன். 'அப்பா உன்னை இவர்கள் எல்லாம் தூக்குகிறார்களே, எனக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைக்கவில்லையே' என்று நான் மனதில் வேண்டினேன். அப்போது காலை மணி 6.00. அந்த நேரத்தில் மழை கொட்டியது. அப்போது நான் கனவிலும் நினைக்கவில்லை. நான் பிரார்த்தித்து ஐந்து மணி நேரத்திற்குள், நான் கேட்டது கிடைக்கும் என்று. இது பணம் கொடுத்து வாங்கக் கூடிய காரியம் அல்ல. உள் அன்புடன் நாம் கடவுளைப் பிரார்த்தித்தால், அவர் அதை நமக்கு அருளிச் செய்வார். அவ்வாறு நமக்குக் கடவுள் கொடுக்கவில்லை என்றால், நாம் நொந்து கொள்வது சரியல்ல. அவர்நம்முடைய நன்மையைக் கருதியே இவ்வாறுசெய்வதில்லை. நாம் சிறு பிள்ளைகள். நம்முடைய தாய் தந்தையர்கள் நாம் கேட்கும் பொருள்களில் நமக்கு நல்லது எதுவோ அதனையே நமக்குத் தருவார்கள். ஒவ்வொரு சமயத்தில் நாம் கேட்பதைத் தரமாட்டார்கள். ஆனால் சில சமயங்களில் நாம் கேட்பதை உடனேகொடுத்து விடுவார்கள். அதன் மூலம் நமக்கு நல்லபாடம் கற்பிக்க வேண்டும் என்பதற்காகவே அவ்வாறு செய்வார்கள்.

அனேகம் பேர் கடவுளை நாம் எதுவும் கேட்கக்கூடாது; அவ்வாறு கேட்பது சரிஅன்று; நிஷ்காமியமாகப் பயன் கருதாமல் பணி செய்ய வேண்டும் என்று சொல்வதுண்டு. அது ஒரு வகையில் சரிதான். ஆனாலும் நமக்கு வேண்டியதை, நாம் கடவுளிடம் கேட்கலாம்; கடவுள் நம் தந்தை தாய்; நாம் அவருடைய குழந்தைகள். ஆதலால் அந்த உறவின் உரிமையில், நமக்கு வேண்டியதை நாம் கடவுளிடம் கேட்பது, அதற்காகப் பிரார்த்தனை புரிவது தவறு அல்ல.

திருஞானசம்பந்தர், மாணிக்கவாசகர், சுந்தரர், இராமலிங்க சுவாமிகள் ஆகியோர்கள் கூட, கடவுளிடம் வரம் கேட்காமல் இல்லை. அவரை அப்பா என்று நினைத்துக் கேட்டிருக்கிறார்கள். ஞானசம்பந்தரின் தகப்பனார் சிவவேள்வி செய்யப் பொருள்இல்லையேஎன்று கவலைப்பட்டபொழுது, தம் தகப்பனார் பொருட்டு ஞானசம்பந்தர் பிரார்த்தனை செய்யச் சிவபெருமான் அவருக்கு ஒரு பொற்கிழியை அளிக்கின்றார். அதுபோலச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் இறைவனிடம், தன்மனைவியார் பரவை நாச்சியாருக்காக நெல் வேண்டுகின்றார். நெல் கிடைக்கிறது. சுந்தரர் அதை எப்படித் தம் சொந்த ஊரான திருவாரூருக்கு எடுத்துச் செல்வது என்று கவலையுற்று, சிவபெருமானைப் பிரார்த்திக்கின்றார். அப்போது சிவபெருமான் குண்டையூர் என்னும் இடத்தில் இருந்து, சுந்தரரும், பரவையாரும் வாழ்ந்திருந்த திருவாரூருக்கே அந்த நெல் போய்ச் சேரும்படி செய்கிறார். நாம் நமக்கு வேண்டிய பொருளை நம்முடைய பெற்றோர்களிடம் தயக்கம் இல்லாமல் கேட்கிறோம். அவ்வாறு கேட்பது தவறில்லை. அந்தப் பொருள் நமக்கு நன்மை அளிப்பதாக இருந்தால் நமக்குக் கொடுக்கிறார்கள். கெடுதல் தருவதாக இருந்தால், நமக்குக் கொடுக்க மறுக்கிறார்கள். நமக்குக் கொடுக்கவில்லையென்பதால் நாம் வருத்தப்படவேண்டியதில்லை. அது பின்னர் நமக்குக் கிடைக்கும். இப்போது நம் நன்மைக்காகவே கடவுள் நமக்குக் கொடுக்கவில்லை என்பது பின்னர் விளங்கும்.

ஆகையால் நாம் எல்லாக் காரியத்தையும் கடவுளை நினைத்து அன்புடன் பிரார்த்தனை செய்தால், நமக்கு ஒருவிதக் கெடுதலும்வராது. நமக்கு வேண்டிய எல்லாவற்றையும் அவரே கவனித்துக் கொள்வார்! பிரார்த்தனையால் நிச்சயம் பெரும்பயன் விளையும். அதைத்தான் திருமங்கையாழ்வார் கீழ்க்கண்டவாறுசொல்லுகிறார்.

''துஞ்சும்போது அழைமின்! துயர்வரில் நினைமின்!
துயரிலீர் சொல்லிலும் நன்றாம்!
நஞ்சுதான் கண்டீர் நம்முடை வினைக்கு
நாராயணா என்னும் நாமம்''

---

# " அப்பர்; தமிழ்நாட்டுத் தந்தை "

மன்னர்மன்னன் எனத்திகழ்ந்த மகேந்திரனின் வன்கண்மை மாற்றி ஆட்கொண்(டு)
அன்னவனுல் தமிழகத்தில் அருங்கருங்கற் றளிகள்பல அழகின் ஓங்கி,
முன்னம் இலாப் பெருநிலையில் முதன்முதலா முகிழ்க்கவைத்த, முனிவர் அப்பர்
என்னின், அவர் பெருந்தகைமை, பேருதவி நலங்களுக்கோர் எல்லை யுண்டோ? (1)

நமை அரசன் செய்வதெவன்? '' நாம் ஆர்க்கும் குடியல்லோம் '' என நவின்றே,
இமயமுதற் குமரிவரை எண்ணிலபல தலங்கள்சென்று, இறைவற் போற்றித்,
தமிழ்மொழியும் தமிழ்க்கலையும் தமிழ்ப்பண்பும் எலாம்தழைக்கச் செய்த, சைவ
சமயநெறி மெய்யுணர்வின் தலைவர் அப்பர் எனின், அவர்தம் சால்பென் சொல்கேம்? (2)

உண்ணு நோன்பு கடைப்பிடித்தும், உண்மை அறப்போர் உளுற்றிநின்றும்,
விண்ணேர் தாமும் வியந்துவப்பப் புலன்கள் செற்று வெற்றிகொண்டும்,
மண்ணேர் வாழச் சிறந்தநல்ல மக்கட் பணிகள் பலபுரிந்தும்,
தண்ணர் அருளால் உலகஒளி தான்ஆம், அப்பர் தாள் பணிவாம்! (3)

இந்நாளில் நாம்காண இனியநல்ல காந்தி அண்ணல், உலகம் எல்லாம்
என்னேமற் றிவர்பெருமை எனவியப்ப, வாழ்ந்திருந்தார்! இனிதி வர்போல்,
அந்நாளில் ஆயிரத்து முந்நூறு ஆண்டுகளின்முன், அப்பர் என்னும்
நம்நாவுக் கரசர்பிரான் நனிவாழ்ந்தார்! இவர்களைநாம் நயந்து வாழ்வாம்! (4)

இலக்கியத்தில் ''தமிழன்'' எனும் இனியசொல்லை, முதன்முதலா இணைய வைத்தே,
கலக்கமறத் ''தமிழன்'' எனக் கடவுளையும் தான்கண்டு, கனிவிற் போற்றி,
நிலைத்தகைய திருவிருத்தம், நேரிசை, தாண் டகம் முதலா, நெஞ்சு ருக்கும்
நலத்தகைய கவிதைபொழி, நாவரசாம் அப்பர் பிரான் நற்றுள் போற்றி! (5)

சூலைநோய் தலைக்கீ டாகத் தொல்சிவ நெறிக்கு மீண்டு,
மூலையும் முடுக்கர் தோறும் முத்தமிழ் முழங்கும் வண்ணம்,
சாலநற் புரட்சி செய்த தமிழ்நாட்டுத் தந்தை யாகும்
சீலமார் அப்பர் பெம்மான், சிறப்பெலாம் போற்றி உய்வாம்! (6)

—ந. ரா. முருகவேள்

# பதரிநாதன் — நரநாராயணன்

திரு. ந. சுப்புரெட்டியார், M.A., Ph.D.,

HR&CE Administration Dept

வைணவ சமயத்தின் மூலமந்திரமாக இருப்பது திருமந்திரம். தன்னை ஜபிக்கின்றவர்கட்கு இரட்சகமாயிருத்தலின் 'மந்திரம்' என்ற திருநாமத்தைப் பெற்றது. முன் ஒரு காலத்தில் சமுசாரிகள் பகவானுக்கு அடிமைப்பட்டிருத்தலாகிய தங்கள் நிலையையும், தங்களை ஒரு காரணமுமின்றி ஆட்கொள்பவனாகிய பகவானுடைய தன்மையையும் மறந்தனர். இங்ஙனம் மறந்ததனால் ஈசுவரனுக்குத் தாங்கள் புரியவேண்டிய அடிமைத் தொழிலாகிய சிறந்த பலனையும் இழந்தனர். இந்த இழப்பைப் பற்றிய சிந்தனை சிறிதுமின்றிச் சமுசாரமாகிய பெருங்கடலில் விழுந்து ஆதியாத்மிகம் (தன் உடலையும் மனத்தையும் பற்றி வருவன), ஆதி பௌதிகம் (பேய், துட்ட விலங்குகள், மனிதர், இராக்கதர் முதலியவர்களால் ஏற்படுவன), ஆதி தைவிகம் (காற்று, மழை, வெயில், இடி முதலியவற்றால் நிகழ்வன) என்னும் மூவகைத் துன்பங்களால்உழன்று கொண்டிருந்தனர்.

இந்நிலைகளைக் காணப்பொறுக்க முடியாத 'தாயும்' 'தந்தையுமான' எம்பெருமான் இச் சேதனர்கள் தங்களையும் (ஆன்ம சொருபம்), தன்னையும் (பரமான்ம சொருபம்) அறிந்து தானாகிய மரக்கலத்தைக் கொண்டு தங்கள் பிறவிப் பெருங்கடலைக் கடந்து வீடுபேறாகிய கரையைஅடைவதற்கேற்றஅறிவைப் பெறும் பொருட்டுத் தானே சீடனும் ஆசாரியனுமாய் நின்று, அநாதியானதும் அர்த்த பஞ்சக ஞானத்தைச் சுருக்கமாகத் தெரிவிப்பதுமான திருமந்திரத்தை வெளியிட்டருளினான். சீடனுடைய இலக்கணங்களை உலகினர் நன்கு அறிந்து கொள்ளாமையின் இவற்றைத் தன் செயல்களினால் அறிவித்தற் பொருட்டே, தான் சீடனாய் நின்றான்.

சத்திய யுகத்தில் பதரிகாச்சிரமத்தில் தர்மதேவனுக்கும் தட்சப் பிரஜாபதியின் மகளாகிய மூர்த்தி தேவிக்கும், நரன், நாராயணன் என்ற பெயர்களுடன் விஷ்ணுவின் அவதாரங்களாகப் பிறந்தவர். பிறந்தவுடனே குழந்தைப் பருவம் நைமிசாரணியத்தில் முதலிலும் பின்னர்க் கந்தமாதன பருவத்திலும் தம் தவ வாழ்க்கையைத் தொடங்கினர். பின்னர்த் தேவர்கள் முனிவர்கள், மக்கள் இவர்கட்குக் குருசிஷ்ய முறையை நன்கு விளக்கும் பொருட்டுப் பதரிகாச்ரமத்திற்கு வந்தனர். நாராயணன் நரனுக்குத் திருமந்திரத்தை உபதேசித்தருளினன். துவாபரயுகத்தில் இவர்களே கண்ணனாகவும் அர்ச்சுனனாகவும் பிறந்தனர்.

இந்த வரலாற்று எண்ணங்கள் நம் மனத்தில் குமிழியிட நம் பதரிகாச்சிரமத் திருத்தலப் பயணம் தொடங்குகின்றது. திருவதரி இமய மலையில் கடல் மட்டத்திற்கு 10380 அடி உயரத்தில் உள்ளது. ஹரித்துவாரத்திலிருந்து 202 மைல் தொலைவிலுள்ளது. அண்மையில் உத்திரப் பிரதேச அரசு, வதரி வரை மலைச் சாலையை அமைத்துள்ளது. வதரி செல்லும் நாம் இரயில் மூலம் வந்து ஹரித்துவாரத்தில் இறங்குகின்றோம். பேருந்து வசதியும் உண்டு. இது கடல் மட்டத்திற்கு மேல் 924 அடி உயரத்தில் உள்ளது. ஹரித்துவாரம் ஒரு பெரிய ஊர். தங்குவதற்கு எல்லா வசதிகளையுமுடைய சத்திரங்கள் உள்ளன. அவற்றுள் ஒன்றில் தங்குகின்றோம். பின்னர் விஷ்ணுபாதம் எனப்படும் கங்கையின் படித்துறையில் நீராடுகின்றோம்; பின்னர்த் திருக்கோயிலில் எம்பெருமான்களைச் சேவிக்கின்றோம். இந்த விஷ்ணுபாதம் பிரம்மகுண்டம் என்ற பெயராலும் வழங்கப் பெறுகின்றது. இங்கிருந்து கங்கை தெளிவான நீருடன் சமவெளிக்கு இறங்குகின்றது. இங்கு நாம் கங்கா தீர்த்தத்தைச் சிறிய செப்புப் பாத்திரத்தில் எடுத்து அடைத்துக் கொள்ளுகின்றோம்.

இங்கிருந்து 15 மைல் தொலைவிலுள்ளது இருஷிகேசம் என்ற திருத்தலம். இதுவும் கங்கைக் கரையில்தான் உள்ளது. கடல் மட்டத்திற்கு மேல் 1116 அடி உயரத்திலுள்ளது. இங்குத் திரிவேணி முதலிய பல படித்துறைகள் உள்ளன. இங்குள்ள சத்திரம் ஒன்றில் தங்கி, தென்னாட்டு உணவு விடுதியொன்றில் உணவு கொள்கிறோம். திரிவேணியில் நீராடி இருஷிகேசவரைச் சேவிக்கிறோம். சிவாநந்த ஆச்ரமம், பிர்லா குடும்பத்தினரால் நிறுவப் பெற்ற சீதா பவனம் என்ற இடங்களைச் சென்று காண்

கின்றோம். இங்கிருந்து அரசுப் பேருந்துகள் திருவதரியை நோக்கிப் புறப்படுகின்றன. இவற்றுள் ஒன்றில் ஏறிக் கண்டம் கடிநகர் (தேவப்பிரயாகை), திருப்பிரிதி (ஜோஷிமடம்) ஆகிய தலங்களைச் சேவிக்கின்றோம். பின்னர் வதரிக்கு வருகின்றோம்.

வழியில் வதரியிலிருந்து 5 மைல் தொலை விலுள்ள அநுமன் சட்டி என்ற இடத்தைக் காண்கின்றோம். இது கடல் மட்டததிலிருந்து 8,000 அடி உயரத்திலுள்ளது. பாண்டவர்கள வனவாசத்தின்பொழுது இநத இடத்தில்தான் வீமன் அநுமனைச் சநதித்ததாகவும், இருவரும் போரிட்டுத் தம்தம் பலததைச் சோதித்துக் கொண்டதாகவும், இறுதியில் தாம் வாயுவின் மக்கள் என்று அறிந்து கொண்டதாகவும் வர லாறு.

அநுமன் சட்டியிலிருந்து இரண்டு கல் பயணம் செய்தவுடன் திருவதாியின் திருக் காட்சியைக் காணத் தொடங்குகின்றோம். இக் காட்சி கண்ணில் பட்டதும், பல்வேறு இடை யூறுகட்குப் பிறகு,

''பிண்டிஆர் மண்டை ஏந்திப்
பிறர்மனை திரிதந் துண்ணும்
முண்டியான் சாபம் தீர்த்த
ஒருவன் ஊர்''

என்று திருமங்கையாழ்வார் குறிப்பிடும் வதரியை அடைந்த பேரின்பம் முகிழ்க்கத் தொடங்குகின்றது; மனமும் அமைதியடை கின்றது. திருக்கோவிலிலிருந்து 2 பர்லாங் தொலைவில் பேருந்து நிலையம் உள்ளது; இஃது இருப்பது அலகநந்தா நதிக்கரையில். இதன் அருகில் பல சத்திரங்கள், தங்கும் விடுதிகள், நீண்ட கடைத் தெரு ஆகியவை உள்ளன.

வதரியை அடைவதற்கு அரைமணி நேரத் திற்கு முன்னதாகவே பருத்தியாடையை நீக்கிக் கம்பளி ஆடையை உடுத்திக் கொள்ள வேண்டும். கோடைக் காலத்தில் ஒரு கம்பள மேலங்கி, கம்பளச் சால்வை, தடித்த கம்பளி இவை இருக்க வேண்டும். விடுதியொன்றில் தங்குகின்றோம். திருக்கோயிலுக்கும் அலக நந்தா நதிக்கும் இடையில் 'தப்த குண்டம்' உள்ளது. நாள் முழுவதும் வெந்நீர் ஊற்று களிலிருந்து வரும் வெந்நீரால் அடிக்கடி இது நிரப்பப் பெறுகின்றது. இதில் நீராடியதும் நமக்கு ஒருவித புத்துணர்ச்சி ஏற்படுகின்றது. நர-நாராயணனின் சேவைக்குத் தயாராகிவிடு கின்றோம். இதனையடுத்துச் சில அடி தூரத் தில் உள்ள ''சிம்ம துவாரத்''தைச் சேவித்த பிறகு தான், திருக்கோயிலுக்குப் போக வேண்டும்.

பதரி என்பது வடமொழியில் இலந்தை மரத்தின் பெயராகும். அம்மரங்கள் அடர்ந்து கிடக்கும் இடம் வதரி. வதரிநாதன் எழுந் தருளியிருக்கும் திருமலை முழுவதும் வதரி யாகும்; அவன் எழுந்தருளியிருக்கும் இடம் வதரிகாச்ரமம் ஆகும். இலந்தைப் பழம் பெரிய பிராட்டியாரின் திருவுகப்புக்குரியது. திருக்கோயில் முழுவதையும் சூழ்ந்த நிலையில் ஒரு பெரிய இலந்தை மரம் உள்ளதென்றும், கலியுகத்தில் அது மக்கள் கண்கட்குப் புலனா காது என்றும் சொல்லப் பெறுகின்றது. இந்த மரத்தின் அடியில்தான் வதரி நாராயணன் சடைமுடி கொண்ட தவசி வடிவில் இரு திருக் கைகளில் திருவாழி திருச்சங்கு தாங்கிய நிலை யிலும், மற்ற இரு கைகளில் அபய வரத முத் திரையுடனும், பத்மாசனத்தில், இருந்த திருக் கோலத்தில், கிழக்கே திருமுகமண்டலம் கொண்டு சேவை சாதிக்கின்றான். தாயாரின் திருநாமம் அரவிந்தவல்லி நாச்சியார். இவரை வணங்கிப் பிரமமாநந்தம் பெறுகின்றோம்; தாயாரின் திருவருளுக்கும் பாத்திரர்களாகின் றோம்.

வதரி நாராயணனின் திருக்கோயிலின் சுற்று 100 அடி நீளமும், 60 அடி அகலமும் உள்ளது. திருக்கோயில் கண்ணுக்குப் பெருமித மாகத் தோன்றாவிடினும், பெருங்கற்களாலும் மரத்தாலும், துத்தநாகத் தகட்டாலும்கட்டப் பெற்றுள்ளது. ஆகவே பராமரிப்புச் செலவு சிக்கனமாக உள்ளது. திருக்கோயிலில் பயணி களை ஆண்கட்குத் தனியாகவும், பெண்கட்குத் தனியாகவும் வரிசையில்தான் விடுகின்றனர். ஒவ்வொருவரும் ஐந்து மணித்துளிகள் நர-நாராயணனைச் சேவிக்கலாம். அதற்கு மேல் சேவிக்க விரும்புவோர் மீண்டும் வெளியில் வந்து வரிசையில் சேர்ந்து போகலாம். அபி ஷேகம், திருமஞ்சனம், அருச்சனை, கர்ப்பூ ரார்த்தி முதலியவற்றிற்குக் கட்டணம்செலுத்து வோர் கருவறையின் அருகில் அநுமதிக்கப் பெறுகின்றனர். இப்பொழுது உள்ளம்விரும்பும் வரையில் எம்பெருமானைச் சேவித்து மகிழ லாம். தலைமை அருச்சகரை இரவல்ஜி என வழங்குகின்றனர். இவர் கேரள நம்பூதிரி அந்த ணர்களிடமிருந்தே தேர்ந்தெடுக்கப் பெறுவர். திருத்தலப் பயணிகளில் வேண்டுவோருக்கு இவர் இறைவனின் திருமுகம், திருமேனி முதலியவற்றை விளக்குவார்.

திருக்கோயிலின் பிராகாரத்திற்குள் ளேயே இலக்குமிதேவி, ஆதிசங்கரர் இவர் கட்குத் தனித்தனி சிறு கோயில்கள் உள்ளன. திருக்கோயிலின் இடப்புறத்தில் என்றும் பஜனைக் குழாங்கள் இருந்து கொண்டேஇருக் கும். உருத்திர வீணைக் கலைஞர் ஒருவர் தலைமையில் சதா இசை விருந்து நடை பெற்றுக் கொண்டே இருக்கும். இப்பெரிய கோயிலின் பின்புறத்தில் இலக்குமி நரசிம்ம ருக்கு ஒரு தனிக்கோயில் உள்ளது. இங்கு வேதாந்த தேசிகர், இராமாநுசர் இவர்களு டைய திருமேனிகள் நிறுவப் பெற்றுள்ளன. திருக்கோயிலின் அருகில் 'பிரம்ம கபாலம்' என்ற திருநாமத்துடன் ஒரு பெரும் பாறை உள்ளது. இங்குத் திருத்தலப் பயணிகள் தம் முன்னோர்கட்குப் பிண்டம் சமர்ப்பித்துத் தர்ப்பணம் செய்வர்.

இத்திருக்கோயில் உள்ள இடத்தை 'விசாலபுரி' என வழங்குவர். எல்லாப் பக்கங்

களிலும் திருக்கோயில் பனிவரைகளால் சூழப் பெற்றுள்ளது; திருக்கோயிலின் முன்புற மிருப்பது நர - நாராயண மலையாகும்; வலப் புறம் இருப்பது நீலகண்ட மலையாகும். வழி யில் திருத்தலப் பயணிகள் ஒருவரையொருவர் சந்திக்கும்பொழுது 'போலோ பதரி விசால் கி ஜெய்; 'போலோ பதரிநாராயணன் கி ஜெய்' என்று குரல் எழுப்பி வரவேற்றுப் புகழ்பாடி மகிழ்வர். வதரி நாராயணனைப் பெரியாழ் வார்,

'' வடதிசை மதுரை சாளக்கிராமம்
வைகுந்தம் துவரை அயோத்தி
இடம்உடை வதரி இடவகைஉடைய
எம்புரு டோத்தமன் இருக்கை ''

என்று கண்டம் திருப்பதி எம்பெருமானை மங்களாசாசனம் செய்யுங்கால் குறிப்பிடுவர். திருமங்கையாழ்வார் சிறிய திருமடலில், 'பாரோர் புகழும் வதரி' என்று குறிப்பிடுவ துடன் திருவதரித் திருமலையைத் திருவுள்ளம் பற்றி ஒரு திருமொழியாலும், வதரி நாராயணன் தவம் புரிந்த இடமாயும் தானே சீடனாயும் ஆசாரியனாயும் நின்று திருமந்திரத்தை வெளி யிட்டருளின இடமாயும் உள்ள வதரிகாச்ரமச் சிறப்பைத் திருவுள்ளம் பற்றி ஒரு திருமொழி யாலும், மங்களாசாசனம் செய்கின்றார்.

நர-நாராயணன் உகந்தருளின இடம் வதரித் திருமலை. அதுவும் ஆழ்வாருக்கு உகப் பாகின்றது. ''திருவேங்கட மாமலை, ஒன்றுமே தொழ நம் வினை ஓயுமே' என்று கூறிய நம் மாழ்வாரைப் பின்பற்றி இவரும் மலையையே சேவிக்கின்றார். பாசுரந்தோறும் 'வதரி வணங்குதுமே, வதரி வணங்குதுமே' என்று குறிப்பிடுகின்றார். வதரி இருக்கும் இமய மலைப் பகுதியோ 'கண்டியூர் அரங்கம் மெய் யம் கச்சிபேர் மல்லை' என்னும் திருப்பதிகள் போலன்றி மிகச் சிரமத்துடன் அடையக்கூடிய இடமாதலால், உடல் பாங்காக இருக்கும் பொழுதே, சென்று சேவிக்க வேண்டுமென்று ஆற்றுப்படுத்துகின்றார். வதரியை 'மது உண் வண்டு பண்கள் பாடும் வதரி' 'ஆயிரம் நாமம் சொல்லி, வெளி கொள் வண்டு பண்கள் பாடும் வதரி', 'வாளைபாயும் தண்டம் சூழ் வதரி' என்று மலையின் இயற்கைக் காட்சியில் மனத் தைப் பறிகொடுக்கின்றார். 'வண்டு பாடும் தண்துழாயான் வதரி' என்று எம்பெருமான் திருக்கோயில் கொண்டுள்ள இடம் வதரி என் பதையும் குறிப்பிடுகின்றார். எம்பெருமானை யும் 'வைப்பும் நங்கள் வாழ்வும் ஆனான்' என்றும், 'மைத்த சோதி எம்பெருமான்' என் றும், 'வாசம் மல்கும் தண் துழாயான்' என்றும் போற்றிப் புகழ்கின்றார்.

வயோதிகப் பருவத்தை இவர் வருணிக்கும் திறம் நெஞ்சில் நிலைத்து நிற்கும் தன்மையது. உடலுக்குக் கிழத்தனம் வருங்கால் ஊன்று கோல் அவசியமாகின்றது. முதுகு கூனிட்டுப் போகின்றது. தடியை ஊன்றிக் கொண்டும் நடக்க முடியாத நிலை. விழுந்தும் எழுந்தும் பெருமூச்சு விட்டுக் கொள்ளும் சிரமநிலை. கிழத்தனத்தில் நாலடி நடந்தாலும் முதுகு நோகும்; முன்பக்கம் விழாமைக்காகத் தண் டூன்றிக் கொள்ள வேண்டியநிலை. நடக்குங் கால் உடல் நடுங்கும்; கண்கள் சுழலும்; பெரிய ஒலியுடன் இருமலும் உண்டாகும். இளமைப் பருவத்தில் மறைந்து கிடந்த நரம்புகள்முதுமை யில் உடல் பசையற உலர்ந்தபடியால், உறிகள் போலே நீண்டு கொத்துக் கொத்தாகக் கிளம் பித் தோன்றும்; தசையும் ஒடுங்கி மனமும் நலிவு படும்; இப்படிப்பட்ட நிலைமையிலும் கம்புடன் புறப்பட்டு எங்காவது போகத்தோன் றும்; நெடிய வழியைப் பார்த்தவாறே கண்கள் சுழலும்; அடி பெயர்ந்து போகமாட்டாமல் நடுங்கி நிற்கும் நிலை. கண்கள் சுருங்கிப்போய் அவற்றினின்றும் பீளை பெருகவும் பித்தம் மேலிட்டுத் தலை சுற்றித் தடுமாறி நடக்க வும் இயல்பு. இளமையில் பாவையர் விரும்பும் நிலையில் இருந்தமையும், அவர்தம் இதழமு தம் பருகி நின்றபடியையும் சிற்றின்பங்களில் ஆழங்கால்பட்ட நிலையையும், சொல்லுவது, பின்னர் இருமுவது, மீண்டும் சொல்லுவது, இருமுவது, ஆக இந்நிலையுடன் தடியைக் காலாகக் கொண்டு தடுமாறி நடக்கவேண்டிய நிலை.

மேலும் கிழத்தனத்தின் நிலையை எடுத் துக் காட்டுகின்றார். கிழத்தனத்தில் ஒரு சொல்லைப் பகர நேர்ந்தால் அது குதலைச் சொல்லாக வெளிப்படும்; அத்துடன் கபமும் வந்து விழும்; கூடவே இருமலும் வந்துசேரும்; இவ்வளவால் உடலும் அதிகமாகச் சோர்வுறும். இந்நிலையிலும் வாயை மூடிக்கொண்டுசும்மா இராமல் பைத்தியம் பிடித்தவர்கள் போல் எதையாவது உளறிக் கொட்டுவார்கள். பேச முடியாமல் ஆயாசம் மேலிட்டு விடும். தண்டு காலூன்றி தளர்ந்து நடந்து கொண்டு தாம் நெடுநாள் பழகின மின்னிடை மடவார் வீதி யில் செல்லுங்கால் அவர்கள் பரிகசிப்பார்கள். முற்றமூத்துக் கோல்துணையா முன்னடி நோக்கி வளைந்து சென்று குறடேறும்போதே துரத்தி அடிப்பார்கள்; தெருத்திண்ணையில் உட்காரவும் அனுமதியார்கள். அப்படி வெருட் டும் போதும் பீளைக் கண்களுடன் பாசம் ஒழியாது மயங்கி நிற்பர். கருமேந்திரியங்களும் ஞானேந்திரியங்களும் சிதிலமான நிலையில் அடியெடுத்து வைக்க முடியாது ஒரு மூலையில் கிடந்து கண்டபடி பிதற்றுவர். இந்த அவல நிலை தோன்றுவதற்கு முன்னர் வதரியை வணங்குமாறு ஆற்றுப்படுத்துகின்றார் ஆழ் வார். இங்ஙனம் வதரிநெடுமாலைப் பாடியும், பாட்டுக்குத் தகுதியாக ஆடியும் அநுபவித்தால் நீள்விசும்பு அருளப் பெறுவர் என்று பலனை யும் சொல்லித் தலைக் கட்டுகின்றார். இந்தப் பாசுரங்களில் கிருட்டிணாவதாரத்தில் பேய்ச்சி முலையூடு உயிரை வற்றவாங்கி உண்டதும், காளையாகிக் கன்று மேய்த்துக் குன்றெடுத்து நின்றதுமான தீரச் செயல்கள் அநுசந்திக்கப் பெறுகின்றன. ஆழ்கடலைக் கடைந்துஅமுதம் கொண்ட செய்தியும் குறிப்பிடப்பெறுகின்றது.

நர-நாராயணன் எழுந்தருளியிருக்கும் ஆச் ரமத்தைப் பேசும் ஆழ்வார், பாசுரங்கள் தோறும் பொதுவாக ஆச்ரமம் இருக்கும் இடத்

தைப் பற்றியும், அங்கு எழுந்தருளியிருக்கும் எம்பெருமான் பற்றியும் பேசுகின்றார். இந்த ஆச்ரமம் ஆகாய கங்கைக் கரையிலுள்ளது. தேவர்கள் கற்பக மலர்கள் கொண்டு வந்து சமர்ப்பித்து வணங்கும் இடம். நான்முகனும் ஏனைய தேவர்களும் அடிக்கடி வந்து வழி படும் இடம். சூரியன் சுற்றிவரும் மேருமலை வரை முட்டி அங்கிருந்து கங்கை நீர் இழி வதும் மாடமாளிகைகளின் உச்சியில் நாட் டப் பெற்ற தூண்களில் கட்டப் பெற்றுள்ள துணிகள், காற்றில் அசைந்தாடுவது போல் தோன்றுவதுமான இடம். இங்குள்ள கங்கை நீரானது அப்சரஸ் மாதர்களின் சேலைகளும், மாலைகளும் திரட்டி வருவதுடன் பல்வேறு இரத்தினக் கற்களையும் உருட்டிக்கொண்டு வருவதைக் காணலாம். இங்குத்தான் அண் டத்தைச் சுமக்கும் மேருமலையின் உச்சி யிலிருந்து கங்கை இழிகின்றது.

கபில முனிவரின் சாபத்தால் சாம்பலாய்க் கிடந்த தம் முன்னோர்கள் (சகரபுத்திரர்கள்), தூய்மையடைவான் வேண்டிப் பகீரதன் தவம் புரிந்து கங்கையைக் கொணருங்கால், அது பெரியதொரு மலையைப் பிளந்து கொண்டு அங்குள்ள யானைகளைத் தள்ளிக் கொண்டு வருவதைக் காணக்கூடிய இடம். ஒரு முகமாக வந்து இழிந்தால் பெருவிசையோடு வரும் மிடுக்கைக் கடல் பொறாதென்று கருதிய தேவர்களின் பிரார்த்தனைக் கிணங்க அது பலமுகமாகப் பெருகி வருவதைக் காணலாம். இந்தக் கங்கையின் வரலாற்றையே விசுவா மித்திரன் இராமலக்குமணர்களுக்குச் சொல் லியதாகும். பகீரதன் கங்கையை அவதரிப் பித்தபோது அது பிரம்மலோகத்தை ஊடறுத் துக் கொண்டு ஆகாயத்தினின்றும் இழிந்து அங்கிருந்து பூமி நடுங்கும்படியாகப் பிரவகித் துத் தெளிந்த நீரையுடைய கங்கை செல்லும் இடம்.

இத்தகைய கங்கையின் கரையின் மீதுள்ள திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் எம் பெருமான் யாவன்? பூமிப்பிராட்டியின் பொருட்டு வராக அவதாரம் எடுத்தவன். பெரியபிராட்டியின் பொருட்டு இராமனாக வந்தவன். மாயமானாக வந்த மாரீசனை வானுலகிற்கு அனுப்பிய மாவீரன். இராமாவ தாரத்தில் இலங்கை, தெற்குமாக்கடல் இராவ ணன், அரக்கர் குலம் இவை யாவும் ஒழியும் படியாகத் தீரச் செயல்களைப் புரிந்தவன். யசோதை வடிவு கொண்டு வந்து தனக்கு நஞ்சூட்டிய முலையைத் தந்த பூதனையை முடித்தவன். நப்பின்னையின் பொருட்டு அசுரவேகமுடைய ஏழு எருதுகளை அடக்கிய வன். தான் கடல் கடைந்த காலத்தில் கடலி னின்றும் வெளிப்பட்ட ஐராவதம், அமிர்தம் ஆகியவற்றை இந்திரனுக்கு ஈந்து தேவர் கட்குத் தலைவனாயிருக்கும் தன்மையையும் அருளியவன். இப்பெருமானே மாரீசன் மீது வரிசிலை வளைத்துக் கணை தொடுத்தவன்; இரணியனின் மார்பைக் கீண்டவன்.

நான்முகக் கடவுள் சிவன் மீது சீறி அவ னுக்குக் கொடுத்த வெந்திறல் சாபத்தைத் தவிர்த்தவன். இத்தகைய எம்பெருமான் தொண்டர்களின் பிறவிப் பிணியைப் போக்கி வீடுபேற்றை அருளுபவன். 'தொழுதெழு தொண்டர்கள் தமக்குப்பிணியொழித்து அமரர் பெருவிசும்பு அருளும் பேரருளாளன்; மனமே அவனே உன்னுடைய உறுதிப் பொருளாகும்' என்று மனத்திற்கு உபதேசம் செய்கின்றார் ஆழ்வார். இந்த எம்பெருமானைப் பற்றிய இத் திருப்பாசுரங்களை ஓதுபவர்கள் மண்ணு லகை நெடுநாள் ஆண்டும், பிரம்ம பதத்தை நிர்வகித்தும், அதன் பிறகு, நித்திய சூரி களுடன் ஒருங்கே இருப்பர்.

இவ்விடத்தில் ஓர் இதிகாசம். நஞ்சீயர் ஒருநாள் பட்டரை நோக்கி, 'ஏரார் இன்னிசை மாலை வல்லார் இருடிகேசன் அடியரே', 'வைகுந்தம் ஏறுவரே' என்று பரமபுருஷார்த் தத்தைச் சொல்ல வேண்டியிருக்க, 'இருங்கடல் உலகமாள்வதான' தாழ்ந்த பலனைச்சொல்லு வதேன்?' என்றார். அதற்குப் பட்டர், ரசோக்தியாக, 'திருமங்கையாழ்வார் அவ தரித்த பின்பு தியாஜ்யமான (விலக்கப்படத் தக்க) ஐசுவரியமும், பரமபுருஷார்த்தமாய் விட்டது காணும்; பணமுள்ளவிடங்களில் சென்று கொள்ளையடித்துப் பகவத் பாகவத கைங்கரியங்கள் பண்ணுகிறவராகையாலே ஹேயமான (விடத்தகுந்த) ஐசுவரியமும் இவ் வாழ்வார் திருவுள்ளத்தால் உத்தேச்யமாய் (கருத்தாய்) விட்டதிறே' என்றாராம். யார் யார் எந்தெந்தப் பலன்களை விரும்பினாலும் அந்தந்தப் பலன்கள் இவ்வருளிச் செயல் மூல மாகக் கிடைக்கும் என்பது, இதன் உண்மைப் பொருளாகும்.

நர-நாராயணன் சந்நிதியில் இந்த இரு திருமொழிகளையும் மிடற்றொலியுடன் ஓதி உளங்கரைந்த நிலையில், திவ்விய கவியின் திருப்பாசுரம் நினைவிற்கு வர அதனையும் ஓது கின்றோம்.

''தாட்குஅடிமை என்றுதமை
உணரார்க்கு எட்டெழுத்தும்
கேட்கவெளி யிட்டருளும்
கேசவனை-வேட்கையொடு
போவதுஅரி தானாலும்
போய்த்தொழுவோம் நெஞ்சமே
மாவதரி யாச்சிர
மத்து''

இந்தத் திருப்பாசுரம் ஆன்ம சொரூபத்தை உணர்த்த வல்லது. நரநாராயணன் எழுந் தருளியிருக்கும் திருத்தலத்திற்குப் போய்த் தொழுவதற்கு அரிதாயினும், எப்படியாவது சென்று அப்பெருமானைத் தொழுது உய்வு பெறல் வேண்டுமென்று தமது நெஞ்சிற்கு அறிவுறுத்துவர் திவ்விய கவி.

இத் திருத்தலப் பயணம் என்றும்பெறாத மனநிறைவினைத் தருகின்றது; பெறற்கரிய பெரும்பேற்றைப் பெற்றதாக எண்ணுகின்றது. பரிபூர்ண பிரம்மாநந்தம் பெற்ற களிப்பையும் நல்குகின்றது. இந்த மனநிலையில் நம் இருப் பிடத்திற்குத் திரும்புகின்றோம்.

***

# மணிவாசகர் மணிமொழிகள்

பேராசிரியை டாக்டர் திருமதி கிருட்டிணா சஞ்சீவி, M.A., Ph.D.

பகுத்தறிவின் பயனே பக்தி. பகுத்தறிவின் பணி 'ஏன்? ஏன்?' என்ற வினாக்களை அடுத் தடுத்து எழுப்பி விடை காண்பதே. மனிதனே உயிருலகத்தில் பகுத்தறிவு உடையவன். எனவே அவனே 'ஏன்? ஏன்?' என்ற கேள்வியை எதற் கும் எப்போதும் எழுப்பி, அதற்குரிய விளக்க விடை பெறுகிறான். அதன் பயனாகவே விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும் வளருகின்றன. இந்த இரண்டையும் சுருக்கமாக அறிவு என் றும், உணர்வுஎன்றும் பிரித்துச் சொல்லலாம்.

அறிவு, ஒழுக்கமும் ஓய்வும் அற்றது, உணர்வு, ஒடுக்கமும் ஓய்வும் உடையது. 'ஓடக் காண்பது'அறிவு.' ஒடுங்கக் காண்பது'உணர்வு. இந்த அறிவுக்கும் உணர்வுக்கும் அப்பாற்பட்டி ருப்பதே அருள்; கடவுளின் திருவருள். அந்தத் திருவருட் பெருஞ்சக்தியே-கடவுட் சக்தியே அனைத்தையும் படைத்து, காத்து, அழிக்கிறது என்பதே சமய நம்பிக்கை. இந்த நம்பிக்கைக்கு அடிப்படைக் காரணம், அறிவிற்கு அப்பாற்பட் டதை-அறிவால் அறிய முடியாது, அளக்க முடி யாது என்பதுதான். தலையாய காரணம் அறிவு கருவி கரணங்களாலேயே செயற்படக் கூடியது. ஆனால் உணர்வோ கருவிகரணங்கள் கடந்த நிலையிலும் அறியக் கூடியது—இல்லை! இல்லை! அனுபவிக்கக் கூடியது! உணர்வின் உயரிய தன்மை இதுவாகும் வரை-அறிவின் முனைப்பு முரியும் வரை-படிப்பின் ஆணவம் பொடி பொடியாகும்வரை, மணிவாசகர் அறி வியற் பொருண்மை மிக்க, தம் திருவண்டப் பகுதியில் தெள்ளத் தெளிவாக அடுத்தடுத்த அடிகளிலேயே கூறுகின்ற,

> சித்தமும் செல்லாச் சேட்சியன் காண்க!
> பக்தி வலையில் படுவோன் காண்க!

என்னும் சொற்களின் அற்புதப் பொருளைஅனு பவத்தில் கொண்டு வருதல் அரிது! அனுபவத் தில் கொண்டு வருதல் இருக்கட்டும், அறிவால் நம்புதலும் அரிது! எனவே தான் அறிவை நம்பி, நாம் ஓயும் வரை உழல்கிறோம். அதற்கு உழைப்பு முயற்சி என்றெல்லாம் பட்டம் சூட்டு கிறோம். மாணிக்கவாசகரே சொல்வதுபோல 'அவனருளாலே அவன்தாள் வணங்கும் காலம் வரும் வரை' உயிர் வாழ்விற்கும், உயர் வாழ்விற்கும் அறிவால் அறிய - நல்லறி வால் நல்லனவற்றை அறிய, முயல்வதில் தவறு ஒன்றும் இல்லை. மாணிக்கவாசகரே அவ்வாறு அறிவு ஏற்றாலும் ஏற்காவிட்டாலும், அறிவு தன் முயற்சியால் அப்பேராற்றலைக் காணப் போராடும். ஆனால் உணர்வோஅருள் 'அறிவரியது' 'அறிவதற்கரியது' என்று'அடைக் கலம்' அல்லது சரணாகதி அடைந்து விடும். இந்த அடைக்கலம் அல்லது சரணாகதிமுழுமை யாக இருக்கும்போது, அறிய முடியாத கடவு ளைப் பேருணர்வு மயமாக அனுபவிக்கலாம் என்கிறார். இதுவே சமய நம்பிக்கை. ஆம். கண்ணால் காண முடியாத காற்றைத் தோலு ணர்வால் அனுபவிக்கிறோம் அல்லவா?! அது போலவே அறிவினும் அனுபவமே எளியது;இனி யது;இயல்வது என்பது சமயச் சான்றாண்மை. இந்தப் பின்னணியை நன்றாக மனதில் வைத் துக் கொண்டாலே எந்தச் சமய சாத்திரமும் தோத்திரமும் விளங்கும். பயன் விளைக்கும்.

சற்றொப்ப ஆயிரம் ஆண்டுகட்கு முன்பு, நமது தமிழ்நாட்டில் வாழ்ந்தவர்களாகிய சைவ சமயப் பெரியோர்கள் நால்வருள் ஒருவராகப் போற்றப்படும் மணிக்கவாசகர் பாடிய புகழ்பெற்ற திருவாசகம் 51 தலைப்பு களில் 656 பாடல்கள் கொண்டது. இத்திரு வாசகம் மட்டுமின்றி 400 பாடல்கள் கொண்ட திருக்கோவையாரும் மணிவாசகர் பாடியதே என்பர். இவ்வாறு சற்றொப்ப ஆயிரம்பாடல் கள் பாடிய மணிவாசகர் பாடல்களின் நோக்கு, பேரின்பம், கடவுட் பேரின்பம் பெறல். இதற் குரிய போக்காக, வழியாக அவர் காட்டுவது பக்திப்போக்கு, பக்தி வழி.

திருவாசகத் தொகுப்பில் முதலாவதாக இடம் பெறுவது சிவபுராணம். பெரிதும் நீத் தார் வழிபாடாக நம் நாட்டில் நடைமுறையில் பயன்படுத்தப்படும் இப்பாடல் ஒன்றேகூட, மணிவாசகரின் திருவாசகத்தின் பக்தி வழியை நாம் நன்கறிந்து நடைமுறைப்படுத்த உதவும். 95 அடிகள் கொண்ட இப்பக்திப்பாடல்,

> நமச்சிவாய வாஅழ்க! நாதன்தாள் வாழ்க!
> இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான்
> தாள்வாழ்க!
> கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க!
> ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க!
> ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க!

என்ற வாழ்த்தோடு தொடங்கி,

அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லு
வார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து

என்று பயன்கூறி முடிக்கிறது.

'சிவபுராணம்' என்ற பாடற் றலைப்பைத் தன்னகத்தே கொண்டுள்ள இப்பக்திப் பாடல், ''திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத் துக்கும் உருகார்' என்ற பழிமொழியை இன் றும் மெய்ப்பித்து வருகிறது. உருக்கத்திற்குக் காரணம் ஒலியும்,ஒளியும், ஓசையும்,உணர்வும்.

சிவபுராணத்தில் ஓதுவார் பலர் உள்ளத் தையும் உருக்கும் ஒலியும் உணர்வும் உண்மை யும் உறைந்த-நிறைந்த ஓர் பகுதியை மட்டும் நினைவு கூர்ந்து இன்புறுதல் சாலும். உரைவிளக்கம் வேண்டாமலே விளங்கி நம் அறிவுக்கும் உணர்வுக்கும் அமிழ்தமாக அமையும் அந்தப் பகுதி, வாழ்வின் பேரற மாகிய கூர்தல் அறம்(Evolution) பற்றிக் கூறும் இதுதான்:

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்
எம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனவோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே!

விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும் வேறான வையாகக்கூட இருக்கலாம். ஆனால் அவை ஒன்றுக்கொன்று மாறானவையல்ல. உண்மைக் குப் பல்வேறு முகங்கள் உண்டு. அதுவும் உண்மையை முற்றிலுமாக, முழுமையாகக் காண முடியாதவர்க்கு, உண்மை குருடர்கட்கு யானை தந்த காட்சியைப் போலத்தான் இருக் கும். விஞ்ஞான வழி அறிவுவழி, பருமைவழி. மெய்ஞ்ஞானவழி உணர்வுவழி, நுண்மைவழி, இறைவனை மணிவாசகர்,

மெய்யா விமலா விடைப் பாகா வேதங்கள்
ஐயா எனவோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே

என்று அழகுற விளக்கும் பகுதியை நினைவு கூர்ந்து மகிழலாம்.

ஆம். 'ஓங்கி, ஆழ்ந்து, அகன்ற, நுண்ணி யன்'. இந்தநால்வகை(Four dimensional)இயல்பு இறைவனுக்குரிய பேரியல்புகளுள் சிறந்த ஒன்று எனலாம். இதில் ஓரளவுக்கு மட்டுமே, நாம் அறி யக் கூடியனவற்றை மணிவாசகர் ஓதுகிறார். 'அறிதோறறியாமை' காணும் வழியில்-வகை யில். ஆம். மணிவாசகர், மானிடர்க்கு அறி வியல் உண்மைகளை உணர்த்துவது, காக்கை குருவி காட்டிப் பாற்சோறு ஊட்டும் தாய் போல! அழுக்கை அழுக்கால் அகற்றும் சலவை யாளர்போல.

சிவனது தூல சூக்குமத்தை வியந்து மாணிக்கவாசகர் திருவண்டப்பகுதியில் பாடும் பாட்டைக் கேளுங்கள்.

அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்
அளப்பருந் தன்மை வளப்பெருங் காட்சி
ஒன்றனுக் கொன்று நின்றெழில் பகரின்
நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன
இன்னுழை கதிரின் துன்னணுப் புரையச்
சிறிய வாகப் பெரியோன் தெரியின்
வேதியன் தொகையொடு மாலவன் மிகுதியும்
தோற்றமும் சிறப்பும் ஈற்றொடு புணரிய
மாப்பே ரூழியும் நீக்கமும் நிலையும்
சூக்கமொடு தூலத்துச் சூறை மாருதத்து
எறியது வளியில்
கொட்கப் பெயர்க்கும் குழகன் முழுவதும்
படைப்போற் படைக்கும் பழையோன் படைத்தவை
காப்போற் காக்கும் கடவுள்

மேலும் பாடுகிறார் மணிவாசகர்:

அருக்கனிற் சோதி அமைத்தோன் திருத்தகு
மதியில் தண்மை வைத்தோன் திண்டிறல்
தீயின் வெம்மை செய்தோன் பொய்தீர்
வானிற் காப்பு வைத்தோன் மேதகு
காலின் ஊக்கம் கண்டோன் நிழல்திகழ்
நீரில் இன்சுவை நிகழ்ந்தோன் வெளிப்பட
மண்ணில் திண்மை வைத்தோன்

மணிவாசகரின் திருவாசகத்தில் பொருந்தி இருக்கும் அறிவியல் உண்மைகளை இக்காலத் திறனாய்வாளர் ஒருவர் வியந்து வியந்து பேசு கிறார். அவர்தம் அறிவார்ந்த சொற்களில் சிலவற்றை மட்டும், மேலும் இப்போது சிந்திப் போம். அவர் சொல்கிறார்:

''இப்பாடலில் காணப்பெறும் சில விஞ் ஞான உண்மைகளை மட்டும் எடுத்துக்கொண்டு அவை தற்கால விஞ்ஞானப் புதுமைகளுடன் எவ்வளவு ஒத்துள்ளன எனக் காண்போம். 'அண்டப்பகுதி' என்று பெருமான் கூறியதை இற்றை நாளில் Universe என்று கூறுகிறோம். அதில் உள்ள 'உண்டைப் பிறக்கம்' என்பதை 'Galaxies' என்று கூறுகிறோம். 'நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன' என்பதனை 'Expanding universe' என்கிறோம். 'அண்ட மாகிய பெரும்பகுதியில் நூறு கோடியின் மேலாக உண்டைகள்-பெருக்கமுற்று விரிந்தன' என்கிறார் பெருமான். பக்தர் ஒருவர் பக்தி மேலீட்டால் கண்ணை மூடிக் கொண்டு 'அளந் தவை' யல்ல இவை''.

அடிகள் பாடலின் நான்காவது அடியின் கடைசிச் சொல், நம்வியப்பை இன்னும் மிகுதிப் படுத்துகின்றது. அச்சொல் 'விரிந்தன' என்ற ஆழமான பொருளுடைய சொல். ஏனைய நாடுகளோடு மிகுதியும் தொடர்புடைய தமிழர்கள் அந்நாளில் வானநூற் புலமை உடை யவர்களாக இருந்திருப்பர் என்றே நினைய வேண்டியுளது. 'உண்டை' என்ற இந்த ஒரு சொல்லால் 'கோப்பர்நிகஸ்' ( Copernicus ) உலகம் உருண்டை வடிவானது என்று கூறும்

முன்பே இத்தமிழர் அண்டத்தில் உலவும் உலகங்கள் அனைத்தும் உருண்டை வடிவம் உடையன என்று கூறியதைக் கண்டோம். அதனினும் பார்க்க வியப்பானதாகும். 'அவ்வுருண்டைகள் விரிந்தன' என்று கூறியது. இற்றை நாள் வானநூலாரும் அண்டம் விரிந்து கொண்டே செல்கிறதென்று முடிவுக்கு வந்துள்ளனர்.

அண்டம், அதிலுள்ள உருண்டைகள், அவற்றின் விரியும் இயல்பு என்பவை பற்றி மணிவாசகர் கூறியன போக, இன்னும் எத்தனையோ உண்மைகளும் கூறப்படுகின்றன. பருமைக்கு உதாரணமாக இவ்வண்டத்தைக் கூறி இறைவன் இதனைவிடப் பெரியோன் ஆகலின் அவன் பெருமையை நோக்கக் கற்பனைக்கடங்காத இவ்வண்டமும் நுண்அணுவை ஒப்பச் சிறியதாய் விட்டது என்கிறார். அண்டத்தைப் பற்றி அவர் அறிந்திருந்தது போலவே அணுவைப் பற்றியும் அறிந்திருந்தார். இவ்விடத்தில் அணுவுக்குத் 'துன்அணு' என்ற அடைமொழி தரப்பட்டுள்ளது. இனி மற்றொரு பாடலில் அணுவும் பிரிந்து சிறிதாம் தன்மை பேசப்படுகிறது. 'இன்று எனக்கருளி' என்று தொடங்கும் 'கோயில் திருப்பதிகம்' ஏழாம் பாட்டில் 'சென்று சென்று அணுவாய்த் தேய்ந்துதேய்ந்து ஒன்றாம்' என்று பாடிச் செல்கிறார். மேலும் 'அணுத்தரும் தன்மையில் ஐயோன் காண்க' (அண்டப்பகுதி 45) என்றும் பேசுகிறார் ஒரு காலத்தில் சிறந்த விஞ்ஞானியாகிய டால்டன் ( Dalton ) என்பார். 'உடைக்க முடியாது' என்று பொருள்பட இதற்கு அணு (Atom) என்று பெயரிட்டார். ஆனால் இற்றை நாளில் இவ்வணுவை உடைத்து இதனுள் ஓர் உலகமே இயங்குகிறது எனக் கூறுகிறார்கள். அணுவினுள் அடங்கி இருக்கும் இவ்வியத்தகு தன்மையைத்தான் அடிகள் 'அணுத்தரும் தன்மையில் ஐயோன்' என்று கூறினார் போலும். 'ஐயோன்' என்ற சொல்லுக்கு 'மிகச் சிறியவன்' என்பது ஒரு பொருள். அன்றி 'ஐ வியப்பாகும்' என்ற தொல்காப்பியனார் கருத்துப்படி, அணுவினுள் வியத்தகு முறையில் மின் அணுவாய் (Electron) பரமாணுவாய் (proton) நியூட்ரானாய் (Neoron) பாசிட்ரானாய் (Positron) விளங்கும் சக்தி வடிவங்களைத்தான், அடிகளார் குறிப்பிட்டாரோ என எண்ணத் தோன்றுகிறது.

இனி முக்கூட்டுப் பரிமாணம் (Three dimensions ) உடைய உலகத்தையும் (எல்லா உலகங்களும் இச்சொல்லால் குறிக்கப் பெறுகின்றன), அவ்வுலகம் தோன்றி அழிய இடந்தருகின்ற விசும்பையும் ஆசிரியர் அறிந்திருந்தது வியப்பன்று. 'காலம்' என்று கூறப் பெறும் நான்காவது பரிமாணத்தை இம்மூன்று பரிமாணமுடைய உலகத்தோடு தொடர்பு படுத்திக் கூறுவதுதான், வியப்பினும் வியப்பாகும். திருவாசகத்தில் 47-வது பாடலாக வரும் இப்பாடலைச் சற்றுக் கூர்ந்து கவனிக்க வேண்டும்.

மேலை வானவ ரும்அறி யாத(து) ஓர்
கோல மே! எனை ஆட்கொண்ட கூத்தனே!
ஞாலமே! விசும்பே! இவைவந் துபோம்
காலமே! உனைஎன் றுகொல் காண்பதே?

மணிவாசகர் மணிமொழிகளில் பக்தியும், அறிவியல் அறிவும் எவ்வாறு ஆழமான இடத்தைப் பெற்றுள்ளன என்று பார்த்தோம். இன்று திருவாசகப் பாடல்களின் மூன்றாம் பெருஞ் சிறப்பைப் பார்ப்போம்.

மணிவாசகர் மேற்கொண்ட பக்திநெறியின் அடிப்படை எளிமை; எளிமை, எளிமையே. இவ்வுண்மை மணிவாசகர் 'போற்றித் திருவகவலில்', 'அருமையில் எளிய அழகே போற்றி' என்று கூறுவதாலும், திருவண்டப்பகுதியில் 'பக்திவலையில் படுவோன் காண்க' என்று கூறுவதாலும், இது போன்றே இன்னும் பற்பல இடங்களில் பகர்வதாலும் நன்கு விளங்கும்.

மணிவாசகர் தம் திருவாசகத்தில் பற்பல இடங்களிலும் நாட்டுப்புற இலக்கியத்தின் உயிர் மூச்சாம் பழமொழிகளை எடுத்தாள்கிறார். 'உள்ளங்கை நெல்லிக்கனி' திருவண்டப்பகுதியிலும் (162), 'கொடிறும் பேதையும் கொண்டது விடா' போற்றித் திருவகவலிலும் (63), 'பிழைத்தவை பொறுக்கை எல்லாம் பெரியோர் கடமை' திருச்சதகத்திலும் (70), 'பொறுப்பரன்றே பெரியோர் சிறு நாய்கள் தம் பொய்யினையே' என்பதும் 'இருதலைக் கொள்ளியின் உள்ளெறும்பு' என்பதும் நீத்தல் விண்ணப்பத்திலும் (110, 113), 'கல்லில் நார் உரித்தல்' திருத்தெள்ளேணத்திலும் (243) வருவன.

இவ்வாறு மக்கள் இலக்கியமாம், அனுபவ ஞான இலக்கியமாம், பழமொழிகளை, உண்மையில் சொன்னால் தெரு வாசகங்களைத் தம் திருவாசகத்தில் இடம்பெற வைக்கிறார் மணிவாசகர். 'மக்கள் குரல் தெய்வக் குரல்' என்று மக்கள் நாயகத்தில் இன்றும் உரத்த குரலில் பேசப்படுகின்றதன்றோ?

பழமொழிகளைப் பக்தி மொழிகளாகவும் ஆக்கிய மணிவாசகர் 1. திருவம்மானை, 2. திருப்பொற்சுண்ணம், 3. திருக்கோத்தும்பி. 4. திருத்தெள்ளேணம், 5. திருச்சாழல், 6. திருப்பூவல்லி, 7. திருவுந்தியார், 8. திருப்பொன்னூசல் போன்ற மக்கள் இலக்கிய, ஏன்? மழலை இலக்கிய வடிவங்களையும், தம்ஞானப் பாடல்கட்குப் பயன்படுத்தும் திறம், பாமரப் பார்வை கொண்டு பார்க்கும் பண்டிதனையும் உருக்கும் என்றால் பரமசிவனையா உருக்காது?

குளித்து நீராடுவதற்கு இப்போதும் வாசனைப் பொடி விற்பதை நாம் அறிவோம். பழங்காலத்தில் இத்தகைய நறுமணப்பொடியை இடித்துப் பாதுகாத்து வைப்பது இயற்கையாகவே இருந்திருக்க வேண்டும். அவ்வாறு பொடியிடிப்பவர்கள் பாடிக்கொண்டே இடித்திருப்பார்கள் என்பதும் நாம் எளிதில் கற்பனை செய்து பார்க்கக் கூடியதுதான். அத்தகைய பாட்டில் ஈடுபட்ட மணிவாசகர் அதையே தம் பக்தி, ஞான, வைராக்கியப் பாடலுக்கு வடிவமாகப் படைத்துக் கொள்கிறார். வித்து பாமர இலக்கியம்; விளைவு பக்தி இலக்கியம்.

ஆனந்தமனோலயத்தைப் பாடுவதாகப் போற்றப்படும் திருப்பொற்சுண்ணப் பாடல்களில், இறுதி இரு பாடல்களை மட்டும் இப்போது கேட்போம். பக்தியும், பக்தி வழி ஞானமும், பொற்சுண்ணமாவதைப் பார்ப்போம்.

வட்ட மலர்க்கொன்றை மாலைபாடி
மத்தமும் பாடி மதியும் பாடிச்
சிட்டர்கள் வாழுந்தென் றில்லைபாடிச்
சிற்றம்ப லத்தெங்கள் செல்வம்பாடிக்
கட்டிய மாசுணக் கச்சைபாடிக்
கங்கணம் பாடிக் கவித்த கைம்மேல்
இட்டுநின் றாடும் அரவம்பாடி
ஈசற்குப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே!

எவ்வளவு இயற்கையான பாடல் பார்த்தீர்களா? பாமரர்க்கும் பக்திப் பரவச மூட்டும் சிவபெருமானின் திருவுருவம், தெய்வ உருவம், எவ்வளவு உயிரோவியமாகச் சொற்சிற்பமாக ஆடிப்பாடி உருவாகிறது பார்த்தீர்களா? ஆம். 'பாடி, பாடி' என்று நான்கடிகளில் எட்டுமுறை பாடுகிறார் மணிவாசகர். இத்திருப்புரையே பக்திப் பாடல்களின், உணர்ச்சிப் பாடல்களின் உயிர்த்துடிப்பு!

இனி இதே பாமர இலக்கிய வடிவம் பக்திக்கு மட்டுமன்றி, பக்திவழி ஞானத்திற்கும் துணை புரிவதைப் பார்ப்போம்.

திருப்பொற் சுண்ணப் பாடல்களின் இறுதிப் பாடலைக் கேளுங்கள்.

வேதமும் வேள்வியும் ஆயினார்க்கு
மெய்ம்மையும் பொய்ம்மையும்
ஆயினார்க்குச்
சோதியு மாயிருளா யினார்க்குத்
துன்பமு மாயின்பம் ஆயினார்க்குப்
பாதியு மாய்முற்றும் ஆயினார்க்குப்
பந்தமு மாய்வீடும் ஆயினாருக்கு
ஆதியும் அந்தமும் ஆயினாருக்கு
ஆடப்பொற் சுண்ணம்இடித்தும் நாமே!

இப்பாடலிலும் 'ஆயினார், ஆயினார்' என்பது நாலு அடிகளில் ஏழுமுறை திருப்புரையாய் வரக் காண்கிறோம். திரும்பத் திரும்பச் செய்வதால், திரும்பாத, திருந்தாத மனமும் திரும்பும், திருந்தும் அன்றோ? இந்த உணர்ச்சி உடலில் புகுந்திருக்கும் ஓர் உயிர்க்கருத்து இன்னும் சிறப்பு. அது முரண்பாடுகட்கு இடையே உடன்பாடு காண்பது. அதுவே ஞானத்தின் இமயம். மெய்மை-பொய்மை: சோதி-இருள்; துன்பம்-இன்பம்; பாதி-முற்று; பந்தம்-வீடு; ஆதி-அந்தம். இந்த முரண்பாடுகளின் மொத்த உருவமே கடவுள். இதை உணர்ந்து கொண்டால் வாழ்க்கையில் யார் உறவு? யார் பகை? எது துன்பம் எது இன்பம்? எல்லாமே எல்லாம்.

# நீரும் நெருப்பும்

சைவம் வைணவம் என்னும் இருபெரும் சமயங்களும் தமிழ்நாட்டில் மிகவும் சிறப்புடன் போற்றப்பட்டு வருவனவாகும். ''ஓர் ஆவிற்கு இருகோடு பூத்தாற்போல'' இவ்விரு பெருஞ் சமயங்களும், தமிழகத்தில் தொன்றுதொட்டே, இணைந்து இயைந்து நிலவி வருகின்றன. தமிழ் மக்களுக்கு வழிகாட்டி உய்வித்து வருதலால், இவற்றைத் தமிழ்நாட்டின் இரண்டு கண்கள் என்று நாம் பெரிதும் புகழ்ந்து போற்றிப் பாராட்டி மகிழலாம்.

உலக வாழ்க்கைக்கு நீர் இன்றியமையாதது. ''நீரின் றமையா துலகெனின், யார்யார்க்கும் வானின் றமையா தொழுக்கு'' என்னும் திருக்குறளில், நீரின் சிறப்பினைத் திருவள்ளுவரும் வற்புறுத்தியுள்ளார். நீரைப்போலவே நெருப்பும் மக்களின் வாழ்க்கைக்கு மிகவும் தேவைப்படுவதொன்று. நீரும் நெருப்பும் ஆகிய இருபொருள்களின் இன்றியமையாமையினையும், சிறப்பினையும், பண்டைத் தமிழ்ச் சான்றோர்கள் நன்குணர்ந்திருந்தனர். அதனாலேயே, உலகைப் படைத்து இயக்கிவரும் பரம்பொருளின் இயல்பினை இவற்றோடு இயைபுபடுத்தி நீரைத் திருமாலாகவும், நெருப்பைச் சிவபிரானாகவும் போற்றி மகிழ்ந்தனர், நம் முன்னோர்!

நீர் நீலநிறம் வாய்ந்தது; நெருப்பு சிவப்புநிறம் வாய்ந்தது. நீலநிறம் பெண்மையையும், சிவப்பு நிறம் ஆண்மையையும் குறிக்கும் என்பர். திருமால் நீலநிறம் உடையவராகப் போற்றப்பெறுகின்றார். சிவபெருமான் சிவந்த நிறம் உடையவராகப் புகழப் பெறுகின்றார். நீர் தண்மையுடையது; நெருப்பு வெம்மையுடையது. திருமால் காத்தற் கடவுளாகக் கருதப்பெறுகின்றார். சிவபிரான் உலகங்களை ஒடுக்கி அழித்தருளும் கடவுளாகக் கூறப்பெறுகின்றார். நீர் நிலத்திற் பரவும் தன்மையுடையது; நெருப்பு மேல்நோக்கி நின்று எழும் இயல்புடையது. திருமால் பள்ளிகொண்டருளும் பரமனாக-அரங்கநாதராக வணங்கப்பெறுகின்றார்; சிவபிரான் நின்றாடும் தெய்வமாக-அம்பலவாணராக வழிபடப் பெறுகின்றார். நீரும் நெருப்பும் உலகியல் வாழ்க்கைக்கு இன்றியமையாதன ஆதல் போல, முறையே திருமாலும் சிவபெருமானும் அருளியற் பேற்றிற்கு உரிய கடவுளர்களாகப் பக்தர்களால் வழிபடப் பெற்று வருகின்றனர். நீரும் நெருப்பும் இன்று தோன்றின அன்றி, என்றும் உளவாதல் போல, நமது சைவ வைணவ சமயங்களும் தொன்று தொட்டு, அனாதியாக என்றும் நின்று நிலவி விளங்கிவரும் பழமையும் பெருமையும் வாய்ந்த, சிறந்த சமயங்களாகத் திகழ்கின்றன. இந்துக்களாகிய நாம் இவ்விரு பெரும் சமயங்களையும் செவ்விதிற் போற்றி, வையத்து வாழ்வாங்கு வாழ்ந்து உய்ய முற்படுவோமாக!

—ஆசிரியர்.

# 'சீவன் முக்தர்கள்'

திரு. ஆர். கோபாலகிருஷ்ணன், எம்.ஏ., பிஎச்.டி.,

இந்தியப் பண்பாட்டுக் கல்லூரி, பழநி.

R. RAJU,
Dy Commissioner (H.Qrs.)
(Retired)
HR&CE Administration Dept.

## திருப்படையெழுச்சி :

உலகில் 'தெள்ளி வடித்தறிந்த பொருள் சிவன் கழலிற் செறிவு' என்பதை உள்ளத்தால் உணர்ந்து, 'எந்நிலையில் நின்றாலும், எக் கோலம் கொண்டாலும், மன்னிய சீர்ச்சங்கரன் தாள் மறவாமை பொருள்' என்று தெளிந்து, வாழ்வை அமைத்துக் கொண்டவர்கள்தான், பிறவிப் பெருங்கடலை நீந்த வல்லவர்கள். கற்றதனாலாய பயனே அதுதான் என வாழ்பவர்கள். ''ஊனில் ஆவி உயிர்க்கும் பொழுதெல்லாம் நான் நிலாவி இருப்பன் என்நாதனை'' என்று, உடலில் உயிர் உள்ளவரையிலும் இறைவனை ஓர் இமைப்பொழுதும் மறவாமல், அவனது திருவருளுணர்விலேயே ஞானிகள் திளைத்து நிற்பார்கள். பக்தியில் உயர்ந்தவர்கள் பக்தர்கள் என்றும், தொண்டிற் சிறந்தவர்கள் தொண்டர்கள் என்றும், சித்தி கைவரப் பெற்றவர்கள் சித்தர்கள் என்றும், ஞானம் நிரம்பப் பெற்றவர்கள் ஞானிகள் என்றும், யோகம் கூடப்பெற்றவர்கள் யோகிகள் என்றும், முக்தி அடைந்தவர்கள் முக்தர்கள் என்றும் அழைக்கப்படுகின்றனர். எவ்வாறாயினும் சாதாரண மானுட வழிமுறைகளினின்றும் மேம்பட்டு, மற்றுப் பற்றின்றி எம்பெருமானின் திருப்பாதமே மனத்தில் கொண்டிருப்பவர்கள் என்பது தெளிவு. மணிவாசகப்பெருமான் 'காணும் கரணங்கள் எல்லாம் பேரின்பமெனப் பேணும்' அடியார்களைப் படைவீரர்களாக மாற்றித் திருப்படையெழுச்சி செய்து மகிழ்கின்றார்.

தொண்டர்காள் தூசிசெல்லீர்!
பக்தர்காள் சூழப்போகீர்!
ஒண்டிறல் யோகிகளே,
பேரணி யுந்தீர்கள்!
திண்டிறற் சித்தர்களே,
கடைக்கூழை செல்மின்கள்!
அண்டர்நா டாள்வோம்நாம்!
அல்லற்படை வாராமே!

## ஆரேனுங் காணா அரன் :

''ஞானிக்கில்லை இன்பமும் துன்பமும்'' என்று வெற்றி வேற்கையும், 'மோனம் என்பது ஞானவரம்பு' என்று கொன்றை வேந்தனும், 'ஞானம் ஈசன்பால் அன்பே' என்று பெரிய புராணமும் கூறுவதிலிருந்து ஞானிகளுக்கும் உலகியலுக்கும் தொடர்பில்லை என்பதை அறியலாம். 'அன்பனே அரனே என்று அரற்றுவார்க்கு இன்பனாகும் எறும்பியூர் ஈசனே' என்று அப்பர் பெருமான் கூறுவது போன்று எம்பெருமான்மேல் மாறிலாக்காதல் பூண்டு ஒழுகினால், அந்தமொன்றில்லா ஆனந்தம் அடையலாமென்பது அடியவர் வரலாறு காட்டும் உண்மை. அவ்வாறு அடைந்தோரே இறைவனை அணைந்தவர். அவரது அறிவெல்லாம் அவனை அறியும் அறிவு, அவரது அன்பெலாம் அவனுக்குரிய அன்பு, அவரது செயல்களெல்லாம் அவனுக்கினிய செயல்கள் என்ற முறையில் வாழ்வர். 'மனத்தின் செய்கை அரனடிப் போதுக்காக்கி, ஓங்கிய வாக்கின் செய்கை உணர்ந்த அஞ்செழுத்துக்காக்கி, தாங்கு கைத் தொழிலின் செய்கை தம்பிரான் அடியார்க்கு ஆக்குவதைக் கடமையாகக் கொள்வர்.

''அளவிலாச் செல்வத் தடைந்தாலும் ஆகத்
தளவிலாச் சித்திகளுண் டாயும்—அளவி விலாது
ஆய்ந்தாலும் என்னசுகர் அல்லார்? சிவானந்தம்
தோய்ந்தார்கள், அன்றோ சுகர்?''

என்று சிவபோகசாரம் சாற்றுவது போன்று சிவானந்தத்தை முழுமையாக அனுபவிப்பவர்கள்தாம் உண்மையில் சுகம்பெறுபவர். கோபத்தால் ஈன்றதாய் சினந்து ஒதுக்கினாலும் அவனுடைய அருளை நினைந்தே அழுகின்ற குழவி போன்று, உன் சரணல்லால் சரணில்லை என்று சரணடைவர். இறைவன் எனும் மருத்துவன் தன்னைக் கவனித்துப் பிறவி நோயைத் தீர்க்காவிடினும் அவன்மேல் மாளாக்காதல் கொண்டு அவனருள் ஒன்றையே நினைந்து அழுவர். இத்தகு நிலையில் வாழ, நான் எனும் அகந்தை அழிய வேண்டும். யாவர்க்கும் காணொணாத இறைவன் அப்போதே தோன்றுவான். திருக்களிற்றுப்படியார் இக்கருத்தை நன்கு தெளிவுபடுத்துகிறது.

நல்லசிவ தன்மத்தால், நல்லசிவ யோகத்தால்
நல்லசிவ ஞானத்தால், நானழிய-வல்லதனால்
ஆரேனும் அன்புசெயின், அங்கே தலைப்படுங்
காண்
ஆரேனுங் காணா அரன்!

## தூங்கிக் கண்டார் நிலை :

'சித்தராவார், இவ்வுடம்பு இருக்கும் போதே சமாதி நிலையில் சிவலோகத்தினை இங்கே கண்டவராவார்; நாதமும் நாதாந்தமும் தம் உள்ளேயே உணர்ந்தோராவார்; அழிவற்றவர்; குற்றமற்றவர்; தூய இன்பத்தில் உறைவோர்; அவர் அடையும் முத்திக்குப் படிகள் முப்பத்தாறு ஆகும்' என்று திருமூலர் கூறுகின்றார். அருணகிரிப்பெருமானும்,

''சுட்டதுபோல் ஆசை விட்டுலகா சார
துக்கமிலா ஞான சுகம்மேவிச்
சொற்கரணா தீத நிர்க்குணம் ஊடாடு
சுத்தநிரா தார வெளிகாண,
மொட்டலர்வா ரீச சக்ரசடா தார
முட்டவும் மீதேறி மதிமீதாய்
முப்பது ஆறாறு முப்பதுவே றான
முத்திரையாம்மோனம் அடைவேனோ?''

என்று தனது உள்ளப்பாங்கை வெளிப்படுத்துகின்றார், தம் திருப்புகழில்.

சிவலோகம், சிவயோகம், சிவபோகம் ஆகியவற்றை அடைந்தவர்கள், தம்முள்ளேயே அதை உணர்ந்தின்புறுவர். அந்நிலையினை அவரே தான் அடைந்தின்புறுவதல்லாமல், எவ்வாறு ஒருவர்க்கு எடுத்தியம்ப இயலும்? என வினவுகின்றார் திருமூலர்.

தூங்கிக்கண் டார்சிவ லோகமும் தம்உள்ளே
தூங்கிக்கண் டார்சிவ யோகமும் தம்முள்ளே
தூங்கிக்கண் டார்சிவ போகமும் தம்உள்ளே
தூங்கிக்கண் டார்நிலை சொல்லுவதெவ்வாறே

கல்லால மரத்தின் நீழலில் நால்வர்க்கும் வாக்கிறந்த பூரணமாய் இருந்ததனை இருந்தபடி எடுத்துக்காட்டியதைச் சொல்லால் சொல்ல முடியுமா? அவ்வாறு சொல்ல முயன்றால் 'துரும்பு பற்றிக் கடல் கடக்கும் துணிவு' போன்றதாகும், என்கின்றார் தாயுமானவர்.

## தாதிமனம் நீர்க்குடத்தே :


தில்லையுட் கூத்தனின் இனித்தமுடைய எடுத்த பொற்பாதத்தில் மனத்தை ஒருமைப் படுத்தி நினைந்து வழிபட்டால்தான் தெள்ளத் தெளிந்த அடியார்க்குச் சீவனுக்குள்ளே சிவ மணம் பூத்துச் சீவன் சிவலிங்கமாகத் தோன்றுவான்.

சித்தந் திரிந்து சிவமய மாகியே
முத்தந் தெரிந்துற்ற மோனர் சிவமுத்தர்
சுத்தம் பெறலாம் ஐந்தில் தொடக்கற்றோர்
சித்தம் பரத்தில் திருநடத் தோரே

என்பது திருமந்திரம். ''பரஞானத் தாற்பரத்தைத் தரிசித்தோர் பரமே பார்த்திருப்பர்; பதார்த்தங்கள் பாரார்; பார்க்க வருஞானம் பலஞானம் அஞ்ஞான விகற்பம்; வாச்சியவாசகஞானம் வயிந்தவத்தின் கலக்கந் தருஞானம்; போகஞா திருஞான ஞேயஞ் தங்கிய ஞானஞ் சங்கற்பனை ஞானமாகும்; திருஞானம் இவையெல்லாங் கடந்தசிவ ஞானம் ஆதலாற் சீவன் முத்தர் சிவமே கண்டிருப்பர்'' என்று சிவஞான சித்தியார் கூறுவதிலிருந்து, உலகப்பொருள்களின் நுகர்ச்சிகளை விட்டொழித்து அனைத்திலும் அரனைக் கண்டின்புற்றிருப்பது முத்தியடைந்தோரின் செய்கைஎன்பதை உணரலாம். 'ஒன்றோடொன்று ஒவ்வாமல் முரண்பட்டுக் கொண்டிருக்கும் சமயங்கள் அனைத்தினிலும் புகுந்து ஆராய்ந்து பார்க்குமிடத்து, அனைத்திற்கும் மேலாகத்திகழும் தனிமுதற்பொருளே! நின்னுடைய திருவிளையாடலேயல்லாமல் மாறுபாடு எய்துங் கருத்துக்கள் இல்லையாகும். 'முடிவில் மோனவாரிதியில் நதித்திரள்போல் வயங்கிற்றம்மா' என்று தாயுமானசுவாமிகள் தெளிவுபடுத்துகின்றார்.

தாதி ஒருத்தி, தன் தலைமீது நீர்க்குடங்களைச் சுமந்து, இரு கைகளையும் வீசி விளையாடிக்கொண்டு, வித்தகம்பல செய்தாலும், அவளுடைய மனம் முழுவதும் நீர்க்குடங்கள் கீழே விழாமல் காப்பதிலேயே இருக்கும். அஃதே போன்று எத்தொழிலில் ஈடுபட்டாலும் சீவன்முத்தர்களாகிய ஞானிகளின் மனம் இறைவனது திருத்தாள்களிலேயே இலயித்துக்கொண்டிருக்கும். பட்டினத்தார் அழகு தமிழில் பாடுகின்றார்.

எத்தொழிலைச் செய்தாலும், ஏதவத்தைப்
பட்டாலும்
முத்தர் மனமிருக்கும் மோனத்தே,-வித்தக
மாய்க்
காதிவிளை யாடிஇரு கைவீசி வந்தாலும்,
தாதிமனம் நீர்க்குடத்தே தான்!



# திருவடிப் பேறு

டாக்டர் திருமதி இராதா தியாகராஜன், M.A.,Ph.D.,
மதுரை.

R. RAJU,
Dy Commissioner H.Qrs.
(Retired)

சரியை கிரியை யோகம் முதலிய தவம் முற்றிய உயிர்க்குச் சிவம் குருவாய்த் தோன்றி அவ்வுயிரின் சிறப்பியல்பை உணர்த்தும் என்று முன் கட்டுரையில் கண்டோம். குரு உணர்த்தும் உபதேசத்தால் உயிர் எய்தும் பயனை இக் கட்டுரையில் காணலாம்.

ஓர் அரசிளங்குமரன் தன் குடிப்பிறப்பை அறியாதவனாய் வேடர் சேரியில் வளர்ந்து வந்தான். ஒருநாள் அரசன் அக்குமரனைக் கண்டுகொண்டான். 'அரசிளங்குமரனாகிய நீ வேடர்களோடு கூடி வளர்ந்தமையால் நின் பெருந்தகைமையினை மறந்தாய்' என்று அவன் குடிப்பிறப்பின் உயர்வினை உணர்த்தினான். பின்னர் அக்குமரனை அவ்வேடர் பிணிப்பினின்றும் வேறுபடுத்திப் பிரித்து அழைத்துச் சென்று தன் பெருஞ் செல்வம் முழுவதும் அவனுக்கே உரியதாக்கித் துய்க்குமாறு செய்தான். இவ்வரசிளங் குமரனைப் போலவே மாறிலாப் பேரின்பப் பெருவாழ்வுக்கு உரிமையுடைய உயிர், ஐம்பொறிகளால் இடர்ப்பட்டுத் துயருறும் சமயம் அதன் பக்குவத்தை நோக்கி இறைவன் குருவாக எழுந்தருளி வந்து, அவ்வுயிர்க்கு அதன் சிறப்பியல்பை உணர்த்தி ஐம்பொறிகளின் கட்டிலிருந்து நீக்குகின்றான். உயிர் தன்னினின்றும் வேறாகாமல் உயிர்க்குயிராய் விளங்கும் இறைவன் திருவடிப் பேற்றைப் பெற்றுப் பேரின்பப் பெருவாழ்வைப் பெறுகிறது.

எவ்வாறு அரசிளங்குமரன் தன்னுண்மை இயல்பை அறியாத காலத்தில், வேடன் எனவே நினைத்து வளர்கின்றானோ, அவ்வாறே உயிரும் ஐம்பொறிகளின் பிணைப்பால் வளரும் போது, தான் மிகப்பெரும் உயர்ந்த வாழ்வாகிய சிவானந்தப் பெருவாழ்வு வாழ்வதற்குரிய தகுதியும் உரிமையும் உடையோம் என்பதை அறியாது, இடம் காலம் முதலிய துணைகொண்டறியும் சுட்டறிவு வாழ்வை மேற்கொண்டு வாழ்கிறது. தனக்கு வியாபக அறிவு இருக்கிறது என்று கட்டு நிலையில் உயிர் அறிய இயலாது. அந்நிலையில் வியாபித்தறியும் ஆற்றலும் அதற்குக் கிடையாது. கண் காது முதலிய பொறிகளால் கண்டும் கேட்டும் அறியும். இக் கருவிகள் அறியும் அளவிற்கு மேலும் உயிர்க்கு அறியும் ஆற்றல் உண்டென்பதை அதுஅறியாது. கட்டுநிலையில் அசத்தாகிய ஐம்பொறிகள் உணர்த்த உயிர் அறிவதுபோல, வீட்டு நிலையில் சத்தாகிய சிவம் உணர்த்த உயிர் அறியும். பொறி புலன்களோ உயிரின் உண்மை இயல்பினை அறியாது மயங்கச் செய்யும். ஏனெனில் இக்கருவிகள் எல்லாம் மாயா காரியம் ஆகையால் அவ்வாறு மயங்கச் செய்கின்றன. உயிரின் உண்மை இயல்பினை உணர்த்துவது குருவேயாம். இக்குருவினால் உயிர்பெறும் அறிவு விளக்கம், ஒருமருங்கு(ஏகதேச) விளக்கம்அன்று, சிவத்தோடு சிவமாய் நின்றறியும் உயிர் சுட்டி உணராமல் வியாபகமாய் உணரும். உயிர் சிவ ஞானத்தால் அறியும் போதுதான் தன் உண்மை இயல்பினை அறிய இயலும். இறைவன் குருவாய்த் தோன்றி உணர்த்த உணரும் உயிர், இப்போது தத்துவக் கூட்டத்தின் உண்மை இயல்பினையும், உயிரின் உண்மை இயல்பினையும் உணர்ந்து தெளிகிறது.

உயிர் கட்டு நிலையில் உலகப் பொருள்களைப் பொறிகளின் வாயிலாய் உணர்கிறது. பாகம் பெற்றபோது ஐம்பொறிகளும் சிவகரணமாய் மாறி நின்று உண்மை ஞானத்தை உணர வாயிலாய் அமையாவோ? முதல்வன்குருவாய் வந்து உணர்த்தல் வேண்டுமோ எனச் சிலர் வினாவுவர். ஐம்பொறிகள் உலகப் பொருள்களை உணர வாயில்களாகப் பயன்படுமேயன்றி உயிரின் உண்மை இயல்பினை உணர வாயில்களாக உதவமாட்டா. எதுபோல எனின் ,படிகத்தின் பக்கத்தில் வைக்கப்பட்ட பல்வகை நிறங்கள் அப்படிகத்தின் உண்மை ஒளியைக் காணவொட்டாமல் தத்தம் நிறங்களையே காட்டி நிற்பது போல எனக் கொள்ளலாம். ஐம்பொறிகளும் ஆன்மாவின் உண்மை இயல்பினைக் காட்டவொட்டாமல் தம்மால் காட்டப்பட்ட பொருள்களையே ஆன்மாவுக்குக் காட்டி நிற்கும். ஆதலால் உயிர் ஐம்பொறி உணர்வுகளால் மயங்கித் தன் உண்மை இயல்பினை அறியாது. உயிர் தன் உண்மை இயல்பினை அறிந்து கொள்ளக் குருவின் துணை இன்றியமையாதது.

முதல்வன் குருவாய் வந்து உணர்த்திய வழியும் ஐம்பொறிகளும் காட்டியதையே காட்டி நிற்கும். அதனால் உயிரின் உண்மை இயல்பு விளங்காது; ஐம்பொறிகளும்நீங்கினால் உயிர் இருளில் தனிமையுறும். குரு முதல்வன் உண்மை ஞானத்தை உணர்த்துவதை அறிவதெப்படி என்ற மற்றொரு ஐயம் ஏற்படுகிறது.

படிகம், தன்னைச் சார்ந்த பல நிறங்களின் இயல்பையே காட்டி நிற்பது, அதன் பொது வியல்பு. சூரியன் படிகத்தின் நேரே-மேலே நிற்கும்போது, அது ஒரு வண்ணமுமின்றித் தன் ஒளியைக் காட்டுவது, அதன் உண்மை இயல்பு. அதுபோல ஐம்பொறிகளின் வாயிலாக உலகப் பொருள்களை உயிர் உணர்வது பொதுவியல்பு. முதல்வன்குருவாய்வந்து ஞானத்தையுணர்த்த, உயிர் அப்பொறிகளின் உண்மை இயல்பை அறிந்து அவற்றின் வயப்படாது ஞானத்தைப் பற்றாகப் பற்றிக்கொள்ளும். அப்போது ஐம்பொறிகளுடன் கூடிய உடலோடு உயிர் இருப்பினும், உயிர் சிவஞானத்தின் வழியாகத்தான் எப்பொருளையும் உணரும். அப்பொழுது உயிர், தன் உண்மை இயல்பினை விளங்கிக் கொள்ளத் தடையேதுமில்லை. உயிர் புலன் வழிச் செல்லாமல், தன் குறிப்பின் வழிப் புலன்களை ஏவல் கொள்ளும்.

''மாறி நின்று என்னை மயக்கிடும் வஞ்சப்
புலனைந்தின் வழியடைத்து அமுதே
ஊறி நின்று என்னுள் எழுபரஞ்சோதி'

என்று மாணிக்கவாசகர் அருளியிருப்பதைக் காணலாம்.

முதல்வன் குருவாய் வந்து உணர்த்தினும், பொறிபுலன்களையின்றி உயிர் அறிவதெங்ஙனம்? அவ்வாறு அறியினும் விட்டுச்செல்லுமாறு தான் எங்ஙனம்? என்ற ஐயங்கள் எழும். குருவாய் உணர்த்தப்பெற்ற உயிர் வியாபகமாகிய தன்னியல்பை உணரும். அவ்வியாபக வுணர்வைப் பெற்றவுடன் பொறி புலன்களால் ஆகக் கடவது ஒன்றுமில்லை. தான் பொறி புலன்களுக்கு வேறாகக் காணப்பெறவே, வேறு காரணம் வேண்டாது தனக்கு ஆதாரமாகிய முதல்வன் திருவடியினைத் தலைப்படும். அஃது எதுபோல எனின், ஒருவன் ஆடுதற்கு ஆதாரமாகிய ஊசற்கயிறு அறுந்து விட்டால், அவனுக்கு உற்றுழி உதவும் தாய்போல அவ்விடத்து அவனைத் தாங்கி நிற்பது நிலமேயன்றிப் பிறிதில்லை. அதுபோல, ஆன்மா பொறி புலன்களின் வேறாகத் தன்னைக் காணவே, அதற்கு ஆதாரமாகிய தாரகம் முதல்வனது திருவடியேயன்றிப் பிறிதில்லை. கருவிகள் ஆன்மாவை விட்டு நீங்கியபோது உயிர்க்கு இருளாகிய ஆணவமலம் தாரகமாம், குருவின் உபதேசத்தினால் உயிர் வியாபக அறிவுபெற்றபோது சிவன் திருவடியே தாரகமாம். ''அறுகயிறுஊசல் ஆனேன்'' என்னும் அப்பர் அடிகள் திருவாக்கும் இதனை நன்கு விளக்கும். உயிர் பொறி புலன்களைவிட்டு நீங்குதல் கூறியதனால் தத்துவக் கூட்டங்களிலிருந்து அது நீங்கியதாகக் கொள்ளல் வேண்டும். இவ்வாறு தத்துவக் கூட்டத்தால் கட்டுண்ணாமல் அவற்றை வேறாகக் கண்டு நீங்கிய வழி, உயிர் சகலாவத்தையினின்றும் நீங்கிச் சுத்தாவத்தையைத் தலைப்படும்.

இவ்வாறு கருவிகளினின்றும் நீங்கிச்சிவன் தாரகமாய்ச் சுத்தப்பட்ட உயிர், மீளவும் கருவிகளைக் கூடுமோ என்னும் ஐயம் தோன்றலாம். ஆணையால் தடைப்படுத்தப்பட்டுத் தேங்கி நின்ற ஆற்றுநீர், அத்தடையாகிய அணை முறிந்த வழி மிக விரைவாகக் கடுகிச் சென்று கடலிற் கலந்து அக்கடல் நீரேயாய், அக்கடலுள் அடங்கி மறித்தும் வாராதது போலக் கருவிகளால் ஆகிய பாச ஞானம், உயிரின் வியாபகத் தன்மையைத் தடைசெய்ய, அதன்கண் ஒருமருங்கு (ஏகதேசம்) அடங்கித் தடையுண்டிருந்த உயிர், குருவினால் உணர்த்தப்பெற்று வியாபகத் தன்மையைப் பெற்றவுடன், பொறிபுலன்களின் தடையினின்றும் நீங்கித் தனக்குக் கேடில்லாதசிவபெருமான்திருவடியைஅடைந்து அத்திருவடியின்நிறைவாய்அதன்கண் அடங்கிப் பின் மீளுதல் செய்யாது. அணையால் தடைப்பட்ட நீர் கடலில் கலந்தபோது அந்நீர் சிறிது தூரம் மறித்து வருதல்போல, இறைவன் திருவடியை அடைந்தவுயிர் பொறி புலன்களின் வழி மீண்டும் வரும்; அதனால் இழுக்கில்லை என்று சிலர் கூறுவர். சிவத்தை அடைந்த உயிர் மறுபடியும் புலன்வழி மீளலாகாது. உயிர் சிவமாய வழிப் பொறியுணர்வு ஒருமருங்கு விளக்கமாவதன்றி, உயிர் உணர்வுபோல வியாபக விளக்கமாவதில்லை. ஆதலால் புலன் வழி மீளுதல் இழுக்கேயாகும். மேற்கூறியவாறு ஐம்புலன் உணர்வின் நீங்கி இறைவன் திருவடியை அடைந்த உயிர், ஒருகால் அயர்ச்சி பற்றி மீளவும் புலன்வழிக் கூடுமாயின் ஐம்பொறி வழியிலே செல்லாமல் தன்னைவிட்டு நீங்காத முதல்வனைச் சில முறைகளினால் எண்ணிச் சிந்தித்து அப்புலன்வழிச் செல்லுதலை நீக்கிக் கொள்ளவேண்டும். அவற்றை அடுத்த கட்டுரையில் காணலாம்.

நீர்நிலையில் கல்லெறிந்தபோது நீங்கிய பாசி அது எறியாதபோது பரந்து நிறைகிறது. அதுபோல உயிர் சிவன் திருவடியை நீங்காது பற்றும் முறையினால் பொறிவழிச் செல்லும் வாழ்வு நீங்கி அருள்வழி நிற்கும் வாழ்வில் தலைப்படுகிறது. இதனை மெய்கண்டார்,

''ஐம்பொறியின் அல்லையெனும் அந்த தர!சிவனை
ஐம்பொறியை விட்டங்கு அணைசகலன்—
ஐம்பொறியின்
நீங்கான்; நீர்ப் பாசிபோல் நீங்குமல கன்மம்வரின்
நீங்கானை நீங்கும் நினைந்து''

என்னும் திருவெண்பாவில் அருளியுள்ளமை காணலாம்.

# இதுதான் இந்து மதம்

''கவியோகி மகரிஷி''
தவத்திரு. சுத்தானந்த பாரதியார் அவர்கள்

R. RAJU,
Dy Commissioner H.Qrs.
(Retired)
HR&CE Administration Dept

இந்து மதம், இந்து மதம் என்கிறார்களே அது எந்த மதம், எப்படி யிருக்கும்; அதை யார் கண்டது? அது இந்தியாவின் மதமா? அதை உலக மக்கள் பின்பற்றலாமா? இந்து மதம், கிறிஸ்து பௌத்த இஸ்லாமிய மதங் களுடன் ஒத்துப் போகுமா? இந்தியாவில் பல வேறு மதங்களும், வகுப்புகளும், சாத்திர கோத்திர சாதி வேறுபாடுகளும் புகுந்ததேன்? சமயச் சின்னங்கள் பற்றி எத்தனையோ பாகு பாடுகள்; கோயில்கள்-மடங்களைச் சுற்றி எத் தனையோ வேறுபாடுகள்; கீதை உபநிஷத்து உரைகளைச் சுற்றி எத்தனையோ தத்துவ வித்தியாசங்கள்—இந்த வேற்றுமைக் காட்டில் எது இந்து மதம்? இவை தெளிவாக வேண்டும். வேதம், ஆகமம் ,இரண்டையும் கொண்டு இந்து மதக் கண்ணாடியை உங்கள் அகத்தின் முன் பிடிக்கிறோம். அவரவர்கள் அகத்தையும் முகத்தையும் இந்த அறிவுக் கண்ணாடியில் பார்த்துக் கொள்ளுங்கள். உண்மையான இந்து மதத்திற்கும், உலகைப் பிரித்த சமயக்குழாங் களுக்கும் வேறுபாடு தெரியும். நீங்கள் எச் சாதி எச்சமயமானாலும் எல்லாரும் மனிதர் மரபு; எல்லாருக்குள்ளும் ஒரே உள்ளம், ஒரே உயிர் துடிக்கிறது; எல்லாரும் சேர்ந்து வந்து இந்தக் கண்ணாடியில் உங்கள் உண்மை யுரு வைப் பாருங்கள்.

2 நாம் மானிடர்:

நாம் எந்த நாடு நிறம் வகுப்பானாலும், எல்லாரும் மானிடர் என்பதை இந்தக் கண் ணாடி முதலில் காட்டுகிறது, மானிடம் வந்த தேன்? எத்தனையோ பிறவிகளில் மனிதப் பிறவி உயர்ந்தது என்கிறார்களே ஏன்? நம் மைப்போலவே விலங்குகளும் உண்டு, உறங்கி, பெற்று, பெருகி, முதிர்ந்து, உதிர்ந்து போகின்றன. நமக்கும் விலங்குகளுக்கும் வேறு பாடென்ன? சில விலங்குகள் நம்மைவிடப் பல முள்ளவை; அவற்றைக் கண்டு மனிதன் அஞ்சு கிறான். ஆனால் மனிதன் தன் அறிவுத் திற னால் எல்லா உயிர்களையும் அடக்கியாள முடி யும். அறிவினால் மனிதன் உயர்ந்தவன். அந்தக் கரணங்களான மனம் சித்தம், அகங்காரம், புத்தி ஆகியவை அவனிடம் சிந்தனை வடிவாய் அமைந்தன. சிந்தனையை உள்ளாக்கித் தன்னை அறியலாம்; தனக்குள் தானா யிருக்கும் இறைவனை அறியலாம். நமக் குள்ளே நான் நான் என்று மார் தட்டிப் பேசு வது ஆன்மா. அதன் உணர்வாயிருப்பது பர மான்மா. பரமான்மா பரிசுத்தமானது; அதன் மாசற்ற சக்திதான் ஆன்மா. இந்த சுத்த சக்தி யையறிவதே அறிவு. அந்த அறிவினாலேதான் நாம் இன்புறலாம். உரிமையுடன், வாழ்வாங்கு வாழலாம். வாழ்வை அடைவதுதான் புரு ஷார்த்தம் எனப் படுவது. நாம் மனிதர் என்ப தற்கு அடையாளம் புருஷார்த்தம் பெறுவது தான். நீங்கள் எந்த நாடு, எந்த நிறம், எந்த சாதி, எந்த சமயத்தவரானாலும், புருஷார்த் தம் அடைய வேண்டும்; அதற்குச் சாதனம் புரிய வேண்டும்.

3 புருஷார்த்தம்:

புருஷார்த்தங்கள் நான்காகும்—தர்மம், அர்த்தம், காமம், மோட்சம். இவற்றைத் தமிழில் அறம், பொருள், இன்பம், வீடு என் போம். மானிட வாழ்வின் வேர் அறம், கிளை பொருள், தேன்மலர் இன்பம், கனி வீடு. இந்த நான்கையும் சாதனம் செய்யவே சரியை (ஒழுக்கம்) கிரியை (செயல்) யோகம் (உள் ளொருமை) ஞானம் (தெள்ளறிவு) ஆகிய நான்கு சாதனங்களும் ஏற்பட்டன.

தருமம் என்பது ஜீவாத்மாவைப் பரமாத் மாவின்பால் ஈர்த்து நிறுத்தும் சக்தியாகும். அறம் என்றால் தீயதை அறுத்து நன்மை செய் யும் ஒழுக்கமாகும். அது தரும சாத்திரங்களி லிருந்து வரையறுக்கப் பெற்றதாகும். அறத் தால் வருவதே இன்பம். அன்பும் அறமும் வாழ் வின் பண்பும் பயனும் ஆகும். மனத்தில் மாசற் றுத் தூய்மை யுறுவதே அறமாகும். அன்பு அருள், அறிவு, அமைதி, அருட்பணி, அடக்கம், வாய்மை, தூய்மை, செம்மை, நன்மை ஆகிய பண்புகளெல்லாம் அறமே. உயிர்களெல்லாம் இறைவன் உருவெனக் கருதி அன்பு செய்வது சிறந்த அறமாகும். மன மொழி மெய்த்தூய்மை அறமாகும். மனத் தூய்மை, நன்னினைவு, இறைவனிடம் ஈடுபட்டுருகும் ஆர்வம், உயிர்க்கருணை, தன்னைப் போலப் பிறரை மதித்தல், பெரியோரைப் பேணல், தாய் தந் தையரைப் போற்றல், ஆசிரியரைப் பணிந்து கல்வி கற்றல், விருந்தோம்பல் நொந்தவருக்கு உதவுதல், அஞ்சாது கடமை காத்தல், பிழைப் பிற்கு உழைப்பு மேற்கொள்ளல், உழைப்பால் வந்ததை உறவு சுற்றத்துடன் பகுத்துண்ணல், இவை யெல்லாம் அறவினைகளாகும். உலகில் வழங்கும் சமய நூல்கள் யாவும் அறநூல்களே. அன்புவேள்வியாக அறத்தைப் பேணுதலே கீதையின் கருத்தாகும். இராமனும் கண்ணனும் தர்மாத்மாக்கள்; தர்மத்தைநாட்டவே வந்த வர். மனுநீதிச் சோழன் மகன் வீதிவிடங்கன் தேர் நடத்தும் போது, ஒரு பசுங்கன்று அதன்

சக்கரத்திற் சிக்கி இறந்தது. சோழன் தன் மகனையே அவ்வாறு தேர்க்காலில் இட்டுப் பசுவிற்கு நீதி செய்தான். சிபிச் சக்கரவர்த்தி ஒரு புறாவைக் காக்க ,அதைத் தின்னவந்த பருந்திற்குத் தன் சதையைத் தந்தான்.

## 4 தருமம் :

தருமம் பொது, சிறப்பு என இருவகைப் படும். பொது அறம் என்றும்உள்ளது; அதைப் பண்டைய அறம் அல்லது சநாதன தருமம் என்பர். நாம் மேலே சொன்னதெல்லாம் இதுவே.

சிறப்பான தருமம் தன்னறம், சதருமம் அல்லது யுக தருமம் எனப்படும். அந்தந்தக் கால தேச வர்த்தமானங்களுக்குத் தக்கபடி இவை அமையும். கொலை செய்வது பாபம் என்பது பொது அறம். ஆனால் நமது வீட்டிற் புகுந்த பாம்பு புலிகளைக் கொல்ல வேண்டியிருக்கிறது; நாட்டிற் புகுந்த பகைவரைப் போர் செய்து ஒழிக்க வேண்டியிருக்கிறது; கட்டிலில் புகுந்து இரத்தத்தை உறிஞ்சும் முகட்டுப் பூச்சியை நசுக்குகிறோம். பொய் தீது; பாரதப் போரில் துரோணர் கடும் போர் புரிந்தார். பீமன் அசுவத்தாமா என்ற யானையைக்கொன்றான்; தருமபுத்திரரை விட்டு ''அசுவத்தாமா ஹதா (குஞ்சர:)'' என்று கத்தச் சொன்னான். குஞ்சர: கேளாமல் பறையடிக்கச் செய்தான். ''அசுவத்தாமன் இறந்தான்'' என்பது மட்டும் கேட்டுத் துரோணர் போரை நிறுத்திவிட்டார். தமது மகன் அசுவத்தாமனிடம் அவருக்கு அவ்வளவு பிரியம்! காட்டை அழித்து நாட்டை எழுப்புகிறோம். அதனால் பலவுயிர்கள் வருந்துகின்றன. எத்தனையோ அணுவுயிர்கள் உணவுடனும், நீருடனும், காற்றுடனும் நம்முள் சென்று கலக்கின்றன. மனிதன் அறிந்தும் அறியாமலும் செய்யும் பாபங்கள் மிகப் பலவாகும். அவற்றிற்குப் பரிகாரமாக அவன் ஒவ்வொரு நாளும் இறைவனை மனமாரப் பிரார்த்தித்து வணங்கித் தன் பிழைகளுக்காக மன்னிப்புக்கேட்க வேண்டும். எவ்வளவு பெரியவனானாலும் மனிதன் மனிதனே: தன்னினும் பெரிய கடவுளே அவன் புகல். ''மனிதன் இயன்ற மட்டும் அறவழி நின்று மேன்மேலும் தன்வாழ்க்கையைத் தூய்மை—வாய்மையுறப்பரம்பொருளை வழுத்த வேண்டும்; பொது நலப் பணிகளையும் புண்ணியங்களையும் புரியல் வேண்டும்.

அன்பு, உண்மை, இன்சொல், அடக்கம், பொறுமை, அருள்—அறிவு வளர்ச்சி, இறை வணக்கம், அருட்பணி, ஆன்ம நேயம் ஆகிய பொது அறங்களைப் பின் பற்றிக் காலத்திற் கேற்ற கடமைகளைச் செய்தல், எல்லா மாந் தருக்கும் நலமாகும்.

இந்த அறத்தில் ஊன்றிக் கொண்டு மனிதன் தனது அறிவினாலும், தொழில் திறமையாலும் பொருள் செய்ய வேண்டும். அறவுணர்வுடன் இன்பம் நுகரவே பொருள் வேண்டும். ''ஈதல் அறம்; தீவினைவிட்டு ஈட்டல்பொருள்''. உலக வாழ்விற்கு இன்றியமையாத கல்விகேள்வி அரசியல், தொழில், வாணிகம், குடி செயல் வகை, பண்பாடு, எல்லாம் பொருளில் அடங்கும். அறவழியில் பொருளியல் அமைதல் வேண்டும். பொருளை நுகர்வது இன்பம்.

## 5 சிற்றின்பம் :

மனிதர் மிகவும் விரும்புவது மரபு வளர்ச்சி. இது ஆண் பெண் கூட்டுறவாலே நிகழும். பெண்ணின்றி ஆணுக்கு இன்பமில்லை; ஆணின்றிப் பெண்ணுக்கு வாழ்வில்லை. ஆண்மையும் பெண்மையும் ஜீவ மின்மீட்டியின் இருமுனைகள்; அந்த முனைகளை இணைப்பது காதல்; அதில் வளரும் அன்பு மின்சாரமே வாழ்வை இயக்குகிறது; அன்புதான் உயிர் நிலை. அன்புதான் இன்பமாக வளர்கிறது. அந்த இன்பமே மனைவி மக்கள், சுற்றம் உற்றார் உறவினர் ஊரார் உலகோர் என விரிகிறது.

இன்பம், சிற்றின்பம் பேரின்பம் என்ற இருவகைத்தாம். உடலுயிர் மனத்தைச் சுற்றி வருவது சிற்றின்பம்; மனைவி மக்கள் சுற்றம், வீடு, செல்வம், பேர் புகழ், அலுவல், பட்டம் பதவிகளால் வருவன எல்லாம், சிற்றின்பம். அது ஆகி அழியும். இது இகசுகம். இகசுகம் என்பது, இவ்வுலகில் புலன்களால் நுகரும் இன்பம் என்பர்.

## 6 பேரின்பம் :

பேரின்பம் ஆன்மாவைப் பற்றியது. இதை ஆமுஷ்மிக சுகம் என்பர். மனத்திற்கு அப்பாலாய் உள்ள ஆத்மாவுடன் கலந்து யோகத்தில் அனுபவிக்கும் உள்ளின்பமே நிலையானது. புலனின்பம் புல்லின்பம், பொருளின்பம், இம்மையின்பம்; இதற்கு மேலானது ஆமுஷ்மிக சுகம், மறுமை யின்பம்; மறுமை என்றால் ஆகாசத்தைப் பார்க்க வேண்டியதில்லை. புலன் மனதைக் கடந்த உள்ளத்தில் துள்ளும் அருளின்பம் அல்லது ஆத்ம சுகமே மறுமையின்பமாகும். இதுவே பேரின்பம்; சிற்றின்பம்: மலர்ந்து காய் வைத்துப் பேரின்பமாகக்கனியும். அப்படிக் கனிவதற்கு யோகமே வழி. இல்லற வாழ்வையே ஆண் பெண் யோகமாக்கலாம். செய்வதையெல்லாம் இறைவனுக்கே வழிபாடாக்கி, கர்ம பக்தி ஞான ராஜயோக சாதனமாக வாழ்வை நடத்தினால் உலகின் குணதொந்த விகாரங்களைத் தாண்டி ,ஆத்ம சாந்தி பெற்று, அடுத்த புருஷார்த்தமான மோட்ச நிலை பெறலாம்.

## 7 மோட்சம் :

மோட்சம் என்றால் வீடு பேறு அல்லது விடுதலை, துக்க நீக்கம் என்பதாம். துக்கம் மூன்று வகை: (1) ஆதியாத்மிகம்-உடலுக்குரிய பசி, பிணி, மூப்பு போன்றது; (2) ஆதி பௌதிகம்-திருடர், பகைவர், புலி, கரடி, பாம்பு முதலியவற்றால் வரும் தீங்கு; (3) ஆதி தைவிகம் என்பது, இடி மழை புயல் முதலிய இயற்கைக் கொடுமையால் வருவது. இத் துன்பங்களினின்று விடுபட்டு, ஆன்மா பரமான்மாவை மேவுதலே மோட்சமாகும். காமம் கட்

டின்பம், சிற்றின்பம்; மற்றொரு உடலுடன் கூடி முயங்கும் கண இன்பம்; அளவுக்கு மிஞ்சி னால் நோய் தரும் பிணியின்பம். வரவர வெறுப்புத் தட்டும் வெற்றின்பம். மோட்சம் அல்லது வீடு, கட்டற்ற சுவதந்திர இன்பம்; தானே தன்னுள் உவக்கும் தன்னின்பம், தள ராது வளரின்பம், சலியாத நலியாத முற்றின் பம். இது ஜீவாத்மாவைப் பரமாத்மாவுடன் ஒன்றுபடுத்தும்.

8 உயரின்பம் :

உயர் இன்பம் ,நல்லன்பர் உறவாலே சாலோக்கியம் (கடவுளுலகம்), கடவுளைப் போற்றி செய்வதால் சாமீப்யம் (கடவு ளண்மை),கடவுளை ஆன்ம வடிவாக வழிபடுவ தாலும் அருட்பணியாலும் ,நினைப்பதாலும் சாரூப்யம் (கடவுளுருவம்), கடவுள் யோகியர் மூலம் அருளிய அறநெறிகளைப் பின்பற்றுவ தால் சாதர்மியம், கடவுளை யோகத்தால் கூடிக்கலப்பதால் சாயுஜ்யம் (கடவுட் கலப்பு) எய்தும். இந்த ஐந்தும் எய்தி ஜீவன் சிவமய மாகி மெய்யறிவின்பம் திளைப்பதுதான் பூரண மோட்சம் அல்லது ஜீவன் முத்தியாகும். தன் னறிவும் தலைவனறிவும் எய்திய பின் கட் டில்லை. உலகின் குணத்தொந்த விகார மில்லை. என்றும் இருக்கும் ஒன்றில், என்றும் ஒன்றியிருக்கும் சுத்த யோக சித்தி யெய்தும். அதற்குப் படிப்படியாக மனதைப் பக்குவப் படுத்தி ஜீவனை நடத்துவதுதான், மதம். அதில் தலை சிறந்தது இந்து மதம்.

தருமத்தால் வாழ்வு தூய்மையுற்று மோட்ச வழி திறக்கிறது. அதர்மத்தால் வாழ்வு கெட்டு வழியடைத்து வருந்துகிறது. அதர்மம் அழியும். தருமம் ஆகும், ஆக்கும். அர்த்தகாமம் (பொருளாசை) தர்மத்திற்கு அரண் செய்து மோட்சத்திற்கு உடன்பாடாயிருக்க வேண்டும். பொருளின்பம் அருளின்பத்தை நாட வேண்டும்.

'' 'ஜனகராஜன்' என்னிடம் பொருள் குவிந்து கிடக்கிறது. அதனிடம் நான் சிக்க வில்லை. இந்த மிதிலையே எரிந்தாலும் எனக்குச் சிறிதும் சேதமில்லை என்றார். அதுபோல உலகில் பாசபற்றில்லாது உள்ளுண்மையில் இணைந்து வாழ்வதே மனித தருமமாகும். உள் ளுண்மையிற் கூடி உலகில் வாழ்வாங்கு வாழ் வது தான் இந்து மதம். எந்த மதமும் இந்த உண்மையை ஒப்பும். இந்து மதம் என்பது,என் றும் இந்த உலகினர் அனைவரும் பொருந்தி வாழத்தக்க இயற்கை மதம். அது கடவுளுடன் தோன்றியது; கடவுளைப் போல என்றும்நின்று நிலவுவது. மனித சமுதாயம் என்பது ஆன்மத் தொகுதி. ஆன்மா என்பது நான் என்று உள்ளே எழும் சத்துப் பொருள். மெய்ப்பொருள்! அதில் வேரூன்றி வளர்வதுதான் இந்து மதம். இதுவே உலகின் ஆதி மதம். இதுவே எல்லா ருக்கும் நல்வழி காட்டும் சோதி மதம்.

9 உண்மை ஒன்றே:

இந்து மதம் என்றால் பல சாதி, சமயப் பிரிவு என்று பலர் கருதுவர்; இது பிழை; இந்து மதம் ஒருமையில் வேரூன்றிக் கிளை பரவி ஒரு சுவைக் கனி ரசந் தருவதாகும்.

எல்லா வுயிர்க்கும் இறைவன் ஒருவனே
எல்லா வுடலும் இறைவனா லயமே
எல்லா ருக்கும் இயல்பாம் இன்பம்
எல்லார் வாழ்வும் இறைவன் யோகமே
இன்பமே சூழ்க! எல்லோரும் வாழ்க
அன்பே நிறைக! அருளே பொலிக!

என்பது இந்து மதத்தின் சங்கநாதம் ஆகும். இந்து மதத் தத்துவங்களை வேதாந்தம், சித் தாந்தம் என்று இரண்டாகக் காணலாம். வேதாந்தம் உள்ளிருந்து வாழ்வை முறை வகுத்து நடத்துவது. அதுவேர்; இது கிளை; 'சிவமாதல் வேதாந்த சித்தாந்தமாகும்.' சவ மான உடலிற் சிக்கிய சீவன், தனு கரண புவன போகாதிகளைத் துய்த்துக் களிம்பகன்று, தூய சிவமாதலே இந்து மதம். சிவம் என்பது இன் பந்தரும் கடவுளாம். மானிடம் மாறி மாறிப் பிறந்து கடவுட்டன்மை பெறுவதே இரண்டின் குறிக்கோளாகும். இரண்டிற்கும் போராட்டம் வேண்டுவதில்லை. திருமூலர் அருளுகின்றார்.

இரண்டு கடாவுள்ள இவ்வூரி னுள்ளே
இரண்டு கடாவுக்கும் ஒன்றே தொழும்பன்
இரண்டு கடாவும் இறுக்கிப் பிடித்தால்
இரண்டு கடாவும் ஒரு கடாவாமே

R. RAJU,
Dy Commissioner H.Qrs.
(Retired)
HR&CE Administration Dept

10 அன்பினால் பண்பாடு:

அன்பினால் பண்பட்டு, உள்ளம் தூய தானால் மன வேறுபாடுகள் நீங்கும். அன்பே உயிர் நிலை; அன்பே உயர் நிலை; சமயம் என்பதே அன்புக் கலைதான், ''இன்பமே என் பெரும் அன்பே'', என்று இறைவனைத் தொழு கின்றார் மணிவாசகர். அன்பில் உருகி அருள் மெருகேற்றினால் சீவன் சிவமயமாகப் பொலி யும். இவ்வாறு படிப்படியாகப் பரிணாமப்பட்டு மனமாசு நீங்கி மானிடம் கடவுளுண்மைபெறும் உண்மையைத்தான் நுண்மையாக மணிவாசகர் ''சென்று சென்று அணுவாய்த் தேய்ந்து தேய்ந்து ஒன்றாம் சிவனே'' என்கிறார்.

11 ஒருமை ஒழுக்கம்:

வேதம் 'ஸம்கச்சத்வம், ஸம்வதத்வம், ஸம்வோமனாம்ஸிஜானதாம்; ஸமான ஹ்ரு தயேஸ:' என்று கூவுகிறது. அதாவது மன வேறுபாடுகளை ஒதுக்கி, ஒருமுகப் படுங்கள், ஒன்றி முன்னேறுங்கள்; உள்ளறிந்த ஒருமை கலந்து பேசுங்கள்; மனதில் ஒருமையை ஊன் றுங்கள்; உள்ளொருமை பேணுங்கள் என்பதாம்.

'உள்ளொன்றினாலே உலகொன்றும் ஆத லினால் உள்ளத்தில் ஒற்றுமையை ஊன்றுக. ஒசை ஒலியெலாம் ஆனாய் நீயே! உலகுக்கு ஒருவனாய் நின்றாய் நீயே' என்கிறார் அப்பர். 'ஒருவனே போற்றி ஒப்பில் அப்பனே போற்றி, என்கிறார் மணிவாசகர். நமது சமயமெல்லாம் ஒருமை முழக்கமே. நமது சமயத்தின் வேர் உள்ளொருமை.

எனது யானும் வேறாகி
எவரும் யாரும் யானாகும்
இதய பாவனா தீதம்—தருவாயே

என்று வேண்டுகிறார் அருணகிரியார். அவரது திருப்புகழ் அமுதம் ஒருமையில்தான் தொடங்கு கிறது.

ஏறி மயிலேறி விளை யாடுமுகம் ஒன்றே
கூறுமடியார்கள் வினைதீர்த்த முகம் ஒன்றே.

நமது சமுதாயத்தின் தனிச் சிறப்பு ஒருமையே; அந்த ஒருமை கடவுளே. 'என்று நீ அன்று நான்' என்பதே ஒருமையின் உணர்வு.

ஒன்றே நினைத்திருந்தேன்
ஒன்றே துணிந்தெழுந்தேன்
ஒன்றே என் உள்ளத்தின்
உள்ளடைந்தேன்

என்று காரைக்கால் அம்மையார், உள்ளொருமையுடன் இறைவனைக் கலந்து வாழ்ந்தார். ஒன்றான இறைவன் அருளே, பலவாக விரிந்து உலகாடலை நடத்துவது. தோற்றமும் ஒடுக்கமும் அந்த ஒன்றிலே நிகழ்வது. கடல் ஒன்றே. அதைக் கதிரவன் முகந்து மேகப் படலத்தை நெய்கிறான். மேகம் மழை பொழிகிறது; மழை நீர் உலகில் ஊற்றாகி ஆற்றுப் பெருக்காகி மீண்டும் கடலிலேயே ஓடிக் கலக்கிறது. இப்படிக் கலக்குமுன் பயிரையும் உயிரையும்ஊட்டி வளர்க்கிறது. இதுதான் வாழ்வின் குறிப்பு.

## 12 மனவிகாரப் பன்மை:

பலவாகத் தோன்றி நம்மை அல்லற்படுத்தி மயக்கித் துக்கம் விளைவிப்பதெல்லாம் பேய் மனமே.

மாதுக்கம் நீங்கலுறுவீர்
மனம் பற்றி வாழ்மின்

என்று சம்பந்தர் வழிகாட்டுகிறார். மனம் எதிற் பற்றவேண்டும்?

பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு

என்றார் வள்ளுவர் பெருமான். எதிலும் பற்றற்றுத் தானே தானான தனிமுதல்வனைப் பற்றுதலே ஒருமையின்பமாகும். இறைவன் அருளை அன்பினால் பெற்றால் பன்மை மயக்கம் ஒழிந்து ஒருமை கூடும்.

## 13 சேரவாரும் செகத்தீரே:

தாயுமானார் நம்மை அழைக்கிறார், 'காகம் உறவு கலந்துண்பதைத் காணீர்! சிவ போக வெள்ளம் பொங்கித் ததும்புகிறது; மனக் குரங்கின் வழியே போகாமல் அதை அடக்கி அன்பு செய்மின். அன்பு நிலைதேடும் பருவம். இது கண்டீர் சகத்திரே'.

இன்று நாமும் சேரவாரும் சகத்திரே என்றே மனித சமுதாயத்தைக் கூவுவோம். இறைவன் எங்கே? இங்கே! இதோ உள்ளத்தில் துடிப்பது எது? இறைவன் அருள்; இமைப் பொழுதும் நெஞ்சிலே நீங்காதுள்ளது.

உள்குவார் உள்ளத்தானை
உணர்வெனும் பெருமையானை

—அப்பர்.

யாவரும் எவரும் தானாய்
அவரவர் சமயந்தோறும்
தோய்விலான் புலனைந் திற்கும்
சொலப்படான் உணர்வின்மூர்த்தி.

—நம்மாழ்வார்.

## 14 உணர்வின் மூர்த்தி:

'நான் தான்' என்ற இரு விளக்கங்கள் உள்ளன. தான் என்பது எதிலும் பற்றில்லாத தனிமுதற் பரம்பொருள். நான் என்பது வினை சுற்றி மனஞ்சுற்றி, விடுதலை தேடும்'ஆன்மா'. மன மயக்கிற் சிக்கிய பாசான்மா மாசகன்று சுத்தான்மாவானால்தான் நமக்கு இறைவன் ஒளி தோன்றும். நம்மாழ்வார் திருப்புளியடியில் நீண்ட காலம் உள்ளொருமை கொண்டுயோகத்திலிருந்து பாடுகிறார்.

யானும் தானாய் ஒழிந்தானை
யாதும் எவர்க்கும் முன்னோனை
தானும் சிவனும் பிரமனும்
ஆகிப் பிணைத்த தனிமுதலை
தேனும் பாலும் கன்னலும்
அமுதும் ஆகித் தித்தித்தென்
ஊனில் உயிரில் உணர்வினில்
நின்ற ஒன்றை உணர்ந்தேனே

இந்த ஒருமையுணர்வுதான் இந்து மதமாகும். சிந்தையொருமையே, தியான ஐக்கியமே, இந்து மதம்.

## 15 பிரியாத ஒன்று:

அடியோமோடும் நின்னோடும்
பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு

என்ற மங்களாசாசனத்தைத் திருப்பித் திருப்பிச் சொல்லுவோம்.

மாஹம் ப்ரம நிராகுர்யாந்
மாமா ப்ரம நிராகரோத்

'நானும் பிரம்மத்தை மறுக்கேன், பிரியேன், பிரம்மமும் என்னை மறுக்காது, பிரியாது. அது சத்தியம், ஞானம், அனந்தம். அதுவே என் இதயக் குகைக் கனல்' என்று வேதம் முழங்குகிறது. நக்கீரர் பெருமான் அடுக்கடுக்காகச் சொல்லுகிறார்.

ஒருவகைத் தேவரும், இருவகைத் திறமும்
மூவகைக் குணமும், நால்வகை வேதமும்
ஐவகைப் பூதமும் அறுவகை இரதமும்
எழுவகை ஓசையும் எண்வகை ஞானமும்
ஒன்பதின் வகையும் ஒண்மலர்ச் சிறப்பும்
பத்தின் வகையும ஆகிய பரனை
நினைந்திட ஆங்கே தோன்றும் நிலமனை
ஈசனை இறைவனை ஈறில் பெருமையை
நேசனை நினைப்பவர் நெஞ்சத் துள்ளனை
ஈண்டிய சிறப்பின் இண்ணயடிக் கீழ்நின்று
வேண்டும் அதுஇனி வேண்டுவன் யானே!

16 பன்மையில் ஒருமை:

'ஒன்றெனவும் தோற்றம் ஒடுக்கமதிலே யெனவும் கண்டவனே சாட்சிக்கிறை'. இந்த ஒருமையை உணர்க! பல விகார மாயந்தவிர்க! கிளைகள் பல மரம் ஒன்று; மரங்கள் பல தோட்டம் ஒன்று; இனிய கனிகள் பல; அவை கலந்த பஞ்சாமிர்தம் ஒன்று; விரல்கள் ஐந்து கை ஒன்று; உறுப்புக்கள் பல, உடல் ஒன்று; உடல் உருக்கள் பல, உயிர் ஒன்று; உருக்கள் பல, உயர்வான் ஒன்று; விளக்குகள் பல, நிறம், மின் சக்தி ஒன்று; ஆடைகள் பல, பருத்தி ஒன்று; சமயங்கள் பல, சத்து சித்து ஆனந்த சுத்த பரமாத்ம சக்தி ஒன்றே.

17 சொல்லொணா இன்பம்:

இவ்வாறே சிந்தித்தால் உள்ள பொருள் ஒன்றில் உள்ளம் ஒன்றும். பிறகு என்னில் எதுவோ, அனைத்திலும் அதுவே என்று சம யோகம் தோன்றும். சாதியிலே மதங்களிலே சாத்திரச் சந்தடிகளிலே அபிமானித்து அலையும் மானிட மனம் உள்ளத்தில் நிருத்தமிடும் தனித் தலைவனைக் கூடும்: உடல் மனைவியைக் கூடும்; ஆன்மா இறைவனுடன் ஆனந்தக் கூத்தாடும்.

---

The following particulars are furnished regarding the OWNERSHIP of "THIRUKKOIL" the monthly newspaper, published as called for, by Rule 8 of the Registration of Newspapers (Central) Rules, 1956.

FORM IV

(See Rule 8)

| | | |
|---|---|---|
| 1. *Place of Publication* | .. | 119, Nungambakkam High Road, Madras-600 034. |
| 2. *Periodicity of Publication* | .. | Monthly |
| 3. *Printer's Name* | .. | M.N. Shanmugam, L.P.T. Assistant Works Manager, |
| *Nationality* | .. | Indian |
| *Address* | .. | Tamil Arasu Press, Government Estate, Madras-600 002. |
| 4. *Publisher's Name* | .. | U. Subramanyan, Commissioner, H.R. & C.E. Admn. Department, |
| *Nationality* | .. | Indian |
| *Address* | .. | Commissioner, H.R. & C.E. Admn. Department, Madras-600 034. |
| 5. *Editor's Name* | .. | N.R. Murugavell, M.A.,M.O.L., |
| *Nationality* | .. | Indian |
| *Address* | .. | H.R. & C.E. Admn. Department, 119, Nungambakkam High Road, Madras-600 034 |
| 6. *Name and Address of the individuals who own the newspaper and partners or shareholders holding more than one percent of the total capital* | .. | Govt. Publication. |

I, U. Subramanyan, Commissioner, H.R. & C.E. Admn. Department, Madras-600 034, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

*Sd./-* U. SUBRAMANYAN
**PUBLISHER**

# கம்பர் கவித்திறம்

திரு. நா. வேணுகோபால் நாயகர், B.A.B.L.
செயலாளர்: ஸ்ரீவைஷ்ணவ மகாசங்கம், சென்னை.

இயற்கையழகு நிறைந்த வனம். திருமேனியின் அழகு எல்லாம் தெரியும்படி, அமர்ந்திருக்கிறான் இராமன், மரவுரி உடையிலே. எதற்காக அப்படி அங்கு எழுந்தருளியிருப்பது? எண்ணற்ற இமையவர்கள் அனைவரும், வேண்டிக் கொண்டார்களாம். ஒருவராக இருந்தால்கூட மறுக்க முடியாது இராமனால் என்ன வேண்டிக் கொண்டார்கள்? 'அரக்கர்கள், எங்கள்மேல் விரோதம் கொண்டுள்ளார்கள்; அவர்கள் அழிவுச் செயல்கள் செய்து, எங்களைத் துன்புறுத்துகின்றார்கள், இதனை விலக்கவேண்டும்' என்று, கேட்டார்களாம்.

''எண்அரும் இமையவர், அரக்கர் எங்கள்மேல்
விண்டனர், விலக்குதி!

என்று வேண்டியதாகக் கம்பர் கூறுகின்றார். தேவர்கள் வேண்டியது, திருமால் ஆதிசேடன் மீது அறிதுயில் கொண்டிருந்தபோது! வேண்டுதல் வந்துவிட்டபிறகு தூக்கமாவது! உடனே துயிலையும், ஆதிசேடனாகிய தூமெல் அணையையும் பாற்கடலையுமே துறந்துவிட்டு இராமனாக அயோத்திவந்து அவதரித்து, தேவர்களின் காரியம் கைகூடுவதற்காகக் கைகேகியின் வார்த்தையையே காரணமாகக் கொண்டு, மரவுரியும் தரித்து வனத்திற்கு வந்துவிட்டான்.

இப்படி வந்துள்ளவனுக்கு அனுகூலமாகத்தான், அவனை வனத்தில் வந்து கண்டாளாம் சூர்ப்பணகாதேவி!

''மேலை நாள் அண்டசத்(து) அருந்துயில்
துறந்த ஐயனைக் கண்டனள்

ஏன் இங்கு இந்தச் சமயம் வந்து சூர்ப்பணகை கண்டாள்? தன் அரக்கர்குலத்திற்கு அழிவு தேடி வைக்கவேணுமே! ''தன் கிளைக்கு இறுதி காணுவாள்''. முழுப் பாடலையும் கண்டு சுவைக்கலாம்:

''எண்அரும் இமையவர், அரக்கர் எங்கள்மேல்
விண்டனர் விலக்குதி! என்ன, மேலைநாள்
அண்டசத்(து) அருந்துயில் துறந்த ஐயனைக்
கண்டனள்; தன்கிளைக்கு இறுதி காணுவாள்''

இராமனுக்கும் இராவணனுக்கும் பாலமாக அமைகின்றாள் சூர்ப்பணகை. நாடக பாணியில் அமைகின்றன அவளது சந்திப்பும், மேற்கொண்டு விவகாரங்களும்! அழகனைக் கண்ட சூர்ப்பணகையின் மனது எப்படியெல்லாமோ விகற்பம் கொள்ள ஆரம்பித்து விட்டது. என்னவெல்லாமோ எண்ணத் தொடங்கி விட்டது. இவன் யாராக இருக்கலாம்? எல்லோருடைய மனத்திலும் அழுத்தமாக உறைந்துகொண்டு ஆட்டிவைக்கின்றானே மன்மதன்; அவனாஇவன்? மன்மதனாயின் அவனுக்கு உருவம் கிடையாதே, சிவபிரான் அவனைத் தன் நெற்றிக்கண்ணினால் எரித்து விட்டாரே! ''சிந்தையின் உறைபவற்கு, உருவம் தீர்ந்ததால்''. அப்படியானால் தேவகளையாக இருக்கிற இவன் இந்திரனோ? இந்திரன் என்றால் இவனுக்கு ஆயிரம் கண்கள் இல்லையே. இரண்டு தானே உள்ளன? ''இந்திரற்கு ஆயிரம் நயனம்''. தேவப்பிறவியில்லை; தெய்வப் பிறவிதான். ஈசனாகிய சிவபெருமானோ? சிவபெருமானாக இருப்பின் மூன்று மலர்க்கண்கள் இருக்க வேண்டுமே? ''ஈசற்கும், முந்திய மலர்க் கண் ஓர் மூன்று!''

சரி, சரி! இவர்கள் எல்லாரையும்விட உயர்வாகத்தான் இருக்கவேண்டும். இவன் புருடர்களுக்குள்ளே மிக உயர்ந்தவனான மகாவிஷ்ணுதான். உலகத்தையெல்லாம் தன் திருவயிற்றில் வைத்துக் காப்பாற்றிய திருமால் தான், தன் மேனியில் உலகின் அழகையெல்லாம் தாண்டி வந்துள்ளான். ஆனால் மாதவனுக்கும் தோள்கள் நான்கு அல்லவா? இவனுக்கு இரண்டு தானே உள்ளன? ''நான்கு தோள், உந்தியின் உலகளித்தாற்கு என்று உன்னுவாள்''. சூர்ப்பணகையின் சிந்தனை அலைகளின் முழுக் காட்சியையும் கம்பர் பின்வரும் அழகிய பாடலில் எழுதிக் காட்டுகின்றார்.

''சிந்தையின் உறைபவற்கு உருவம் தீய்ந்ததால்;
இந்திரற்கு ஆயிரம் நயனம்! ஈசற்கும்
முந்திய மலர்க்கண் ஓர்மூன்று: நான்குதோள்
உந்தியின் உலகளித்தாற்கு; என்று உன்னு
வாள்''

இப்படி யெல்லாம் சூர்ப்பணகை வேதனை அடைந்தாளாம் உள்ளத்திலே. உடல் அடைந்த வேதனை காரணமாக ''இந்தச் சுகுமாரனுக்கு

நாம் இணையாக வேணுமானால், இவன் அழகுக்கு ஈடாக நாம் இருந்தால் தானே முடியும்? என்று எண்ணினாள் சூர்ப்பணகை. உடனே உறுப்புநலங்கள் எல்லாம் பொதிந்த உருவத்தினை எடுத்தாள். தூரத்தில் வரும்போது முதலில் தெரிவது உடலின் தோற்றமும், நிறமும் தான். என்ன வியப்பு! இப்போது இவளைப் பார்த்தால் அடையாளமே தெரியவில்லையே. இவளின் உருவ அழகு எத்தகையதாகச் சிறந்து விளங்குகின்றது. ''மேனி நனி பெற்று''. இந்த உடலழகின் திறத்தைத்தான் என்ன என்று புகழ்ந்து சொல்லுவது? எப்போதும் வாடாதது. தேவலோகக் கற்பக விருட்சம்போல் உள்ளது. அதனால் அது மேலும் தளிர்க்க வேண்டிய அவசியமில்லை. அந்தக் கற்பகவிருட்சமும் ஒரு புதுத் தெம்புடன் தளிர்த்தால் எப்படி இருக்கும் அதன் தளிரும் விழியும். அப்படியல்லவா இருக்கிறது சூர்ப்பணகை கொண்ட புதுநிறம். ''வானின் உயர் கற்பகம், உயிர்த்த தளிர், வண்ணமேனி நனிபெற்று''. அருகே வந்துவிட்டாள் அந்த சூர்ப்பணகை அழகி. அவளது இதழ்களில் என்ன தேனா ஒழுகுகிறது, இதைப் பார்த்தால் காமவெறிதானே உண்டாகும்! ''விளை, காமவெறி யூட்டும், தேனின் இதழ் பெற்று.'' இதழ்கள் அசைகின்றன சிரிப்பிலே. உள்ளே காணப்படுகின்றது முத்துக்கள் தான். முத்துக்களைப் போல நிறைவாகவும் வரிசையாகவும் அன்றோ இவளது பற்கள் உள்ளன. ''திகழ் முத்து நனி பெற்று''.

நெருங்கியே வந்துவிட்டாள். கண்ணொடு கண்ணிணை நோக்கித்தானே ஆகவேண்டும். நெருங்கிவிட்டாள். அந்தக் கண்களைப் பாருங்கள். அவைகள் மடந்தையின் கண்கள் அல்லவே. மானின் பரந்த வெருண்ட விழிகளே. ''ஓர் மானின் விழி பெற்று''. சரி, இவளுடைய ஆடையின் அழகையும் பாருங்கள். எத்தனை எத்தனை நிறங்கள். மயிலின் தோகையில் உள்ள அத்தனை வண்ணங்களும் அமைந்துள்ளனவே, இவள் உடையிலே. ''மயில் வந்ததென வந்தாள்''. சூர்ப்பணகையாகிய மயில் காமமாகிய தன் தோகையை விரித்த முழுத்தோற்றத்தையும், தமது கவிதைக் கண்ணாடியில் காட்டுகின்றார் கம்பர்.

''வானின்உயர் கற்பகம் உயிர்த்த தளிர்வண்ண
மேனிநனி பெற்று, விளை காமவெறியூட்டும்
தேனின் இதழ்பெற்று, திகழ்முத்து நனிபெற்று, ஓர்
மானின் விழிபெற்று, மயில்வந்தது என
வந்தாள்''

இப்படியாக வந்தவளின் ஒயிலையும், ஒய்யாரத்தையும் கண்டான் இராமபிரான். வந்தவர்களை நல்வரவுகூறி உபசரிப்பதுதானே வழக்கம். ஆனால் இராமன் சொன்னது என்ன? 'காட்டில் இவ்வளவு அலங்காரம் ஏது? தூரத்திலிருந்து வருவதாகத் தெரிகிறது. ஆகையால் வரவேணும்; ஆனால் உன்னுடைய வருகை தீமை பயக்காமல் இருக்கவேணும்.' ''தீதில் வரவாக இவண்; நின் வரவு சேயோய்'' என்று ஆரம்பித்தான் இராமபிரான். 'எப்படியோ எங்களிடம் வந்துவிட்டாய், மனித சஞ்சாரம் இல்லாத காடு இது. மனிதர்களுடன் சேர்ந்துவிட்டதும் புண்ணியமே'. ''போதஉளது எம் உழை, ஓர் புண்ணியம் அது அன்றோ''. இராமன் மேலும் உசாவுகின்றான்; ''சரி, உன் ஊர் என்னவோ? பேரென்னவோ? உறவு என்னவோ? என்று வினவுகின்றான். ''ஏது பதி? ஏது பெயர்? யாவர் உறவு'', என்கிறான் இராமன். இவ்வாறு கேட்டவன் சூர்ப்பணகையின் அலங்காரத்தில் மயங்கிச் சொக்கிக் கிடந்த மனிதனல்ல: ''வேத முதல்''. ஆனால் இந்தக் கேள்விகளைச் செவியேற்றவள் வேதஞானம் உடைய வித்தகியல்லள். அறிவுக்கும் அவளுக்கும் தொடர்பு சிறிதும் இல்லை. அறியாமையும் அகந்தையும் ஒருங்குதிரண்ட ஓர் பாழும் பிண்டம்.

அதனால் சூர்ப்பணகை தனக்குள் பின்வருமாறு எண்ண ஆரம்பித்தாள். நம்மைப் பார்த்ததுமே இந்த மனிதன் இப்படித் துடிக்கின்றானே. என்னைப் பற்றி அறிந்துகொள்ள இவனுக்குத்தான் எவ்வளவு ஆவல், ஆர்வம். அதனால்தான் இப்படி தொடர்ந்து பல கேள்விகளை அடுக்கிக் கேட்கின்றான். என்ன ஊர்? என்ன பேர்? என்ன உறவு? என்றெல்லாமல்லவோ கேட்கின்றான். என்னை அடைய இவனுக்கு அத்தனை ஆர்வம்போலும். என் ஊர் தெரிந்து, பேர்தெரிந்து உறவும் தெரிந்தால் என்னைத் திருமணம் செய்துகொள்ளப் பெரிதும்விரும்புகின்றான் போலும். என்மீது இவனுக்குள்ள கொள்ளை ஆசைதான் என்னே. என்மேல் இவ்வளவு காதல் துடிப்புக் கொண்டுள்ள இவனுக்கு என் இதயத்தையும் நான் வெளிப்படுத்தி விடுகின்றேன் என்று, ''பேதையவள், தன்நிலை விரிப்பாள்''. இராமனின் முகமன் உரைகளையும் அதனால் சூர்ப்பணகை கற்பனை செய்துகொண்ட மனநிலையையும் கம்பர் பின்வரும் பாடலால் விளக்குகின்றார்:

''தீதில் வரவாக இவண்!
நின்வரவு சேயோய்!
போத உளதெம் உழை, ஓர்
புண்ணியம் அதன்றோ!
ஏதுபதி? ஏதுபெயர்?
யாவர் உறவு! என்றான்
வேதமுதல்! பேதைஅவள்
தன்னிலை விரிப்பாள்''

R. RAJU,
Commissioner
Administration Dept.

சூர்ப்பணகை எண்ணுகின்றாள்: இந்த அழகனே கேட்கின்றான், நம்மீது கொண்ட ஆவலால், பழம் நழுவிப் பாலில் விழுகின்ற சமயமாக அல்லவா இருக்கின்றது நம்முடைய நற்பேறு! இதற்குத் தக்கபடியாக பதில்சொல்லி இவனை எப்படியாயினும் என்மீது மேலும் மேலும் ஆசைகொள்ளும்படிச்செய்வேன் என்று எண்ணி ஆரம்பிக்கின்றாள் சூர்ப்பணகை. திருமணம் செய்துகொள்ள விரும்பும் ஒருபெண்ணுக்கு என்னென்ன தகுதிகள் இருக்கவேண்டும். பஞ்சலட்சணங்கள் அமைந்திருக்கவேண்டுமாம். அவைகளைச் சூர்ப்பணகையே அமைத்துத் தொகுத்துச் சொல்வதைக் கேளுங்கள். திருமணம் செய்துகொள்பவன், பெண்ணுக்கு முதலில் அறிவு இருக்கிறதா என்று பார்க்கவேண்டும். திருமணத்துக்கு முன் சோதிக்காவிட்டால் பிறகு கடைசிவரை துன்பத்தையே அனுபவிக்கவேண்டியிருக்கும். அறிவு இருந்துவிட்

டால் சகல நிலைமைகளிலும் சமாளிக்க வழிகள் தெரியுமல்லவா? நான்யார் தெரியுமா? வேதங்கள் தான் அறிவின் சிகரங்கள், சின்னங்கள். அந்த வேதங்களுக்கே அதிகாரியானவன், தாமரை மலரில் எழுந்தருளியுள்ள பிரமன். அந்தப் பிரம தேவனுடைய - புதல்வனுடைய, மைந்தனுடைய புதல்வியாகும் நான். பிரம தேவனின் கொள்ளுப்பேர்த்தி என்றால் என் அறிவைப் பற்றிக் கேட்கவும் வேண்டுமோ? ''பூவிலோன் புதல்வன் மைந்தன் புதல்வி''.

அறிவிருந்தால் மாத்திரம் போதுமா, போதாது. திருமணப்பெண், பெரிய செல்வர் வீட்டுப் பெண்ணாகவும் திகழ்தல் வேண்டும். எங்கள் செல்வத்தைச் சொல்லட்டுமா? ஆகாசம் வரையில் தன் ஆற்றல்களைச் செலுத்தி முப்புரங்களையும் எரித்தவன் சிவபெருமான். அவனுக்கு உள்ள உயிர்த்துணைவனான குபேரன், பாதாளம்வரையிற் பாயும் பணபலத்தைப் படைத்தவன். தனரேகையுடன் கொடுத்துக் கொடுத்துச் சிவந்துள்ள கையை உடையகுபேரன், எனக்குச் சகோதர உரிமை வாய்ந்தவன்.

''முப்புரங்கள் செற்ற
சேவலோன் துணைவன் ஆன
செங்கையோன் தங்கை''.

அறிவின் பலமும், பணத்தின் பலமும் உடைய நான், ஆள்பலமும் உடையவள். உற்றார் உறவினர் ஒருவர் துணையுமற்ற அநாதையல்லள் நான். தொலைத்து விட வேண்டுமென்று உள்ளத்தில் ஒரு சிறிது நினைத்தால், திக்கிற்கு ஒன்றாக உலகத்தையே தாங்கி நிற்கும் எட்டு யானைகளையும் வெருட்டி அடித்துவிடக்கூடியவன் இராவணேசுவரன். கடவுள் வாழ்கின்ற கயிலை மலையேயானாலும், ஒரு நொடியில் எளிதாகச் செந்தூக்காய்த் தூக்கி எறிந்துவிடக்கூடிய வல்லமையுடையவன் இராவணேசுவரன். இப்போது இவ்வுலகத்தை அவன்தானே ஆண்டு அரசுசெலுத்திக் காத்து வருகின்றான். அந்த இராவணேசுவரனுக்குப் பின் பிறந்த தங்கை நான்!

''பூவிலோன் புதல்வன் மைந்தன்
புதல்வி, முப்புரங்கள் செற்ற
சேவலோன் துணைவன் ஆன
செங்கையோன் தங்கை, திக்கின்
மாஎலாம் தொலைத்து வெள்ளி
மலைஎடுத்து உலகம் காக்கும்
காவலோன் தங்கை; காம
வல்லியாம் கன்னி என்றாள்''.

இராமன் தன்மீது விருப்பம் கொண்டாலும், ஒருகால் தனக்குத் திருமணம் ஆகிவிட்டது என்று எண்ணிவிடப்போகிறான்; அங்ஙனம் எண்ணிவிட்டால் ஒருகால் எங்கே தன்னை மணந்துகொள்ள விரும்பாமல் இருந்துவிடுவானோ என்று எண்ணிய சூர்ப்பணகை, தன்னைக் கன்னியென்றும், காமவல்லி என்றும், அறிமுகப்படுத்திக் கொள்ளும் திறம் நினைந்து இன்புறத்தக்கது.

விவிலிய நூலில் சொல்லுகின்ற கதை ஒன்று இங்கு நினைவுக்கு வருகின்றது. விவேகம் என்னும் பழத்தைத் தின்ற ஆதாம் என்னும் முதல் ஆண், உடல் உணர்ச்சி மிகுதியால் ஏவாம் என்னும் முதல் பெண்ணிடம் சென்று தன் உணர்ச்சியை வெளியிடும் முறையில் (''Madam, I am Adam'') ''ஏ பெண்ணே! நான் ஆண்'' என்றானாம். அதுபோல் இங்கே சூர்ப்பணகை இராமனிடம் சென்று, தன் மனோ விகாரங்களை (''Adam I am Madam'') ''ஏ ஆணே, நான் பெண்'' என்றல்லவா சொல்லுகின்றாள்.

சூர்ப்பணகை இராமனை வனத்திற்கண்டு உரையாடுவதாக அமைந்துள்ள இப்பகுதியில் கம்பரின் கவித்திறமும், பாத்திரப்படைப்பு நலனும் (Characterisation) மிக வியந்து போற்றத் தக்கனவாக அமைந்துள்ளன. இப்பகுதியில் வரும் பாடல் ஒவ்வொன்றும், மொழிக்கு மொழி தித்திப்பாகவும், கருத்தாழம் மிக்கனவாகவும்அமைந்து திகழ்கின்றன.

இராமபிரான் சூர்ப்பணகையை நோக்கி ''ஏது பதி? ஏது பெயர்? யாவர் உறவு?'' என்று வினவியதில், வேறொரு நுண்ணிய கருத்தும் சீருற அமைந்து தோன்றுகின்றது. இராமன் வேதங்களுக்கும் முதல்வனான முகுந்தன், முக்தியைத் தருபவன், அவன் கேள்வியைச் சூர்ப்பணகை எவ்வாறு பொருள் கொண்டிருத்தல் வேண்டும். இராமனின் கேள்வியில் பின் வரும் பொருள் அல்லவா தொனித்து நிற்கின்றது? ''ஏ ஆன்மாவே உனக்குப் பதி(நிலை)யான வீடு பரமபதமல்லவா? நீ துராத்மாவாகத் திரியாமல், நல்ல சீவாத்துமாவாக வாழ்ந்து, உலகில் நல்ல பெயருடன் அல்லவா விளங்கவேண்டும்?. நல்ல பெயர் எடுத்து நற்பதியான பரமபதத்தையடைய உனக்கு நல்ல ஆத்ம உறவு ஏற்பட்டுவிட்டதா? ஆசாரியனின் அனுக்கிரகத்தை நீ பெற்றிருக்கின்றாயா?'' என்றல்லவா, பொருள் கொண்டிருக்க வேணும்!

இத்தகைய நுணுக்கமான உட்கருத்துக்களுடன் வேதமுதல்வன் வினவினான்; சின்னதின் வயிற்றில் பிறந்த சிறியதின் காதில் இராமன் சொன்னான். ஆனால் சூர்ப்பணகை துராத்மாவாகையினாலே அத்தைத் தின்று அங்கே கிடவாமல், இராமனின் உயர்வை உன்னி, (அவன் திருவடி நிலையில் சரணடையாமல்), பேதையவள் தன் நிலை விரிப்பாள் என்று கவிச்சக்கரவர்த்தியான கம்பர் தன் மனதில் தோன்றிய பரிதாபத்தைத் தெரிவிக்கின்றார். ஆபாச உலக ஆசைகளைத் தணித்துக் கொள்ளப்புனிதமான இறை நிலையையும் மாசுபடுத்தும் பேதையின் உருவகமே, இராமாயணத்தில் சூர்ப்பணகைப் பாத்திரம்! மிக அற்பமான உலக ஆசைகளால், பந்தபாசங்களால் உந்தப்பட்டு, நாமும்கூட இராமபிரானை அணுக விரும்புகின்றோம். இராமன் சூர்ப்பணகையைக் கேட்ட கேள்விகளை உட்பொருளுடன் நாமும் நம்மைக் கேட்டுக் கொண்டால், அவன் அருள் பெற்று நாம் உய்யலாம்.

***

# சைவாகமங்கள்

திரு. மு. அருணாசலம்

முன்னுரை :

சைவசமயமும் சமய தத்துவமும் பற்றி வடமொழியில் எழுந்த தொன்மையான நூல்களில் சைவாகமமும் ஒரு தொகுதியாகும். இவை, கிறித்து அப்தத்துக்கும பல நூற்றாண்டுகளுக்கு முன்னமே செய்யப்பெற்றன என்று மட்டும் இப்போதைக்குச் சொல்லுவோம். இவை மிகப் பழமையான காலத்தில் சிவஞானமும் சிவானுபூதியும் பெற்ற ஞானிகளால் எழுதப்பெற்றவை. இறைவன் உணர்த்தத் தாங்கள் உணர்ந்தவற்றை அவர்கள் இவ்வாகம நூல் வழியில் எழுதிவைத்தார்கள். இவை பிற எவற்றோடும் தொடர்பில்லாத தனித்த ஞான நூல் தொகுதிகளாகும்.

வேதங்கள் அநாதியென்பது இந்து மரபு. அவ்வாறு அநாதியான வேதங்கள் சிதறுண்டு உருக்குலைந்து போனபின், வேதவியாசர் என்ற மகரிஷி பிற்காலத்தில் தமக்குக் கிடைத்தவற்றைத் தொகுத்துவைத்தார் என்று சொல்வது வடமொழியாளர் மரபு. ஒருகால் வேதவியாசருக்கு முற்பட்ட வேதங்களை ஆகம ஆசிரியர்கள் சரிபார்த்திருக்கலாம். வேதங்களைப் போலவே ஆகமங்களும் அநாதியானவை என்று சொல்லும் மரபும் உள்ளது. வேதாகமங்கள் என்று சொல்லும் தொடரும் இக்கருத்தையே உணர்த்துவது.

வேதம் என்று சொல்வதன் கருத்தை இங்கு உணர்ந்துகொள்ளுவது அவசியம். வேதங்கள் நான்கு . இருக்கு, எசுர், சாமம், அதர்வணம் என்பன. இருக்கு என்பது மந்திர ரூபமாக மட்டும் உள்ளது. எசுர் வேதம் அம் மந்திரங்களின் பிரயோகத்தைக் கொண்டது. சாம வேதம் அம் மந்திரங்களை இசையோடு பாடுவதை (கானம் செய்வதை)ப் பொருளாகக் கொண்டது. கயிலை மலையைப் பெயர்த்த இராவணனைச் சிவபெருமான் தமது ஒரு கால் விரல்நகத்தால் சிறிது ஊன்றிய மாத்திரத்தே நசுக்குண்டு பின் நாரத முனிவர் அறிவுரையின் படியே தன் கை நரம்புகளைத் தந்திகளாக மீட்டிக் கொண்டு சாமகானம் பாடிச் சிவபிரானை மகிழ்வித்து, விடுதலைபெற்று, வரங்களும் பெற்றான் என்ற இராமாயண வரலாறு இங்குச் சிந்திக்கத் தக்கது. நான்காவதாகிய அதர்வவேதம் காமியக் கிரியைகளைக் 'கொண்டது என்ற கருத்தால், அதை நீக்கி வேதங்கள் மூன்று என்று சொல்வதும் உண்டு.

இனி, ஒவ்வொரு வேதமும் நான்கு பாகங்களைக் கொண்டது. முதலாவது மந்திரபாகம். இது மந்திரம் மட்டுமே கொண்டது. இரண்டாவது பிராம்மணம். இது மந்திரங்களைக் கிரியைகளில் பயன்படுத்துவதை விரித்துரைக்கின்ற பாகம். மூன்றாவது ஆரண்யகம். இது ஆரண்யத்தில் (காட்டில்) தனியே இருந்து கொண்டு வேதப்பொருளைச்சிந்திப்பதும், அப்பியசிப்பதும் ஆகும். நான்காவது உபநிடதம். இது ஆசிரியனிடம் நெருங்கியமர்ந்து மெய்ப்பொருளைக் கற்பது. இந்நான்கில், உபநிடதம் ஒன்றுமட்டுமே மெய்ப்பொருளாகிய தத்துவப் பொருளை ஆராய்வது. மற்றவை மந்திரம் அல்லது தோத்திரம் அளவிலேயே நின்றுவிடுகின்றன. மந்திரமும் பிராம்மணமும் கிரியா காண்டம் என்றும், ஆரண்யகம் உபாசநாகாண்டம் என்றும், உபநிடதம் ஞானகாண்டம் என்றும் சொல்லப்பெறும். உபநிடதப் பகுதி சில சமயம் ஆரண்யகத்தின் பகுதியாகவே உள்ளது. இது வேதாந்தத்தின் இறுதிப்பாகம் ஆதலால் வேதாந்தம் என்றும் பெயர் பெறும். வேதத்தின் அந்தம், வேதாந்தம். இது தத்துவப்பொருளைச் சொல்லுவதால், தத்துவப் பொருளுக்கே வேதாந்தம் என்றபெயரும் வந்து விட்டது.

உபநிடதம் வெறும் தத்துவப்பொருளை மட்டும் சொல்லியிருக்க, ஆகமங்கள் எல்லாப் பொருளையும் சொல்லுகின்றன. ஆதி உபநிடதக்கருத்துக்களை ஆகம ஆசிரியர்கள் அறிந்தே நூல் செய்தார்கள் என்றும் சொல்வதுண்டு. ஆயினும் ஒன்று தெளிவு. உபநிடதங்கள் வட இந்தியாவில் தோன்றியிருக்கலாம். ஆகமங்கள் தென்னிந்தியாவில் தோன்றியவை என்பதில் இதுபோது கருத்துவேற்றுமை யில்லை. எனினும் இவை பண்டைத்தமிழ் (திராவிட) நாகரிகத்தின் சின்னங்கள் ஆதலால், தெய்வ வழிபாட்டுக் கொள்கையில்லாத உபநிடதங்கள் போல்அன்றி, இவற்றில் தெய்வவழிபாட்டுக் கொள்கை நிரம்பியுள்ளது. இவற்றைச் செய்த ஞானியர், அனைத்திந்தியர்களுக்கும் பொதுவான ஞானநூல் செய்த போதிலும், இவற்றிலும், தம்முடைய வாழ்க்கையிலும்கூடத் தமிழ்நாட்டின் தெய்வ வழிபாட்டுக் கொள்கையையே பிரதிபலித்தார்கள். தென்னாட்டின்

அதாவது தமிழ்நாட்டின் தெய்வக் கொள்கை என்பது, தமிழரின் சைவம் என்பதில் தடையில்லை.

இத்தெய்வக் கொள்கை அநாதியானது. அதாவதுஇது,தொடர்பாகமொகஞ்சோதாரோ அரப்பா நாகரிகத்தின் காலத்திற்கு முன்பிருந்தே தொடர்பு அறாமல் நிலவிவந்திருக்கின்றது. வடநாட்டில் தொடர்பு அற்றுப் போயிருப்பினும்,தமிழ்நாட்டில் தைலதாரை போன்று தொடர்புபெற்றிருந்தது. இதனுள் மூன்று இயல்புகள் தெளிவாகத் தெரிகின்றன. ஒன்று, புறத்தே விக்கிரகங்களையும், தெய்வ உருவங்களையும், இறைவனுடைய அருள்வெளிப்பாடுகளாக-கோயில்களிலும், அடியவர்களின் இல்லங்களிலும்-வழிபடுதல். இரண்டு, இவ்வழிபாடு அனைத்திலும், எல்லாப் பொருள்களையும் குறியீட்டுப் பொருள்களாகக் கொள்ளுதல். மூன்று, உள்ளத்தே அந்தர்யாமியாக இறைவனைக் காணுதல் ,கண்டு வழிபடுதல், தியானித்தல், இவற்றின்மூலம் அநுபூதி பெறுதல்.

இம்மூன்றையும் குறித்துச் சில சொற்கள் கூறலாம். முதலாவதான உருவவழிபாடு என்பது, அவரவர்தம் இல்லத்தில் தம் நன்மையைக் கருதிக் குரு உபதேசித்தபடி தாமே செய்கின்ற ஆன்மார்த்த (சுவார்த்த) பூசையும், சமூகம் அனைத்தின் நன்மைக்காகக் கோயில்களில் எழுந்தருளுவிக்கப் பெற்றுள்ள தெய்வத் திருவுருவங்களுக்கு அதிகாரம் பெற்றுள்ள பூசகர் செய்கின்ற பரார்த்த பூசையும் ஆகும். கோயிலில் செய்கின்ற பூசையானது பரம்பரையாக வந்த சிவாச்சாரியர் அல்லது குருக்கள் என்பவர், உலக நன்மைக்காகத் தினமும் குறிப்பிட்ட நேரங்களில் பல்வேறு உபகரணங்களோடு செய்கின்ற விரிவான பூசையாகும். ஆனால் ஆன்மார்த்த பூசையில் எவரும் தக்க குருவினிடத்தில் தீட்சையும் உபதேசமும் பெற்றுக்கொண்டு, தம் குடும்ப நன்மையைக் கருதித் தம்வீட்டில் செய்வதாகும்.

இரண்டாவதான குறியீடு என்பது, செய்கின்ற ஒவ்வொரு பூசைக் கிரியையிலும் உள்ளடங்கிய தத்துவப் பொருளாகும். பூசை செய்கின்ற உருவமே பரம்பொருளல்ல. இது கடவுளைச் சுட்டும் ஓர் அடையாளப்பொருள். இலிங்கம் என்ற சொல்லுக்கே அடையாளம் என்பதுதான் பொருள். இவ்வடையாளம் சர்வ வியாபகமான, மனம் வாக்குக்கு எட்டாத, பரம்பொருளை நினைவூட்டுவது;

காணாத அருவினுக்கும்
உருவினுக்கும் காரணமாய்
நீள்நாகம் அணிந்தார்க்கு
நிகழ் குறியாம் சிவலிங்கம்

—பெரியபுராணம், 3645

என்ற சேக்கிழார் திருவாக்கு இங்கு நினைவு கூரத்தக்கது. காண்கின்றஉருவத்தின்மூலமாய்க் காணாத அருவத்தினிடம் மனம் செல்ல வேண்டுமானால் இதற்கு உதவுவன திருவுருவும் அதன் வழிபாடும். இதை வைணவர் அர்ச்சை என்பார்கள். இதை அடியவன் சிவபிரானாகவே வழிபடவேண்டியவன். அப்பாலைக்கு அப்பாலாய் உள்ளவன், வழிபடுகின்ற நேரத்தில் அடியவனுக்கு அருள்செய்யும் பொருட்டு இக்கருணை உருவாய்த் தோன்றியிருக்கின்றான், என்பது பாவனை.

மூன்றாவது தியானம். புறத்தே புலன்களால் காணமுடியாத பொருளை அடியவர் அப்பொருளின் பரம கருணையினால், அகத்தே காணமுடிகிறது. தியானம் பல ரூபங்களையுடையது. குரு உபதேசித்த மந்திரத்தை மானசீகமாகச் செபித்துக் கொண்டிருத்தல்; நாமங்களையே சொல்லுதலாகிய நாமசெபம் தியானசுலோகங்கள் வருணிக்கின்ற உருவத்தை மனத்தால் பற்ற முயலுதல் -இவைகளெல்லாம் தியானத்துக்குச் சாதனங்கள். இவைகளில் யாவும் மனம் குவிவதற்கு உதவுகின்றன. மனம் குவிதலே தியானம். மனம் அடங்காவிட்டால் புறப்பூசை அநுபூதி தராது.

சினம் அடங்கக் கற்றாலும்
சித்திஎலாம் பெற்றாலும்
மனம் அடங்கக் கல்லார்க்கு
வாய்ஏன்? பராபரமே!

என்று தாயுமானவர் பாடியதுபோல, மனம் அடங்குதலாகிய அகப்பூசையே புறப்பூசையைப் பொருளுடையதாக்குகின்றது. இரு வகைப் பூசைகளும் முறையே அந்தர்யாக பூசை, பகிர்யாகபூசை என்றும் சொல்லப்பெறும்.

இவ்வாறு கூறிய இயல்புகளும் தனித் தனியே உள்ளவை அல்ல; மூன்றும் அடிப்படையில் ஒன்றாகக் கலந்த ஒருமையே புறப்பூசை.

வேதங்களில் மந்திரபாகம் தோன்றி நெடுநாள் ஆனபின்னரே, உபநிடதங்கள் இறுதிப் பாகமாக இயற்றப்பெற்றன. இவை தோன்றிய காலத்தில் தமிழ்நாட்டில்மெய்ப்பொருளுணர்வு நன்கு வளர்ச்சிபெற்ற நிலையில் இருந்தது. ஆதலால் அவ்வுபநிடதங்களில் தமிழரின் மெய்யுணர்வுக் கருத்துக்களும் இடம்பெற்றன. ஆதி ஆகமங்கள் பல,உபநிடதங்களுக்குக் காலத்தால் முற்பட்டவை. முதல் உபநிடதங்கள் கருத்துலக அப்பியாசங்களாகவே இருந்தன. ஆனால் ஆகமங்களோ, மக்கள் வாழ்க்கையில் பூரண ஆதிக்கம் பெற்றிருந்தன. ஆகவே ஆகமங்களை உபநிடதங்கள் பாதித்தது இயல்பு. இவை எல்லா மக்களுடைய வாழ்க்கையையும் பாதித்தன. ஆனால் வேதங்கள், மெய்ஞ்ஞான நாட்டமுடைய மேல்மக்கள் எண்ணத்தை மட்டுமே பாதித்தன. வாழ்க்கையைப் பாதிக்கவில்லை. வேத உபநிடதம் என்றால் கருத்துலக சஞ்சாரம். ஆகமமோ கருத்துலகோடுகூட, தூல உலகையும் உள்ளடக்கியது.

மேலும் ஆதியில் இருந்த சில முக்கிய உபநிடதங்களுக்குப் பின் புதிய உபநிடதங்கள் வேறு கருத்துக்களைக் கொண்டனவாகச் செய்யப்பெற்றமையே, ஓர் உண்மையைத் தெளிவுபடுத்துகிறது. இக்காலத்தில் ஒரு தெய்வவழிபாட்டை வலியுறுத்துகின்ற ஆகமங்கள் இருந்

தன. இவற்றையும் ஆகமங்கள் தழுவிக்கொண்டு ஒருமைப்படுத்த வேண்டியிருந்ததால், சமூக வளர்ச்சியில் இது இன்றியமையாதது. சமுதாயம் அப்படியே நின்றுவிடுவதில்லை. புதிய உயிர்த்துடிப்போடு வளர்ந்து வருகின்றது; பல துறை வளர்ச்சியும் சமயத்தைப் பாதிக்கின்றது. ஆதலால் சமய தத்துவ ஞானமும், மாறாவிட்டாலும் விரிவடைகின்றது. புதிய வடிவங்களை மேற்கொள்கின்றது. ஆதியில் இருந்த அத்வைத உபநிடதங்கள்-பிரம்மத்தை மட்டும் சொல்பவை - பின்னால் சைவம் வைணவம் யோகம் சாக்தம் சந்நியாசம் என்ற பல பிரிவுகளாக வளர்ந்தும், இந்த உண்மையையே நமக்கு உணர்த்துகின்றது.

தசோபநிடதம் என்று சொல்லுவது மரபு. இவை ஈச கேன கட பிரச்சன முண்டக மாண்டூக்கிய தைத்திய ஐதரேய சாந்தோக்ய பிருக-தாரண்யகம் என்பன. இவற்றை அடுத்துத் தோன்றியது சுவேதாசுவதரம் என்பது. ஆதி சங்கரர் இவை அனைத்துக்கும் விரிவான பாஷ்யம் எழுதியிருக்கிறார். முதல் பத்தைப் போல் அல்லாமல் பதினொன்றாவதாகிய சுவேதாசுவதர உபநிடதமானது, ஒரு தெய்வத்தையும், அத்தெய்வம் சிவம் என்பதையும் உபதேசிக்கின்றது. இந்த உபநிடதம் சிவபரம் பொருளைக் கூறுவது, ஆகமத்திலிருந்து எடுத்துக்கொண்ட கருத்து என்பது வெளிப்படை.

இக்காலத்தில் உபநிடதங்கள் வேதம் என்ற பெயரால் சைவசித்தாந்தத்தில் ஏற்றுக் கொள்ளப்பெற்றுள்ளன. அவற்றினுள்ளும் சிறப்பாகச் சுவேதாசுவதர உபநிடதமே சைவ சித்தாந்த உபநிடதம் என்று கொள்ளப்படுகின்றது.

''உபநிடதங்களுக்கு மூலம் பிராம்மணம் என்று சொல்லப்படுகின்றது. அது போலவே ஆகம நெறியும் பிராம்மணங்களிலிருந்து, இன்னும் பிற்பட்ட காலத்தில் தோன்றி யிருக்கலாம். சுவேதாசுவதரம் போன்ற சில உபநிடதங்கள் ஆகமங்களோடு தோன்றியனவாகும். இது முந்தைய உபநிடதங்களைப் போலப்பரம் பொருளைப் பரப்பிரம்மம் என்று சொல்லாமல் ஒரு சமயச் சார்புடைய பெயராகிய சிவம் என்ற பெயரால் குறிப்பிடுகின்றது'' என்று, இந்தியத் தத்துவ சாத்திரவரலாறு என்ற தமது நூலில் பி.தி. சீநிவாச அய்யங்கார் சொல்வது ஒருபுடை நோக்கத்தக்கது.

சங்கரர் சுவேதாசுவதர உபநிடதத்துக்குப் பாஷ்யம் எழுதியமையால் அதன்தன்மை நன்கு விளங்கும். இது ஆகமச்சார்புடையது என்றமையால், ஆகமங்களின் தொன்மையும், அவற்றின் கருத்துக்கள் வேதத்துள் புகுந்துள்ளமையும் விளங்கும். சிவம் என்று சொல்வதை ஏற்றுக் கொள்ள விரும்பாத சங்கர அத்வைதிகள் சிலர், சுவேதாசுவதர பாஷ்யம் சங்கரர் செய்தது அல்ல என்றும் சொல்லக் காண்கிறோம். அக்கருத்து இங்குத் தேவையில்லை.

—தொடரும்

---

## இறையருள் நூல்கள்!

*எத்தகை இன்ப ஊற்றாய், இறையருள் நூல்கள் உள்ள!*
*அத்தகை யவற்றை, அந்தோ! அறிவிலார் கடினம் என்பர்;*
*வித்தகக் கண்ணன் ஊதும் வேய்ங்குழல் இசைபோல், இன்பம்*
*மிக்கொளிர்ந்து, அறிஞர்க்கு ஆரா விருந்தென விளங்கும் நன்றே!*

—*தமிழாக்கம்:* ந. ரா. முருகவேள்

"How charming is divine philosophy!
Not harsh and crabbed as dull fools suppose;
But musical as is Appollo's lute,
And a perpetual feast of nectar'd sweets,
Where no crude surfeit regins."

**—John Milton, Comus.**

R. RAJU, Dy Commissioner H.Qrs. (Retired) HR&CE Administration Dept.

# திருவாசகத்தில் அறிவியல்

[ ந.ரா. முருகவேள், M. A., M. O. L. ]

## முன்னுரை :

இந்தக் காலம் அறிவியற் காலம் (The Age of Science). இந்த இருபதாம் நூற்றாண்டு அறிவியல் நூற்றாண்டு (The Century of Science & Technology) என்று, பெரிதும் போற்றப்படுகின்றது. இந்நாளில் எல்லாத் துறைகளிலும், அறிவியலானது பெரிதும் பரவி ஊடுருவி வருகின்றது. பெர்ட்ரண்ட் ரஸ்ஸல் என்னும் பேரறிஞர் கூறுமாறு போல, ''நூற்றைம்பதாண்டுக்காலத்துக்குட்பட்ட அறிவியலானது, தனக்கு முற்பட்ட ஐயாயிரம் ஆண்டுக் காலத்துப் பண்பாட்டைத் தகர்த்தெறிய வல்லதாக இன்று பெரிதும் வளர்ந்து வருகின்றது'' (Scientific Outlook, P.9.). மக்கள் எல்லோருமே அறிவியலிற் பெரிதும் ஈடுபாடும் ஆர்வமும் கொண்டு விளங்குகின்றனர். அறிவியல் என்று கூறினால் ,மக்கள் எதனையும் நம்ப முற்படுகின்றனர். மற்றையன எத்துணை மாட்சிமையுடையன வாயினும், மக்கள் மனத்தினை அவைகள் அவ்வளவாகக் கவருவதில்லை. இன்றுள்ள பொதுவான நிலை இது!

## கடினமும் சிறப்பும் :

திருவாசகத்தினைப் பற்றி ஒரு சிறிது நினைக்க நேரும்போதெல்லாம், மாணிக்கவாசகரின் மாட்சி-அவர்தம் பக்தியின் சிறப்பு-சிவபிரான் அவரைத் திருப்பெருந்துறைக்குப்போந்து ஆண்டுகொண்டருளிய செய்தி - திருவைந்தெழுத்து உபதேசம் - சிவபெருமான் மாணிக்கவாசகர் பொருட்டுச் செய்தருளிய திருவிளையாடல்கள் முதலியன பற்றியே, அறிஞர்கள் பொதுவாகப்பெரும்பாலும் கருதுவது வழக்கம். இடையிடையே திருவாசகத்தின் உருக்கச் சிறப்பு, அதனிற் காணப்படும் சொற்பொருட் சுவைநலங்கள், சமய தத்துவ நுண்பொருட் கருத்துக்கள் என்பனபற்றியும், அறிஞர்கள் சிற்சிலபோது பேசி மகிழ்வதுண்டு. ஆனால் ''திருவாசகத்தில் அறிவியல்'' என்பன போன்ற தலைப்புகளில் அண்மைக்காலம் வரை அறிஞர்கள் எவரும் சிந்தித்ததாகத் தெரியவில்லை. எனவே, இது மிகவும் கடினமான-ஆனாலும், இன்றியமையாத - ஒரு சிறந்த தலைப்பு ஆகும் என்பதில் ஐயம் இல்லை.

## அறிவியல் வளர்ச்சியின் விரிவு:

''மனித அறிவானது, சமாளிக்க முடியாத நிலையில் விரிவாகி விட்டது. ஒவ்வோர் அறிவியலும், மேலும் பன்னிரண்டைப் பெருக்கி விட்டிருக்கின்றது; ஒன்று மற்றொன்றைவிட மிகவும் நுண்ணியதாக உள்ளது. தொலைநோக்கடியானது, வானத்திலுள்ள விண்மீன்களையும் அவற்றின் இயக்கங்களையும் பற்றி, மனித மூளைக்கு எட்டாத பல செய்திகளை வெளிப்படுத்தியிருக்கின்றது. **நிலநூல்**, இதற்கு முன்பெல்லாம் ஆயிரம் என்ற அளவில் பேசப்பெற்று வந்தனவற்றை, நூறு நூறாயிரம் என்று பேசும்படி செய்துவிட்டது. **பௌதிக நூல்**, அணுவில் ஒரு பேருலகையே கண்டுவிட்டிருக்கின்றது; **உயிர்நூல்**, உடலின் ஒரு சிறு நுண்ணறையில் ஒரு சிறிய உலகையே காண்கின்றது; **உடலியல்நூல்**, ஒவ்வோர் உறுப்பிலும் எல்லையற்ற மறைபொருள் நுட்பத்தினை ஆராய்ந்திருக்கின்றது; **மனநூல்**, ஒவ்வொரு கனவிலும் விந்தையான நிகழ்ச்சிகளை விவரிக்கின்றது; **மனிதநூல்**, ஐயத்திற்கு இடமின்றி மனிதனின் பழமையைப் புதிதாக வலியுறுத்துகின்றது; **தொல்பொருள்நூல்**, புதைந்த நகரங்களையும், மறைந்த அரசுகளையும் அகழ்ந்தெடுக்கின்றது; **வரலாற்றுநூல்**, எல்லா வரலாறுகளையும் பொய் என்று நிறுவுகின்றது. **இறைநூல்**, சரிகின்றது; அரசியற்கொள்கைகள் சிதைகின்றன; புதிய கண்டுபிடிப்புகள், வாழ்க்கையையும் போரினையும் சிக்கலாக்குகின்றன; பொருளியற் கொள்கைகள், சூழ்நிலைகளை மாற்றி உலகத்தையே நிலைகலங்கச் செய்கின்றது!

முன்பெல்லாம் ஏனைக் கலைகளைத் தனக்குத் துணையாக அழைத்துப் பணிகொண்டு வந்திருந்த **தத்துவநூல்**, அவற்றை இணைத்து வைத்து இயக்கும் துணிவை இழந்து, உண்மை என்னும் போர்முனைகளினின்று தப்பி ஒடுகின்றது; புரியாத - குறுகிய சந்து பொந்துகளிற் புகுந்து நுழைந்துகொண்டு, வாழ்க்கையின் சிக்கல்களுக்கும் பொறுப்புகளுக்கும் அஞ்சி நடுங்கிப் பாதுகாப்பாக இருந்துவர முயல்கின்றது. இங்ஙனம் இன்று மனித அறிவானது, மனித மூளை தாங்க முடியாமல் தடுமாறும் அளவுக்குப் பெருகி வளர்ந்துவிட்டது!''

என்று ''தத்துவத்தின் கதை'' (Tye Story of Philosophy) என்னும் நூலில், வில் ட்யூரண்ட் (Prof. Will Durant) என்னும் பேராசிரியர் குறிப்பிடுகின்றார்.

## திருவாசகத்தில் அறிவியல்:

இவ்வாறெல்லாம் மிக விரிந்து வளர்ந்துள்ள அறிவியற் பெருக்கத்தின் கருத்துக்கள் அத்துணையும், திருவாசகத்தில் அமைந்துள்ளன என்று வலியுறுத்துதல், நமது நோக்கமன்று. ஆயினும், அறிவியல் ஒன்றையே பெரிதும் மதித்துத் திருவாசகம் போன்ற தெய்விக அருள் நூல்களை எளிதாக எண்ணிப் புறக்கணிப்பவர்க்கு, இத்தகைய நூல்களிலும் அறிவியற் கருத்துக்கள் சில உண்டு என்றும், இந்நூல்கள் அறிவியலுக்கு அறவே முற்றிலும் புறம்பானவை அல்ல என்றும், வலியுறுத்தி மொழிதலே, ஈண்டு நம் நோக்கம் ஆகும்.

''கண்ணுதல் கருணை வெள்ளம்
ஆயிரம் முகத்தாற் கண்டார்.''

என்று திருஞானசம்பந்தர் பற்றிச் சேக்கிழார் பாடுவது போன்று, திருவாசகம் போன்ற தெய்விக அருள் நூல்களை, நாமும் ஆயிர முகத்தால்—பல்வேறு கோணங்களில்—ஆராய்ந்துணர்ந்து பயன்கொள்ளுதல் வேண்டும் என்னும் ஆர்வத்தினையும் அன்பினையும் தூண்டுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

எனினும் ''உலகமானது கி.மு. 4004ஆம் ஆண்டில், அக்டோபர் 23ஆம் நாள், காலை 9 மணியளவில் படைக்கப்பட்டது'' (1) என்று அறிஞர் ஒருவர் வரையறை செய்து தெரிவித்தது போல் அன்றி, இங்கு நாம் பொதுவாகச் சில கருத்துக்களை மட்டுமே குறிப்பிட்டு எடுத்துக் காட்ட முடியும். திட்டவட்டமாக வரையறை செய்து வற்புறுத்திக் கூறுவதற்கு ஏதும் இல்லை. திருவாசகம் அறிவியலுக்கு மேற்பட்ட இறையியல் நிலையைச் சார்ந்தது என்பது தெளிவு.

'பைந்தமிழ் நவின்ற செந்நாப்புலவன்' (குமரகுருபரர்), 'அழுதடியடைந்த அன்பன் ' (பரஞ்சோதி முனிவர்), 'திருந்திய அன்பிற் பெருந்துறைப் பிள்ளை' (பட்டினத்தார்), 'திருவாதவூர்ச் சிவபாத்தியன்' (நம்பியாண்டார்), 'திருவாதவூர்மகிழ்செழுமறை முனிவர்' (பேராசிரியர்) என நம் முன்னைப் பெரியோர்கள் பலரும், பலவகைகளில் ஆராய்ந்து போற்றும் அருட்பெருஞ் சான்றோர் ஆகிய மாணிக்கவாசகரை, நாம் இங்கு ஒருவகையில் ஓர் அறிவியல் அறிஞர் என்னும் நிலையில் நோக்கி மகிழ முயலுவோமாக!

---

(1) "Dr. John Lightfoot, Vice-Chancellor of the University of Cambridge and one of the most eminent Hebrew scholars of his time, declared as the result of his most profound and exhaustive study of the Scriptures that the world and man were created by the Trinity on October 23, four thousand four B.C. at nine O'clock in the morning".

—*Andrew D. White*,

**A History of the Warfare of Science with Theology.**

## பக்தி வலையிற் படுவோன் :

அறிவியல் அறிஞர்கள் ஆகிய விஞ்ஞானிகள் பலதிறப்படுவர். 'நான் என்னுடைய தொலைநோக்காடி கொண்டு விண்ணகம் முழுவதையும் துருவிப் பார்த்துவிட்டேன். ஆனால் அங்கே கடவுள் காணப்படவில்லை.' ("I had swept the whole heavens with my telescope, but I saw no god there"—*La place*).

'கடவுள் என்று ஒரு பொருள் இருந்தால், அவர் என்னுடைய சோதனைக் குழாய்க்குள் வந்து புகுந்து, உலகுக்கு வெளிப்படக் கடவர்' ("If there be any god, let Him come into my test-tube and manifest himself to the world"). 'நாம்கடவுளை ஆராய்ந்தறிய முற்படுதல், இல்லாத ஒரு கறுப்புப் பூனையை, இருட்டறையிலே, ஒரு குருட்டு மனிதன் தேடிக் கண்டுபிடிக்க முயலுவதைப் போன்றதேயாகும்' ("A blind man searching for a black cat in a dark room,which is not there") என்றெல்லாம் கூறும் ஒரு சில உலகாயத விஞ்ஞானிகளைப் போன்றவர் அல்லர், நம் மாணிக்கவாசகர்!

கடவுளைத் தொலைநோக்காடியினாலும், சோதனைக் குழாயினாலும் ஆராய்ந்து கண்டறிதல் இயலாது! 'பக்திவலையிற் படுவோன் காண்க!' என்பது, நம் மாணிக்கவாசகர் அறிவுரை. இத்தகைய ஆராய்ச்சிகளுக்கெல்லாம் அப்பாற்பட்டு அகப்படாது ஒளித்து நிற்கும் கள்வன் - சோரன் - கடவுள் என்பது, நம் மாணிக்கவாசகரின் கண்டு பிடிப்பு!

''மரகதக் குவாஅல் மாமணிப் பிறக்கம்
மின்னொளி கொண்ட பொன்ஒளி திகழத்
திசைமுகன் சென்று தேடினர்க் கொளித்தும்,
முறையுளி ஒற்றி முயன்றவர்க் கொளித்தும்,
ஒற்றுமை கொண்டு நோக்கும் உள்ளத்து
உற்றவர் வருந்த உறைப்பவர்க் கொளித்தும்,
மறைத்திறம் நோக்கி வருந்தினர்க் கொளித்தும்,
இத்தத் திரத்திற் காண்டும்என் றிருந்தோர்க்கு
அத்தந் திரத்தின் அவ்வயின் ஒளித்தும்...
பண்டே பயில்தொறும் இன்றே பயில்தொறும்
ஒளிக்கும் சோரனைக் கண்டனம்''

எனத் திருவாசகம், கடவுளின் இயல்பைக் கவினுறப் பாடியிருத்தல் காணலாம். இறைவனைத் தொலைநோக்கியினாற் காண்டல் இயலாது, அருள் நோக்கினாலேயே அறிய முடியும். சித்தமும் செல்லாச் சேட்சியன் ஆகிய இறைவன், பக்தி வலையில் அகப்படுவான்!

## மூலமுதற் காரணன் :

இந்நாளைய அறிவியலறிஞர்கள், சூரியன் சந்திரன் முதலிய விண்ணகப் பொருள்களையும், நெருப்பு நீர் காற்று முதலிய மண்ணகப் பொருள்களையும், பல்வகைகளில் ஆராய்கின்றனர். ஆனால் இவற்றிற்கெல்லாம் மூலகாரணமான முதற்பொருளைப் பற்றி, அவர்கள் ஆராய்ந்தறிய முற்படுவதில்லை. மாணிக்கவாசகர் ஆகிய நம் அறிவியலறிஞரோ, இவைகளை ஆராய்வதுடன், இறைவனே இவற்றில் இன்னின்ன இயல்புகளை ஏற்படச் செய்தான் என்றும் இனிதெடுத்து இயம்புகின்றார்.

சூரியனில் ஒளியும், சந்திரனில் குளிர்ச்சியும், நெருப்பில் வெப்பமும், வானில் கலப்பும், காற்றில் எழுச்சியும், நீரில் இன்சுவையும், மண்ணில் திண்மையும் உண்டாகச் செய்த மூல முதற் காரணன் இறைவனே. ("There is certainly a Divine-Hand behind the phenomena of the universe"). அவனுக்கு நாம் நன்றியும் வணக்கமும் செலுத்துவோம் என அறிவுறுத்துகின்றார், நம் மாணிக்கவாசகர்!

''அருக்கனிற் சோதி அமைத்தோன்! திருத்தகு
மதியில் தண்மை வைத்தோன்! திண்திறல்
தீயின் வெம்மை செய்தோன்! பொய்தீர்
வானிற் கலப்பு வைத்தோன்! மேதகு
காலின் ஊக்கம் கண்டோன்! நிழல்திகழ்
நீரில் இன்சுவை நிகழ்ந்தோன்! வெளிப்பட
மண்ணில் திண்மை வைத்தோன்! என்றென்று
எனைப்பல கோடி எனைப்பல பிறவும்
அனைத்தனைத் தவ்வயின் அடைந்தோன்.....''

என்று திருவண்டப் பகுதியிலும்,

''பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி!
நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி!
தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி!
வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி!
வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி!''

என்று போற்றித் திருவகவலிலும், மாணிக்கவாசகர் ஆகிய அறிவியலறிஞர் பாடியிருத்தலை, நாம் திருவாசகத்திற் காணலாம்.

## அணுவின் நுண்மை :

விஞ்ஞான உலகில், இந்நாளில் 'அணு' பெரிதும் சிறப்பிடம் பெற்றுத் திகழ்கின்றது. இக்காலத்தை 'அணுயுகம்' (The Atomic Age) என்றே மக்கள் பெரிதும் குறிப்பிடுகின்றனர். நுண்ணிய பொருள்களிலெல்லாம் நுண்மை வாய்ந்தது அணு. அணுவின் நுண்மையினை இத்தகையதென வரையறுத்துக் கூறுதல், நம்மால் இயல்வதொன்றன்று. ஒருகுண்டூசியின் முனையில் எத்துணையோ கோடி அணுக்கள் அமைந்து கிடக்கின்றனவாம். ஒரு நொடிக்கு நூறுகோடி விழுக்காடு அகற்றினாலும், ஒரு குண்டூசியின் முனையில் அமைந்து கிடக்கும் பரமாணுக்களை அகற்ற இரண்டரை லட்சம் ஆண்டுகள் செல்லும் என அறிஞர் ஒருவர் கூறுகின்றார் எனின், அணுவின் நுண்ணிய தன்மை, எத்தகைய நிலையினதாக இருத்தல் வேண்டும் என்று, நாம் ஓரளவு எண்ணியுணரலாம் (2).

இத்துணை நுண்ணிய பரமாணுவைக் காட்டிலும், மிக மிக நுண்ணிய-அதி சூக்குமப் பொருளாக இறைவன் விளங்குகின்றான் என்று, மாணிக்க வாசகர் கூறுகின்றார். அணுவிற் காணப்படும் நுட்பத் தன்மையிலும் வியக்கத் தக்க நுட்பமானவன் இறைவன் என்னும் கருத்தினை,

''அணுத்தருந் தன்மையில்
ஐயோன் காண்க!''

எனவரும் திருவாசகத்துத் - திருவண்டப்பகுதியின் அகவல்வரி உணர்த்துதல் காணலாம். இறைவன் வியக்கத்தக்க நுட்பப் பொருளாக இலங்குபவன் என்பதனை,

''சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந்து
ஒன்றாம் திருப்பெருந் துறையுறை சிவனே!
ஒன்றும்நீ அல்லை; அன்றிஒன் றில்லை;
யார்உனை அறியகிற் பாரே?''

என வரும் சிறந்த திருவாசகப் பாடலில் மாணிக்கவாசகர் அழகுற விளக்கி அருள்கின்றார். இவ்வருமைத் திருப்பாடலின்கண், ''சென்று சென்று அணுவாய்த்தேய்ந்துதேய்ந்து ஒன்றாம் திருப்பெருந்துறையுறை சிவன்'' என இறைவனின் நுண்மைத் தன்மையினை விளக்கும் பகுதி, இந்நாளைய அணு ஆராய்ச்சிக் கருத்துக்களைத் தழுவி இருத்தல், அறிந்து இன்புறுதற்குரியது.

## தாயிற் சிறந்த தயா :

தாயின் சிறப்பைப் போற்றாதவர் தரணியில் இல்லை. ஆத்திகர் நாத்திகர் அனைவருமே தாயின் மாண்பினைத் தகுதியுறப் புகழ்ந்து மகிழ்வர். விஞ்ஞானிகளாயினும், மெய்ஞ்ஞானிகளாயினும், அனைவரும் தாய் வயிற்றிற் பிறந்து, தாயினால் வளர்க்கப் பெற்றவர்களே யாவர். தாயின் தன்னிகர் இல்லாச் சிறப்புக்குக் காரணம், அவள் நமக்குப் பாலூட்டித் தாலாட்டி, நம்மைச் சீராட்டிப் பாராட்டி வளர்க்கின்றாள் என்பதேயாகும். தாயின் அன்பிற்குச் சமமாகக் கூறத்தக்கது, இவ்வுலகிற் பிறிதெதுவும் இல்லை. தாயின் சிறப்பே இங்ஙனம் இணையற்றதெனின், அத்தாய் நமக்குத் தரும் பாலைப் படைத்தளித்து அருளும் பரமனின் பெருமைக்கும் ஓர் எல்லை உண்டோ? தாயின் சிவந்த நிற இரத்தம், வெண்மை நிறம் அமைந்த பாலாக எங்ஙனம் மாற்றம் எய்துகின்றது ? 400 அவுன்சு இரத்தம் பரவுதலால் அன்றோ, ஓர் அவுன்சு தாய்ப்பால் சுரக்கப் பெறுகின்றது. தாயின் இரத்தமே பாலாக மாறினாலும், இரத்தத்திலும் தாய்ப்பாலிலும் உள்ள சத்துப் பொருள்களின் தன்மையும் அளவும் ஏன் மாறுபடுகின்றன? எங்ஙனம் மாறுபடுகின்றன ? விஞ்ஞான ஆராய்ச்சிகளுக்கு எட்டாத வியத்தகு பெருஞ்செய்திகளாக அன்றோ,

---

(2) "As regards the size of Atoms, it has been said that, if we were to remove those contained in the head of an ordinary pin at the rate of a thousand million (1000, 000,000) per second, we should have to carry on the process for 250,000 years. And yet each of these atoms, they tell us, is itself a solar system, with electrons whirling like planets around a central nucleus. The size of these electrons, as compared with the size of the atom, they say, is like a pea in one of the great cathedrals of Europe".

—*S. J. Louis Leguen*

இவையனைத்தும் மிகப் பெரிதும் அற்புதமாக அமைந்து உள்ளன ! (3)

பாலூட்டும் தாயினும், அப்பாலைப் படைத்து அளித்துதவும் பரமனின் அருட்டிறம் சாலவும் சிறந்ததொன்றன்றோ? இதுபற்றியே, மாணிக்கவாசகர் இறைவனின் கருணைத் திறத்தினை வியந்து ஆங்காங்கே பின்வருமாறு புகழ்ந்து பாடியருள்கின்றார்: ''தாயிற்சிறந்த தயாவான தத்துவனே'' (சிவ பு. 64); 'தாயேயாகி வளர்த்தனை போற்றி' (போற்றி. 87); 'தாயி லாகிய இன்னருள் புரிந்த தலைவன்' (சதகம் 43); 'தாயான ஈசன்' (தெள்ளேணம், 12) 'பால்நினைந் தூட்டும் தாயினும் சாலப் பரிந்து' (பிடித்த, 9) ; 'தாயாய் முலையைத் தருவானே' (ஆனந்த. 5).

R. RAJU,
Dy Commissioner H.Qrs.
(Retired)
HR&CE Administration Dept

## உள்ளது சிறத்தல் :

'உள்ளது சிறத்தல்' ( The Theory of Evolution ) என்னும் பரிணாமக் கொள்கை, சென்ற நூற்றாண்டில், சார்லஸ் டார்வின், ஆல்ஃபிரெட் ரஸ்ஸல்வாலஸ், தாமஸ் ஹக்ஸ்லி முதலிய விஞ்ஞானப் பேரறிஞர்களால் வேகமாகப் பரவத் தொடங்கியது. இக் கொள்கையைப் பற்றிய விஞ்ஞானக் குறிப்பு, திருவாசகம் சிவபுராணத்தில், காணக்கிடைக்கின்றது.

எல்லா உயிர்ப் பொருள்களும், நிலைஇயல் (தாவரம்), இயங்கியல் (சங்கமம்), என இரு வகைப்படும். தாவரவகையுள், கல், புல், பூண்டு, மரம் என்னும் நான்கும், சங்கம வகையுள், புழு பாம்பு பறவை மிருகம் மனிதர் அசுரர் முனிவர்கள் பேய்க் கணங்கள் தேவர்கள் என்னும் பத்தும் அடங்கும்.

இந்நிலவுலகிற் புற்பூண்டுகள் தோன்றுதற்கு முன்னர் எல்லா உயிர்களும், மலைகளின் அணுக்களிற் புலப்படாது கிடந்தன. பின்னர் உடம்புகள் பெறுதற்கு ஏற்ற தகுதியுற்ற காலத்தே, அவற்றினின்று முதலிற் புற்களும், அதன் பிற் பூண்டுகளும், அதன்பின் மரங்களும் தோன்றுவனவாயின.

இவ்வாறு நிலையியற் பொருள்களாய்ப் பிறந்து, அவற்றின்கண் இருந்து அறிவு சிறிது விளங்கி, அதனினும் மேற்பட்ட அறிவு விளங்குதற்குரிய தகுதிப்பாடு எய்திய நிலையில், உயிர்கள் இயங்கியற் பொருள்களில் ஈரறிவு உயிர்களான புழுக்களாகவும், மூவறிவுடைய சிதல் எறும்புகளாகவும், நாலறிவு வாய்ந்த நண்டு தும்பிகளாகவும், ஐயறிவுடைய மிருகங்களாகவும், ஆறறிவு பெற்ற மனிதர் அசுரர்களாகவும், ஆறறிவின் மேம்பட்ட முனிவர்கள் பேய்க்கணங்கள் தேவர்கள் ஆகவும், பிறவி எடுக்கும் உயிர்களின் அறிவுவளர்ச்சிக்கு ஏற்பப் படிப்படியே, அவற்றின் உடம்பின் அமைப்பும் வளர்ச்சியுற்றுச் சிறப்பெய்தும் என்பது இதனால் அறியப்படும்.

இப்பரிணாமக் கொள்கை, மேலை நாட்டு விஞ்ஞானிகளே, புதுவதாகக் கண்டு பிடித்ததன்று. இக்கொள்கை, நம் முன்னோர்களால் நன்கு அறியப்பட்டிருந்த தொன்றேயாகும். ''புராணங்களில் பல இடங்களில் திருமாலின் பத்துப் பிறவிகள் (தசாவதாரங்கள்) சொல்லப் படுகின்றன. கூர்தல் அல்லது உள்ளது சிறத்தல் (Evolution) முறைபற்றி, அப்பத்தையும் உற்று நோக்கின், படிப்படியாக உயிர்களின் பிறவி வளர்ச்சி புலனாகும். நம்நாட்டுப் பௌராணிகர்கள் பெரிய ஹெக்கல்கள், டார்வின்கள் போலும்'' என்பர், தமிழ்த் தென்றல் திரு. வி. கலியாணசுந்தரனார்.

இக்கருத்தினையே, தாம் எழுதியுள்ள 'சமயமும் பண்பாடும் பற்றிய கூறுகள்' (Phases of Religion and Culture) என்னும் நூலிற் பேரறிஞர் ஒருவர் விவரித்திருத்தல் காணலாம். ''இந்நாளைய விஞ்ஞானிகள் பலவகை ஆராய்ச்சி நெறி முறைகளால் மிகவும் பாடுபட்டுக்காணும் அறிவியலுண்மைகளை, நம் முன்னோர்கள் தம் உள்ளொளியின் (Intuition) வாயிலாக, மிக எளிதாகப் பல ஆயிரம் ஆண்டுகட்கு முன்பே அறிந்திருந்தனர்.'' (4)

''புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்''

என வரும் சிவபுராணத் திருவாசக வரிகள், ஏறத்தாழ ஆயிரத்து அறுநூறு ஆண்டுகட்கு முன்னரே, இந்நாளைய விஞ்ஞானிகள் கூறும் பரிணாமக் கொள்கையைப் பற்றி ஒருவகையிற் குறிப்பிட்டிருத்தல் காணலாம்.

---

(3) "The exact means by which the breasts produce milk remains one of the mysteries of science. There is but one raw material, it could draw on is blood, and the conversion of blood into milk is a sutpendous chemical achievement.

Estimates indicate that 400 ounces of blood must circulate through breasts to make a single ounce of milk. Components of blood are totally unlike those of milk.

The milk that breasts produce is miraculous; chemists have never been able to duplicate it. It is exactly tailored to meet the needs of the infant, whatever the species."

—*Family Doctor*,
The British Medical Association

(4) "What has been sought to be achieved in the west by deductive work, by dialectics, by experimentation, by logical process was apprehended and perceived in this country, largely by means of intuition, centuries, nay, millennia ago".

—*Dr C. P. Ramaswamy Aiyar*,
Fundamentals of Hindu Faith and Culture

"Ancient seers' and yogis' intution had anticipated, even in the hoary past, some of the modern discoveries of science. Take for instance the wave theory of sound and light. Patanjali says (S.43. Ch.III) that even subtle sounds—Ultra-sonic sounds also—are heard when the Yogi concentrates and tunes in on the atmospheric or etheric waves coming from the higher spheres".

—*Dr.V.M.Bhat*,
Yogic Powers and God-Realisation.

## வானநூல் ஆராய்ச்சி :

மாணிக்கவாசகர் ஆகிய நம் அறிவியல் அறிஞர், வானநூல் ஆராய்ச்சியிலும் தலை சிறந்திருந்தார் என்பது, அவர்தம் திருவாசகத் தாற் புலனாகின்றது. இரவு நேரங்களில் வானத்தில் எண்ணில்லாத விண்மீன்கள் ஒளிர்ந்து கொண்டிருத்தலை நாம்காண்கிறோம். பொதுவாக நம்முடைய வெறுங் கண்ணுக்குத் தெரிவன, ஏறத்தாழ 3,000 விண்மீன்களே யாகும். ஒவ்வொரு விண்மீனும் நாம் வாழும் இந்நிலவுலகத்தை விட, எத்தனையோ ஆயிரம் மடங்கு பெரியதாகும். சூரியன் நம் மண்ணுல கத்தினின்று 93,000,000 மைல் தொலைவில் இருக்கின்றது. இச்சூரியனைவிட எத்தனையோ மடங்கு தொலைவில், எண்ணில்லாத பல விண்மீன்கள் வானத்தில் இயங்கிக் கொண்டிருக் கின்றன. நமக்கு மிக அணித்தாக இருக்கும் விண்மீனின் தொலைவே, 25,500,000மைல்கள் ஆகும் எனின், மிகமிக நெடுஞ்சேய்மையில் உள்ள விண்மீன்களின் தொலைவு எங்ஙனம் இருக்கும் என்பதனை, நாம் ஓரளவு கருதி யுணர்ந்து கொள்ளலாம்.

ஒளியானது ஒருநொடி நேரத்தில் 186,000 மைல் விரைந்து செல்லும் தன்மை யுடையது. அத்துணை விரைவு பெற்றிருந்தும், சில விண்மீன்களின் ஒளிக்கதிர்கள் இந்நிலவுல கத்தை அடைய எத்துணையோ பல ஒளி யாண்டுகள் (Light Years) ஆகின்றன. இத் தகைய விண்மீன்கள் சுமார் நூறாயிரம் மில்லி யன் மில்லியன்கள் (100,000,000,000,000, 000,000) இருப்பதாக, அறிஞர்கள் ஆராய்ந்து கூறுகின்றனர். இத்துணை விண்மீன்களும் தம் முள் ஒன்றிற்கொன்று 180,000 ஒளியாண்டு களின் தொலைவில் உள்ளன. இந்நிலவுலகத் திற்கு 500 மில்லியன் ஒளியாண்டுகளின்தொலை விலும், பல விண்மீன்கள் இருக்கின்றன. சூரி யனைவிட 28 மடங்கு ஒளிமிகுந்தது சிரியஸ்; 50 மடங்கு மிகுந்தது வேகா; 100 மடங்கு மிகுந்தது ஆர்க்டாஸ்; 1000 மடங்கு மிகுந்தது கேனோபஸ்; அதனினும் ஒளிமிகுந்தது ரிகல் (5). இங்ஙனமெல்லாம் ஆராய்ந்து கூறும் வான நூலறிஞர்களின் கருத்துக்களை, ஓரளவு நம் மாணிக்கவாசகப் பெருமானும் அறிந்திருந்தார் போலும்! இச்செய்தி, பின்வரும் திருவண்டப் பகுதி வரிகளால் தெளியப்படும்.

''அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்
அளப்பருந் தன்மை வளப்பெருங் காட்சி
ஒன்றனுக் கொன்று நின்றெழில் பகரின்
நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன;
இல்நுழை கதிரின் துன்அணுப் புரையச்
சிறிய வாகப் பெரியோன்! தெரியின்
வேதியன் தொகையொடு மாலவன் மிகுதியும்
தோற்றமும் சிறப்பும் ஈற்றொடு புணரிய
மாப்பே ரூழியும் நீக்கமும் நிலையும்
சூக்கமொடு தூலத்துச் சூறை மாருதத்து
எறியது வளியிற்
கொட்கப் பெயர்க்கும் குழகன்''

வானவெளியில் உலவிச் சுழலும் விண் மீன்கள் ஆகிய அண்டப் பகுதிகளின் உண் டைப் பிறக்கங்கள், அளப்பருந் தன்மையுடை யனவாய், நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன என்றும்; அவற்றைக் கூர்ந்து நோக்கி ஓர்ந்து உணர வல்லவர்களுக்கு அவைகள் வளப்பெருங் காட்சியாகத் திகழ்வன என்றும் பிறவாறும், மாணிக்கவாசகர் இவ்வரிகளிற் குறிப்பிட்டிருத்தல், சர். ஜேம்ஸ் ஜீன்ஸ் தம்மு டைய ''அதிசய உலகம்'' (The Mysterious Universe) என்னும் நூலில் விவரித்திருக்கும் கருத்துக்களை, நுண்ணிதின் உட்கொண்டிருக் கின்றன எனலாம்.

## கருவளர்ச்சி நூல் ஆராய்ச்சி:

மாணிக்கவாசகர், உயிர்களாகிய நமக் கெல்லாம் இறைவன் செய்து போதரும் பல வகை யுதவிகளையும் நினைப்பித்து, இறைவ னின் அருள் நலத்தினை வியந்து போற்றி நன்றி பாராட்டுகின்றார். மனிதராகப் பிறந்துள்ள நாமெல்லாம் யானை முதலாக எறும்பு ஈறாக உள்ள பல்வேறு பிறவிகளை எடுத்து, மிகப்பல இன்னல்களைக் கடந்து, படிப்படியே உயர்ந்து, பின்னரே, இம்மனிதப் பிறவியை அடைந்துள் ளோம். மனிதப் பிறப்பிலும் நம்மனோர் எய்தும் இன்னல்களுக்கு எல்லையேயில்லை. தாயின் வயிற்றில் நாம் பத்து மாதங்கள் கருவாகத் தங்கிக் கிடந்து, முறை முறையே உருவாகி வளர்ந்து, குழந்தையாக உலகில் வெளிப்படுவதற்குள், மிகப்பல இடர்ப்பாடுகளி னின்று தப்பிப் பிழைக்க வேண்டியிருக்கின்றது. கருச்சிதைதல் (Abortion) என்னும் கேடுற்று, நாம் தாயின் வயிற்றிலேயே இறந்து போய் விடாமல், ஒவ்வொரு மாதத்திலும் உண்டா கும் இடுக்கண்களை எல்லாம் நீக்கி, இறைவனே நமக்குத் துணையாக இருந்து நம்மைக் கருணை யோடு காத்தருள் புரிகின்றான்.

''யானை முதலா எறும்பு ஈறாய
ஊனமில் யோனியின் உள்வினை பிழைத்தும்;
மானுடப் பிறப்பினுள் மாதா உதரத்து
ஈனமில் கிருமிச் செருவினிற் பிழைத்தும்;
ஒருமதித் தான்றியின் இருமையிற் பிழைத்தும்;
இருமதி விளைவின் ஒருமையிற் பிழைத்தும்;
மும்மதி தன்னுள் அம்மதம் பிழைத்தும்;

---

(5) "To our present knowledge there exist appromximately a thousand million separate star -worlds, each comprising something like one hundred thousand million (100,000,000,000) stars, and many more beyond our range of vision.

This means that, within our range of vision, there seem to exist about one hundred thousand million million million of stars; that is to say, a number represented by one with twenty zeros (700,000, 000,000,000, 000,000,); and there may exist many more beyond our range of vision:

Those thousand million star-worlds are said to be 1,800,000 light years' distant from one another, and the most distant is said to be 500 million light years away from us.

And yet their millions of whirling suns are all poised and regulated in their motions through space by fixed law of attraction keeping them in their orbits through space".

*—Sir Harold Spencer Jones*

ஈரிரு திங்களிற் பேரிருள் பிழைத்தும்;
அஞ்சு திங்களின் முஞ்சுதல் பிழைத்தும்;
ஆறு திங்களின் ஊறலர் பிழைத்தும்;
ஏழு திங்களிற் தாழ்புவி பிழைத்தும்;
எட்டுத் திங்களிற் கட்டமும் பிழைத்தும்;
ஒன்பதில் வருதரு துன்பமும் பிழைத்தும்;
தக்க தசமதி தாயொடு தான்படும்
துக்க சாகரத் துயரிடைப் பிழைத்தும்......''

எனவரும் திருவாசகப் போற்றித் திருவகவல் வரிகள், தாயின் வயிற்றிற் பத்து மாதங்கள் தங்கிக் கருவானது வளர்ச்சி எய்தும் முறையினை, எத்துணை நுணுக்கமாக எடுத்துக் காட்டித் திறம்பட உணர்த்துகின்றன. இற்றை ஞான்றை மேற்புல அறிவியல் நூலார் (Obstetricians and Gynaecologists) மிகவும் நுணுகி ஆராய்ந்து கண்டுரைக்கும் கருத்தோற்றமும், கருவளர்ச்சி நிலைகளும் பற்றிய செய்திகளை, எக்ஸ்ரே முதலிய கருவிகள் எதுவும் இல்லாமலே, ஏறத்தாழ 1,600 ஆண்டுகளுக்குமுன்பே அறிந்து குறிப்பிட்டிருக்கும் சிறப்பு, மிகவும் வியந்து மகிழத்தக்கதன்றோ ?

## இருதயமும் இறைவனும் :

இருதயம் (நெஞ்சப்பை), நம்முடைய உடலில் உள்ள ஒரு சிறப்புறுப்பு ஆகும். அஃது இல்லையேல், நமக்கு வாழ்வேயில்லை. அதன் அசைவும் இயக்கமும் ,நாம் உயிர் வாழ்வதற்கு மிகவும் இன்றியமையாதவை. சராசரி மனித உடம்பில் ஏறத்தாழ 5 லிட்டர் முதல் 6 லிட்டர்கள் வரை இரத்தம் இருக்கின்றது. இந்த இரத்தமானது இடைவிடாமற் பயன்படுத்தப் பட்டும், புதுப்பிக்கப்பட்டுக் கொண்டும் வருகின்றது. இருதயமானது இரத்தத்தை ஓய்வு ஒழிவு இன்றி இயங்கிக் கொண்டிருக்கவும், உடம்பு முழுவதும் பரவிச் சுற்றிவரவும் செய்கின்றது. இத்தகைய இருதயம் என்னும் உறுப்பின் அமைப்பானது, மிகவும் வியத்தற்குரிய ஒரு பொறி போன்றதாகும். இதனைத் தசையினால் இயன்ற ஒரு ''வெளியேற்றியக்க நிலையம்'' என நாம் குறிப்பிடுதல் பொருந்தும்.

இருதயமானது ஒவ்வொரு நிமிடமும், 12000 மைல் நீளமுடைய நாளங்களின் வழியாக உடலில் இரத்தம் பரவவும், மீண்டும் தன்பால் திரும்பி வந்து சேரவும் ஏற்றபடி அயராமல் இயங்கிக் கொண்டே இருக்கின்றது. ஒவ்வோர் 24 மணிநேரத்திற்கும் 1000 லிட்டர் அளவு இரத்தம் இருதயத்திற்கு வந்து கொண்டும், இருதயத்தினின்று சென்று கொண்டும் உள்ளது. இத்தொழிலைச் செய்வதன் பொருட்டுச் செலவாகின்ற ஆற்றல் ,சராசரி அளவுள்ள ஒரு மனிதனை 1259 அடி உயரத்தில் எழும்பச் செய்வதற்குப் போதுமானதாகும்.

இயல்பான ஒரு மனித வாழ்வின் 70 ஆண்டுகளில், நம்முடைய இருதயம் 2,500,000,000 முறை துடிப்புற்று இயங்குகின்றது. அஃது ஒரு சிறிதும் ஓய்வு கொள்வதில்லை. பழுது பார்க்கப்படுவதற்காகச் சற்றேனும் நிற்பதில்லை. இத்தகைய ஓர் அற்புதக் கருவியை, நம்மனோர் எவரேனும் படைத்தல் இயலுமோ? (6)

வியப்பை விளைவிக்கும் இத்தகைய இருதயத்தின் இடைவிடாத் துடிப்பையும் இயக்கத்தையுமே, நம் மாணிக்கவாசகர் போன்ற அருளாளர்கள் ஆகிய சிவஞானச் செல்வர்கள், தில்லைத் திருச்சிற்றம்பலத்தில் நிகழும் சிவபிரானின் திருநடனம் என்று கொண்டு, வியந்து புகழ்ந்து போற்றியுள்ளனர் எனத் திண்ணிதிற் கூறலாம்.

மாணிக்கவாசகர் தில்லையிற் பலகாலம் வாழ்ந்தவர். தில்லையில் திருவாசகப் பகுதிகள் பல, அவரால் பாடப்பெற்றன. தில்லை நடராசப் பெருமானை வழிபட்டு மகிழ்ந்து, அவரோடு ஒன்றியவர் மாணிக்கவாசகர். அவரால் திருச்சிற்றம்பலக் கோவையார் என்னும் சிறந்த நூல், அங்கேயே பாடப்பெற்றது. திருமுறைத் திருப்பதிகங்களை ஓதும்போதெல்லாம் ''திருச்சிற்றம்பலம்'' என்று கூறி, அதன் பின்னரே நாம் திருமுறைப்பாடல்களைப் பாடத் தொடங்குகின்றோம்.

## திருச்சிற்றம்பலம் :

நம்முடைய இருதயமே, திருச்சிற்றம்பலம், இருதயத்தின் தாமரை மொட்டுப் போன்ற அமைப்பே, ஓங்காரம்; இருதயத்தில் விளங்கும் மின்னாற்றலே, இறைவன்; அம் மின்னாற்றலின் அசைவே, இறைவனின் திருநடனம்; இருதயத்தில் விளங்கும் மூலமுதல் நுண்ணொலியே இறைவனின் திருவடிச் சிலம்பொலி; இருதயத்தின் சுற்று வடிவே, திருவாசிச் சுடரொளி.

நடராச வடிவின் அமைப்பினை வியந்து பேரறிஞர் திரு. ஆனந்தகுமாரசுவாமி அவர்கள் 'இது வெறும் கவிதைமட்டுமன்று, உயர்ந்ததோர் அறிவியலுண்மையும் ஆகும்' (It is not only poetry but also Science) எனப் புகழ்ந்திருத்தல் இங்கு நாம் சிந்தித்தற்குரியது.

## தெளிவுக் காட்சியும், கேள்வியும்!

மாணிக்கவாசகர், சிவபிரான் தமக்குச் செய்த அருளின் திறத்தினை வியந்து, ''நாட்டார்கள் எல்லோரும் விழித்திருப்ப, நாய்

(6) "There is normally about 5 to 6 quarts or litres of blood in average human body. This blood, constantly being used up and renewed, is kept in constant movement and circulation by heart. The heart is itself a wonder. It may be called a muscular pumping station. And it keeps on pumping the blood down into its 12000 miles of pipeline and back to itself about once every minute. This means that every 24 hours it receives and pumps out about 10,000 litres of blood; and the energy it spends in doing this is enough to raise a normal sized man 1259 feet up in the air. This means that in a normal life of 70 years ,our heart beats some 2,500,000,000 times; and that without any stop for repair! Do you think you or your father, could make a pump like that?"

—*Louis Leguen, S.J*

போன்ற எனக்கே தவிசிட்டான்; நாயாகிய எனக்கே காட்டாதன எல்லாம் காட்டினான்; கேளாதன எல்லாம் கேட்பித்தான்; மீட்டும் நான் பிறந்து துன்புறாதபடி என்னைத் தன் அருளாற் காத்து ஆட்கொண்டான். எம்பெருமான் எனக்காகச் செய்தருளிய விந்தைகளை என்னென்பது! என மகிழ்ந்து பாடுகின்றார்.

''கேட்டாரும் அறியாதான் கேடொன் றில்லான்
கிளையிலான் கேளாதே எல்லாம் கேட்டான்
நாட்டார்கள் விழித்திருப்ப ஞாலத் துள்ளே
நாயினுக்குத் தவிசிட்டு நாயி னேற்கே
காட்டாதன எல்லாம் காட்டிப் பின்னும்
கேளாதன எல்லாம் கேட்பித் தென்னை
மீட்டேயும் பிறவாமற் காத்தாட் கொண்டான்
எம்பெருமான் செய்திட்ட விச்சை தானே''

—திருச்சதகம், 28.

இப்பாடலின்கண், நம் மாணிக்கவாசகர் தமக்கு இறைவன் 'காட்டாதன எல்லாம் காட்டினான்' என்றது, இந்நாளைய அறிவியலறிஞர்கள் பலர் ஆராய்ந்து வரும் தெளிவுக் காட்சி (Clair - voyance) என்பதனையும்; 'கேளாதன எல்லாம் கேட்பித்தான்' என்றது, இந்நாளைய அறிவியலறிஞர்கள் பலர் ஆராய்ந்து வரும் தெளிவுக் கேள்வி (Clair–audience) என்பதனையும் போன்ற சிறந்த அருட்பேறுகள் என நாம் கொள்ளுதல் கூடும். இத்தகைய ஆற்றல்களை **E. S. P.** (Extra-Sensorial-Powers) என்று, மறைபொருளியல் ஆய்வு அறிஞர்கள் (Occultists) வழங்குவர் *(7)*.

## அறிவியல் அனுபவங்கள்....

விஞ்ஞான ஆராய்ச்சியில் ஈடுபடும் அறிஞர்கள், தத்தம் ஆராய்ச்சிகளில் தமக்கு ஏற்படும் அனுபவங்களை அவ்வப்போது குறித்து வைப்பது வழக்கம். மலேரியாக் காய்ச்சல், மஞ்சட்காய்ச்சல், புற்றுநோய், தொழுநோய் முதலியவற்றைப் போக்கும் மருந்துகளைக் கண்டுபிடிக்கப் பற்பல விஞ்ஞானிகள், தம்மையே பல கடுஞ்சோதனைக்கு உட்படுத்திக்கொண்டு, பல துன்பங்களை அனுபவித்து, அவற்றின் மூலம் தாம் கண்டறிந்த அநுபவங்களைக் குறித்து வைத்து, உலகுக்குப் பெருநலம் புரிந்துள்ளனர்.

பேராசிரியர் ஜே.பி.எஸ். ஹால்டேன் அவர்கள், **Corbon-Monoxide** என்னும் 'வாயுவை உட்கொள்ளுவதால், ஏற்படும் விளைவுகள் யாவை என்று அறியத், தம் உயிர்க்கு இறுதி பயக்கக்கூடிய பல சோதனைகளுக்குத் தம்மைத் தாமே ஈடுபடுத்திக்கொண்டு, அவற்றின்மூலம் தாம் கண்டறிந்த அனுபவங்களைக் குறித்து வைத்துச், சுரங்கத் தொழிலாளர்களுக்கும் வானூர்தியாளருக்கும் பயன்படும் பல சாதனங்களை அமைக்கத் துணைபுரிந்தார்.

இங்ஙனமே நம் அறிவியலறிஞர் ஆகிய மாணிக்கவாசகரும், இறைவன் தமக்குச் செய்த அருள்நலத்தால் தாம்பெற்ற அருள் அனுபவங்களை, நமக்குப் பயன்படும் பொருட்டு, அழகிய இனிய அழியாக் கவிதையாகக் குறித்துக் கொடுத்துள்ளார்.

## அருளியல் அனுபவங்கள்!

'எத்தனையும் அரிய கடவுள், எத்தனையும் எளியனாய் வந்து, எனக்குத் தடக்கையின் நெல்லிக்கனி ஆயினன். அவன் என்பாற் செய்த பேரருட்டிறனை யான் சொல்லும் வகையறியேன். நாயை ஒத்தவனாகிய அடியேன், அவ்வருட்பேரின்பத்தினைத் தாங்குதற்கு இயலாதுள்ளேன். இறைவன் அருளிய பேரின்பத் தேறலைக் குடித்தும் நிறைவு பெற்றிலேன். விழுங்கியும் பொறுத்துக்கொள்ள மாட்டேன். செழுந்தண்பாற் கடலின் திரைகளைப் போல மேன்மேற்பொங்கிவழியும் பேரின்பம், அவனால் எனக்குக் கிடைத்தது. அப்பேரின்ப அமுதமானது என்னுடைய உள்ளம் முழுவதும் ததும்பி நிரம்பி, மயிர்க்கால்தோறும் தேக்கிடுமாறு அவன் செய்து விட்டான்...இறைவன் என் உடலிற் குடில் அமைத்துக் கொண்டான். என் உடம்பெல்லாம் இனிய தேனைப் பாயச் செய்தான். புதுமை மிக்க அமுத ஒழுக்கானது, எனது எலும்பின் துளைகளிலெல்லாம் ஊற்றெடுத்துப் பெருகும்படி செய்தான். ஒன்றுக்கும் பற்றாத என்னையும், மதக்களிப்பு மிக்க ஆண்யானை போல, மிக மேலான பேரின்பத்தில் நிலை பெற்றிருக்குமாறு செய்துவிட்டான். **என்னுள்ளே அருளாகிய தூய தேன் கலவா நிற்க, அதனோடு மிக்க ஆனந்த வெள்ளமாம் அமுதத்தினையும் இயைத்தருளினான்''.**

''தடக்கையின் நெல்லிக்கனி எனக்கு ஆயினன்!
சொல்லுவ தறியேன்! வாழி! முறையோ?
தரியேன் நாயேன்! தான்எனைச் செய்தது
தெரியேன்! ஆவா! செத்தேன்! அடியேற்கு
அருளிய தறியேன், பருகியும் ஆரேன்!
விழுங்கியும் ஒல்ல கில்லேன்!
செழுந்தண் பாற்கடல் திரைபுரை வித்து
உவாக்கடல் நள்ளுநீர் உள்ளகம் ததும்ப
வாக்கிறந் தமுதம் மயிர்க்கால் தோறும்
தேக்கிடச் செய்தனன்! கொடியேன் ஊன்தழை
குரம்பை தோறும் நாயுடல் அகத்தே
குரம்பைகொண் டின்தேன் பாய்த்தி, நிரம்பிய
அற்புதமான அமுத தாரைகள்
எற்புத் துளைதொறும் ஏற்றினன்! உருகுவது
உள்ளம் கொண்டுஓர் உருச்செய்தாங்கு, எனக்கு
அள்ளூறு ஆக்கை அமைத்தனன்! ஒள்ளிய
கன்னற் கனிதேர் களிறெனக் கடைமுறை
என்னையும் இருப்ப தாக்கினன்! என்னிற்
கருணை வான்தேன் கலக்க
அருளொடு பராஅமுது ஆக்கினன்!
பிரமன்மால் அறியாப் பெற்றி யோனே!''

—திருவண்டப் பகுதி

(7) "For instance take our ears. They cannot hear ultra-sonic waves of sound, but yogis do hear them. Ordinary human eyes can see only 70 octaves of radiation waves. But yogis can see immensely more of them and some have X-ray like vision also. Dr. Osty records that prof. Bert Reese was engaged by Rockfeller for his clairvoyant faculty of discovering oil deposits.''

—*Prof. V.M. Bhat,*
Yogic Powers and God Realisation, p56

இத்தகைய அருளனுபவநலத்தினை அருட்டிரு இராமகிருஷ்ணர்பால் சுவாமி விவேகானந்தர் அவர்கள் பெற்றார். அரவிந்தர் முதலிய சமீப காலத்துச் சான்றோர்கள் பெற்ற செய்தியும், அவர்தம் நூல்களாற் புலனாகின்றது. கலி போர்னியா ஆசிரமத்தைச் சேர்ந்த அருட்டிரு யோகாநந்தர் என்பவர் தாம்பெற்ற ஓர் அனுபவத்தைப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

''என்னுடைய அருட்குரு என்மார்பில் இருதயத்திற்கு மேலே மெல்லெனச் சிறிது தட்டினார். என் உடம்பு அசைவற்று நின்று விட்டது. மூச்சு முழுவதும் வெளியே இழுக்கப் பெற்றது. என் உயிரும் உள்ளமும் சடத்துவ பந்தத்தினை விட்டு நீங்கி நின்றன. கடல் போன்ற இன்பம். எல்லையில்லாத இன்ப வடிவினனாகிய கடவுளை யான் உணர்ந்தேன். அவர்தம் உடல் பேரொளிமயமாக விளங்கியது. பேரின்பமயமான அமிர்தம் என் உடலிற் பாதரசம் போலப் பாய்ந்தோடியது. இத்தகையதோர் எல்லையற்ற இன்பத்தினை, யான் அனுபவித்துணருமாறு செய்த என் குருநாதரின் திருவடிகளில் யான் நன்றியுணர்வோடு விழுந்து வணங்கினேன்.'' (8)

இங்ஙனமே பல அருளநுபவ நிகழ்ச்சிகளைப் பற்றிப் பேராசிரியர் ஃப்ராய்ட் என்பவரும் (The Religious Consciousness), பேராசிரியர் வில்லியம் ஜேம்சு (The Varieties of Religious Experience) என்பவரும், தத்தம் நூல்களில் பல செய்திகளை விளக்கியிருத்தலால், இவற்றினையெல்லாம் விடப் பலமடங்கு சிறந்துயர்ந்த மாணிக்கவாசகரின் அருளனுபவத் திறம், எத்தகையதாக இருந்திருக்கும் என நாம் ஓரளவு கருதியுணர்தல்கூடும்.

## ''சாமாறே விரைகின்றேன்''....

மனிதனின் வாழ்க்கைப் பாதை இருவேறு திசைகளிற் பிரிகின்றது. ஒன்று வாழும் வழி, மற்றொன்று சாகும் வழி. முன்னையதை 'ஆமாறு' என்றும், பின்னையதைச் 'சாமாறு' என்றும் கூறலாம். நாம் வாழும் வழியிற் சென்று உய்ய முயலாமல், சாகும் வழியிலேயே விரைவாக ஓடிக்கொண்டிருக்கின்றோம். நம்முடைய இவ்விழி நிலையை, மாணிக்கவாசகர் தம்மீது ஏறட்டுக்கொண்டு இரங்கி வருந்திப் பாடுகின்றார்.

''ஆமாறுன் திருவடிக்கே
அகங்குழையேன், அன்புருகேன்...
சாமாறே விரைகின்றேனே
சதுராலே சார்வானே''

''சாமாறே விரைகின்றேன்'' என மாணிக்கவாசகர் தம்மைச் சுட்டிச் சொல்லிக் கொள்ளுவது, இந்நாளைய அறிவியற் கலைக்கும் பொருந்துவதாக இருக்கின்றது. இன்று ஆக்க வேலையைவிட விஞ்ஞானம் அழிவு வேலையிலேயே பெரிதும் முன்னேறிச் சென்று கொண்டிருக்கின்றது.

''இன்று ஏற்பட்டுள்ள விஞ்ஞானஆராய்ச்சி வளர்ச்சிகளின் பயனாக, ஒரு சிறு குமிழியை அழுத்துவதன்மூலமே, உலகில் மூன்றில்இரண்டு பகுதியை எளிதாக ஒரு கணத்தில் அழித்துவிட முடியும்'' என்று, பேராசிரியர் அட்ரியன் என்பவர் கூறுகிறார். (9)

''நாம் மிகப்பல அறிவியல் அறிஞர்களையும், ஆனால் ஒருசில சமயச் சான்றோர்களையுமே பெற்றிருக்கின்றோம். அணுவின் மறைபொருள் நுட்பங்களை அறிந்துகொண்டுவிட்ட நாம், மலைச் சொற்பொழிவினைப் புறக்கணித்துவிட்டோம். இன்றைய உலகில் அணுவரக்கன் ஓங்கி வளர்ந்துவிட்டான்; அறநெறியுணர்வோ குழந்தைமை நிலையிலேயே குறுகிக் கிடக்கின்றது. அமைதியைவிடப் போரைப் பற்றியும், வாழ்வதைவிடக் கொல்லுதலைப் பற்றியுமே நாம் மிகுதியாகத் தெரிந்திருக்கின்றோம்''. (10)

''சாமாறே விரைகின்றேன்'' என்னும் திருவாசகத் தொடர், ஒருவகையில் இந்நாளைய அறிவியற் கலையின் நிலையை உணர்த்துவதாக இருக்கின்றது எனலாம்.

---

(8) "My Guru, Shri Yuktheshwar, struck gently on my chest above the heart. My body became immovably rooted, breath was drawn out of my lungs as if by some magnet. Soul and mind lost their physical bondage, and streamed like a fluid piercing head.. Identity was not confined to the body. An oceanic joy. The spirit of God, I realised, is exhaustless bliss. His body is countless tissues of light. The entire Cosmos gently luminous glimmered within the infinitude of my being. Blissful Amrit (nectar) pulsed through me with a quick silverlike fluidity. My guru was standing before me. I started to drop at his feet in gratitude for the experience in cosmic consciousness, which I had long passionately sought."

—*Yogananda of California*,
An Autobiography of a Yogi, p.128

(9) "Professor Adrian, President of the Royal society of England, in his inaugural address on 'Science and Human Nature' at the 116th annual meeting of the British Association of Science, said that the control achieved over the forces of nature was so complete that we might soon become able to destroy two thirds of the world by pressing a button."

—Quoted by *Dr. S. Radhakrishnan*,
Recovery of Faith

(10) "We have too many men of Science, but very few men of God. We have grasped the mystery of atom and rejected the Sermon on the Mount. Ours is a world of nuclear giants and ethical infants. We know more about killing than we know about living".

—*General Omar N.Bradley*

## அறிவியலும்—இறையுணர்வும்

இஃதெங்ஙன மிருப்பினும், அறிவியலறிஞர்களின் சூழலிலும், இந்நாளிற் பலர் கடவுட் பற்றும் சமயஉணர்வும் உடையவர்களாகப் பெருகி வருகின்றனர். விஞ்ஞானத் துறையில் மாபெரும் மேதையாக விளங்கிய பேரறிஞர் ஆல்பர்ட் ஐன்ஸ்டைன், ''அறிவியல் இல்லாத சமயம் குருட்டுத் தன்மை வாய்ந்தது, சமயம் இல்லாத அறிவியல் முடத்தன்மையுள்ளது'' (''Religion without science is blind, Science without religion is lame'')

எனக் கூறுகின்றார். டாக்டர் அலெக்ஸிஸ் காரெல், 'மனிதன்பிற எல்லாப் பொருள்களையும் ஆராய்ந்து கண்டறிந் திருக்கின்றானாயினும், தன்னைத்தான் அறிந்து கொள்ள முயலாமையாற் பெரிதும் இடர்ப்படுகின்றான். அவன் தன்னைத்தானே அறிந்துகொண்டு உய்ய முயலுதல் இன்றியமையாதது'' (Dr. Alexis Carrel, **''Man the Unknown''**) என்கிறார்.

சர்.ஆலிவர் லாட்ஜ் போன்ற பேரறிஞர்கள், மறுமை வாழ்வில் நம்பிக்கை கொண்டு பல நூல்கள் எழுதி வருகின்றனர். சர் ஆர்தர் எட்டிங்டன், ஆல்டஸ் அக்ஸ்லி, ஜே.பி.எஸ். ஆல்டேன், பெர்ட்ரண்ட் ரஸ்ஸல், பால்பிரண்ட்டன், சர்வில்லியம் க்ருக்ஸ், டாக்டர் மக்டூகல், சர் சி.வி.ராமன், சர்.ஜே.சி.போஸ், சர் பி.சி. ரே, டாக்டர் கே.எஸ்.கிருஷ்ணன் போன்ற அறிவியற் பேரறிஞர்கள் பற்பலரும், சமயவுணர்வும், கடவுட் பற்றும் உடையவர்களே யாவர் என்பது, நாம் கருதுதற்குரியது.

## மனநோய்க்கு மருந்து !

உலகப் புகழ்பெற்றவரும், உளநூற்றுறைப் பேரறிஞரும் ஆகிய பேராசிரியர் கார்ல் யுங் என்பவர், பின்வருமாறு கூறியிருக்கின்றார். ''கடந்த முப்பது ஆண்டுகளாக உலக நாகரிக நாடுகள் அனைத்திலும் உள்ள மக்கள் பலரும் என்பாற் கலந்து ஆய்வுரை கேட்டுள்ளனர். என்னுடைய பிணியாளர்கள் அனைவருள்ளும், வாழ்க்கையில் இரண்டாம் பகுதியில் - அதாவது முப்பத்தைந்து வயதுக்குமேல்-தம் இன்னல்கள் தீருவதற்கு உரிய கடைசி வழியாகத் தம் வாழ்க்கையிற் சமயவுணர்வு(தெய்வநம்பிக்கை) கைவரப் பெறுதலைக் கொள்ளாதவர்கள் ஒருவராவது இல்லை. அவர்களில் ஒவ்வொருவரும் நோயுற்றதற்குக் காரணம், உயிர்ப்புடைய ஒவ்வொரு மதமும் அவ்வக் காலத்தில் தன்னைப் பின்பற்றும் மக்களுக்குத் தருகின்ற மனநிறைவுணர்ச்சியை, அவர்கள் பெறாமல் இழந்துவிட்டமையே யாகும். அவர்களில் ஒருவராவது மீண்டும் சமயவுணர்வு (தெய்வநம்பிக்கை) கைவரப்பெறாமல், உண்மையிற் பிணி தீரப் பெற்றிலர்'' (11) என்று, அவர் கூறுகின்றார். எனவே சமயவுணர்வும் கடவுள் நம்பிக்கையுமே நம் மனநோய்கள் தீர்வதற்குச் சரியான மருந்து எனலாம். மனக்கவலைகள் தீரத் தனக்குவமையில்லாத இறைவனின் தாள்களை அடைந்தேயாதல் வேண்டும்.

## முடிவுரை :

எனவே, திருவாசகம் அறிவியலுக்குச் சிறிதும் முரண்பட்டதன்று; திருவாசகத்திலும் பல சிறந்த அறிவியற் கருத்துக்கள் உண்டு என நாம் துணிந்து கூறலாம். துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள், வடலூர் இராமலிங்க அடிகள், டாக்டர் திரு. ஜி.யூ.போப் போன்ற மாபெருஞ் சான்றோர்கள் அனைவரும், போற்றிப்புகழ்ந்து ஓதியுய்ந்த திருவாசகத் திருமறையினை, நாமும் அன்புடன் போற்றி ஓதி உய்ய முற்படுவோமாக !

---

(11) "During the past thirty years, people from all the civilized countries of the earth, have consulted me. Among tall my patients in the second half of life — —that is to say, over thirty-five years — there has not been one whose problem in the last resort was not that of finding a religious outlook on life. It is safe to say that every one them fell ill, because he had lost that which the living religions of every age, have given to their followers, and none of them has been really healed who did not regain his religious outlook".

—*Prof Carl Jung,*
Quoted in 'Impact of Science'
by Dr. Bertrand Russel.

---

## சிறந்த இலக்கியம் !


நூறுமுறை படித்தாலும் தெவிட்டாமல், நுணுகித்தோய்ந்து,
ஊறிமிக மேன்மேலும் ஓதுதற்குப், பெருவிருப்பம்
ஆறுபோற் பெருகுறப்,பல் ஆயிரங்கால் படித்திடச்செய்
வீறுயர்நூல் எது?அதுதான் இலக்கியமாய் விளங்குகிற்கும் !

—தமிழாக்கம் :
**ந. ரா. முருகவேள்.**


*'' Read it a hundred times; it will never become a surfeit;*
*it would make you desire to read it over and over again,*
*thousands of times; that is what is a classic''.* —*ROBERT FROST.*



திருவேற்காடு அருள்மிகு தேவிகருமாரியம்மன் திருக்கோயிலில் 'பெருந்திரள் திருமணம்' நடைபெற்ற பொழுது, அறநிலைய ஆணையர் திரு. யு. சுப்பிரமணியன், ஐ.ஏ.எஸ்., அவர்கள் கலந்து கொண்டு உரைநிகழ்த்துதல்.



பதிவு எண். எம் 7039




திருவேற்காடு அருள்மிகு தேவிகருமாரியம்மன் திருக்கோயிலில் நடைபெற்ற 'பெருந்திரள் திருமணம்' நிகழ்ந்த பொழுது, அறநிலைய அமைச்சர் மாண்புமிகு இராம. வீரப்பன் அவர்கள் உரையாற்றுதல்.

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை, சென்னை-600 034.
ஆசிரியர் : ந. ரா. முருகவேள், எம்.ஏ.,எம்.ஓ.,எல்.
அச்சிடுவோர் : தமிழரசு அச்சகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.